

ஆசிரியர் உரை

# மீட்புக்கு மீட்பர் தேவை

## *Redemption Reqvires a Redeemer*

### *Louis Rushmore*

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன் [யோபு 19:25].

ஒரு காலகட்டத்தில் செல்வச் செழிப்பாக வாழ்ந்து, பின்பு தன் ஆரோக்கியம் உட்பட எல்லாவற்றையும் இழந்து தவிக்கும் வேளையிலும் யோபு பரலோக நம்பிக்கையை மட்டும் இழந்து போகவில்லை. யோபு சந்தோஷமாக தன் நித்தியத்தை ஒப்புக்கொடுத்து, கர்த்தரிடத்தில் மிகுந்த நம்பிக்கை உடையவராக இருந்தார். மேலும், யோபு தான் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் தேவனைப் பற்றிக் கொண்டாரோ, அந்த நம்பிக்கையை பலரும் பற்றிக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.

யோபுவின் நம்பிக்கை மூன்று வகையானது:

- **தன் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்பதில் அபார நம்பிக்கை**
- **தன் மீட்பர் ஒரு நாள் தன்னுடைய ஆத்துமாவையும் மற்றவர்களுடைய ஆத்துமாக்களையும் மீட்கும்படி வருவார் என்பதில் நம்பிக்கை**
- **பொதுவான உயிர்த்தெழுதல் இருக்குமென்றும் அதில், தனக்கும் பங்கு உண்டு என்பதில் நம்பிக்கை**

இவ்விதமான ஆழ்ந்த சிந்தனைகள் கடுமையான உபத்திர வங்களில் இருந்த அவரை உற்சாகப்படுத்தியது மாத்திரமல்லாமல், அவருடைய நம்பிக்கையின் ஆதாரமாகவும் திகழ்ந்தது. இன்றைய நாட்களில் மிகுந்த உபத்திரவத்தில் உழன்று கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகள் இதே நம்பிக்கை

மூலமாக ஆறுதல் அடையமுடியும். நிச்சியமாகவே, நம்மில் பலர் லேசான உபத்திரவங்களை எதிர்கொள்ளத் தேவையான பெலனை, யோபு கொண்டிருந்த அதே நம்பிக்கையை உடையவர்களாக இருந்தால் நாமும் பெற்றுக் கொள்ள முடியும்.

யோபு பேசின அந்த மீட்பர் கிறிஸ்து தான் [அதாவது, இரட்சகர், [கிறிஸ்து, மேசியா]. அவருடைய ஊழியத்தைப் பற்றியும், செயல்பாடுகளைப் பற்றியும் முதன் முதலில் ஆதியாகமம் 3:15-ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், நம் மீட்பர் உயிரோடிருப்பது தான் நம் எல்லோருடைய நம்பிக்கையின் ஆதாரமாக இருக்கிறது. சிலர் சொல்வது போல், நம் தேவன் உயிரற்ற தேவனாக இருந்திருந்தால், நமக்கு எந்த நம்பிக்கையும் இருந்திருக்காது. இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுவதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, யோபுப்க்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மீதிருந்த நம்பிக்கை நமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது.

விக்கிரக ஆராதனைக்காரர்கள் கல், மண், மரம் மற்றும் உலோகத்தினால் செய்யப்பட்ட தெய்வங்களை வழிபடுகிறார்கள். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஜீவனுள்ள இரட்சகரும், நம் மாபெரும் தீர்க்கதரிசியுமாகிய இயேசு கிறிஸ்து என்றென்றும் ஜீவித்துக்கொண்டிருக்கிறார். ஆனாலும், யூதர்கள் கிறிஸ்துவை நிராகரித்தபடியால் அவர்களுக்கு இரட்சகரும், மீட்பரும் இல்லை. கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே ஜீவனுள்ள இரட்சகர் இருக்கிறார். அவர் பரலோகத்திலுள்ள பரமப்பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் [அப்போஸ்தலர் 1:9,10; 7:55, 56].

நம் மேசியாவாகிய கிறிஸ்து நீதிமான்களை மீட்கும்படியாக மறுபடியும் வருவார். யோபுவின் நாட்களில் நம் ஆண்டவருடைய வருகை எதிர்காலத்தில் நிகழப்போகும் ஒரு நிகழ்வாகத் தான் இருந்தது. அதை அவர் [யோபு 19:25] குறிப்பிட்டிருக்கிறார். இருந்த போதிலும், நம் இரட்சகர் இப்பூமிக்குத் திரும்பும்போது, பூமியின் மீது நிற்கப்போவதில்லை [சகரியா 6:1213].

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தான் **பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு**. தேவனுடைய பிள்ளைகளின் நம்பிக்கையாயிருக்கிறது; நம்முடைய நித்தியம் அதைச்

சார்ந்துதான் இருக்கிறது. நம் இரட்சகரின் இரண்டாம் வருகை கிறிஸ்தவர்களின் பிரதான நம்பிக்கையாயிருக்கிறது [Iகொரிந்தியர் 15;1தெசலோனிக் கேயர் 4:13-18]. அதேநேரத்தில், தேவபக்தியற்றவர்களுக்கு அது பயங்கரமானதாயிருக்கும். [IIதெச, 1:7-9].

இப்பூமியில் பொதுவான உயிர்த்தெழுதல் எல்லோருக்கும் உண்டு [யோவான் 5:25,29]. யோபு சரீர உயிர்த்தெழுதலில் நம்பிக்கை உடையவராக இருந்தார் [19:26]. இது சுவிசேஷ சத்தியத்தின் போதனையாயிருக்கிறது. [Iகொரி. 15:49-54; பிலிப்பியர் 8:21; Iயோவான் 3:2:3].நித்தியத்திற்கான நம் நம்பிக்கை நம் உயிர்த்தெழுதலையே சார்ந்திருக்கிறது. நாமெல்லாரும் உயிர்த்தெழுவோமென்று அறிந்திருக்கிறோம். ஏனென்றால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்முடைய உயிர்த்தெலுதலுக்கு உத்திரவாதம் அளிக்கிறது. உயிர்த்தெழுதல் இல்லையென்றால் நாமெல்லாரும் நம்பிக்கையற்றவர்களாகத்தான் இருந்திருப்போம். [Iகொரி. 15:19]. நமக்கு யோபுவோடும், எல்லாக்காலத்திலும் வாழ்ந்த தேவனுடைய ஜனங்களோடும் ஒரு பொதுவான நம்பிக்கை உண்டு.

★ **நம் மீட்பர் உயிரோடிருக்கிறார்.**

★ **நம் மீட்பர் நமக்காக வருவார்.**

★ **நம் மீட்பர் நம்மை உயிரோடு எழுப்புவார்.**

யோபு தன்னுடைய நம்பிக்கைகள் ஒரு புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டுமென்றும், கல்வெட்டில் பொறிக்கப்பட வேண்டுமென்றும் விரும்புகிறார். அதன் மூலம் மற்றவர்களும், தான் கொண்டிருந்த நம்பிக்கையையும் அதே விதமான ஆறுதலையும், பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே அவருடைய ஆவல். அவருடைய வார்த்தைகள் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது நாம்மெல்லாருக்கும் எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது.

தற்கால மனிதன் என் **மீட்பர் உயிரோடிருக்கையிலே** என்கிற பாடலைப் பாடும் போது எவ்வளவு ஆறுதலை அடைகிறான்! நாம் சுவிசேஷத்தில் நிலைத்திருக்கும் போது தேவன் நம் ஒவ்வொருவருக் குள்ளும் வாசம் செய்வார். ✝



## நிர்வாக ஆசிரியர் உரை

# நாங்களோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்

## *But We Preach Christ Crucified*

E.Z.S. Rajanayagam

**கொ**ரிந்து சபையாருக்குப் பவுலடியார் ஆவியின் ஏவுதலால் இரண்டு நிருபங்களை, இரண்டு வித்தியாசமான காரணங்களுக்காக எழுதினார். அவற்றுள், முதல் நிருபத்திற்கென்று இரண்டு நோக்கங்கள் அவருக்கு இருந்ததாக நாம் கூற முடியும். 1. கொரிந்து சபையாரை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு கூறுதல் 2. ஒழுக்கச் சீரழிவு நிறைந்த சமுதாயத்தின் மத்தியில் விசுவாசிகள் தங்களைக் காத்துக்கொள்ள உதவுதல். இந்நிருபத்தை பவுலடியார், தன்னுடைய மூன்றாம் நற்செய்திப் பயணத்தின் போது, எபேசுவில் தங்கியிருந்த காலத்தின் [அப்.19,9,10] இறுதி நாட்களில் எழுதியுள்ளார்.

இப்படி,கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபத்தின் முதல் அதிகாரத்தை இரண்டு பகுதிகளாக நாம் பிரிக்கலாம். அதில், இரண்டாம் பகுதி **கிறிஸ்துவின் சிலுவை பற்றியும், அந்தச் சிலுவைக்கான வித்தியாசப்பட்ட பார்வை** பற்றியும் பேசுகிறது [91:18-31]. இப்பகுதியினூடே வருவது தான் நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் வசனப்பகுதி. இவ்வசனத்தில் பவுலடியார், தானும் தன்னோடிருப்பவர்களும் சிலுவைக்காகக் கொண்டிருக்கும் பார்வைக்கும், மற்றவர்களுடைய பார்வைக்கும் வேறுபாடு உள்ள தென்பதைத் தான் **நாங்களோ** என்ற வார்த்தையின் மூலம் பளிச்சென வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, சிலுவைக்கான தங்களுடைய பார்வையைப் பிறருடைய பார்வையோடு ஒப்பிட்டுப் பேசியுள்ளார். அப்படியானால், யாரோடு இப்படி ஒப்பிட்டுப் பேசியுள்ளார்?

அவர்கள் வேறு யாருமல்ல, அவருடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவத்தின் எதிரிகளான யூதர்களும், அறிவுப் பித்தர்களான கிரேக்கர்களும் தான். இந்த யூதர்கள் மோசேயின் பிரமாணத்தின் படியான பக்தி வாழ்க்கையை நடத்தியவர்கள். ஆனால், மோசேயின் பிரமாணப் போதனைகளுக்கு முழுமையாகச் செவிகொடுக்காமல், எதற்கெடுத்தாலும் அடையாளம் கேட்டு நச்சரித்தவர்கள் [மத்.12:38; 16:1; மாற்கு 8:11,2; 4:48]. கிரேக்கர்களோ தத்துவார்த்த ரீதியிலான

உலக ஞானத்தில் பைத்தியங்கொண்டு அலைந்தவர்கள். ஆனால், யூதர்களின் பக்தியோ, கிரேக்கர்களின் ஞானமோ கிறிஸ்துவின் சிலுவை பற்றிய சிறப்பையும், அதின் மேன்மையையும், அது தரும் நன்மைகளையும் உணர்ந்து கொள்ளுவதற்கும், அறிந்து கொள்வதற்கும் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. அப்படியானால், இவர்கள் கொண்டிருந்த பக்தியினாலும், பெற்றிருந்த அறிவினாலும் என்ன பயன்? ஒருவனுடைய பக்தியும், அறிவும் அவனுக்குச் சிலுவையின் மேன்மையை உணர்த்தி, பரலோகத்திற்கான பாதையைக் காட்டாவிட்டால், அவைகளை நேரிடையாகக் குப்பைத் தொட்டிக்கு அனுப்புவது தான் நல்லது. இதில் யாருக்கும் எவ்விதத் தயக்கமும் தேவையில்லை.

இங்கே, தான் தேவனுக்குப் பிரியமாயிருப்பதற்கு தேவையானது எது என்பதை மெத்தப் படித்த பவுலடியார் நன்றாகவே அறிந்திருந்தார். ஆகவே தான், அதே முதலாம் நிருபத்தின் இரண்டாம் அதிகரத்தில் இப்படியாக எழுதியுள்ளார். ... **இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருக்கிறேன்** [Iகொரி 2:2] என்று. ஏனெனில், மனுக்குலத்தின் அவசரத் தேவையாக கிறிஸ்துவின் சிலுவைதான் உள்ளது. அன்றைக்கும் இதுதான் தேவை, இன்றைக்கும் இது தான் தேவை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பரியந்தமும் இதுதான் தேவை.

ஆனால், நாம் வாழும் இந்நாட்களில் கிறிஸ்துவின் சிலுவைக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது? சிலுவை யிலறையப்பட்ட கிறிஸ்து தான் எல்லாப் பிரசங்கிகளாலும், எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் பிரசங்கிக்கப்படுகிறாரா? சொல்லுங்கள். கிறிஸ்துவின் சிலுவையை இன்றைய கிறிஸ்தவம் **முறை** வைத்தல்லவா பிரசங்கிக்கிறது. அதாவது, வருடத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் கிறிஸ்துவின் சிலுவை நினைக்கப்பட வேண்டும் மற்ற சமயங்களில் அது நினைப்பதற்கும், பேசப்படு வதற்கும் லாயக்கற்றது என்பது போல. அதனால் தானே, வருடத்தின் சில மாதங்களில் **பெத்லகேமில் பிறந்த இயேசு** பற்றிய சத்தம் கேட்கும். பிற மாதங்களில் **அற்புதங்களைச் செய்த இயேசு மற்றும் ஆசீர்வாதங்களை வாரி வழங்கும் இயேசு பற்றிய வர்ணணை வலம் வரும்**. பிறகு, நாசரேத்தில் வளர்ந்த இயேசுவும், நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்து, அற்புதங்கள் செய்த இயேசுவும் லாவகமாக ஒதுக்கப்பட்டு, கொல்கொதா மலையை நோக்கி ஓட்டம் நடக்கும். இது தானே நடந்து கொண்டிருக்கிறது!

அருமையானவகளே, எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த, வாழ்கின்ற மனுக்குலத்துக்கான அவசிய, அவசரத் தேவை பாவத்தினால் தேவனிடம் இருந்து பிரிந்துபோன மனிதன் மீண்டும்

தேவனிடம் சேர்வதே. அப்படிச் சேர்க்கப்படுவதற்கு அவனுக்குத் தேவை. பாவ மன்னிப்பு – இரட்சிப்பு. இந்த இரட்சிப்புக்கு ஒருவனை வழிநடத்தம் வல்லமை கிறிஸ்துவின் சிலுவைக்கும், சிலுவையின் உபதேசத்துக்கு மட்டுமே உண்டு. இயேசுவின் பிறப்பு ஒருவனை இரட்சிப்புக்கு வழி நடத்துவதை விட, இயேசுவின் சிலுவை ஒருவனை சிறப்பாக வழி நடத்தும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இரட்சிப்பை சுவிசேஷம் அருளுகிறபடியால் தான், கிறிஸ்துவின் நற்செய்தியை இரட்சிப்பின் சுவிசேஷம் என்கிறோம் [எபேசியர்.1:13].

சரி, இப்படி ஆவியானவர் பார்வையிலும், அப்போஸ்தலர்கள் பார்வையிலும் முக்கிய இடம் பெற்று, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மனுக்குலத்துக்குத் தொடர்ந்து இரட்சிப்பை நல்கி வரும் கிறிஸ்துவின் சிலுவை நமக்கு எடுத்துச் சொல்லும் வேறு சில பாடங்கள் என்ன என்று பார்ப்போம்.

**1.கிறிஸ்துவின் சிலுவையும், தேவ ஞானமும்**

கிறிஸ்துவின் சிலுவை நமக்குக் கற்றுக்கொடுக்கும் அநேக பாடங்களுள் முதல் பாடம், பரலோக தேவனுடைய ஞானம் பற்றியது.

சர்வ வல்ல தேவனுடைய ஞானம் பற்றி முழுமையாக எடுத்துக் கூற எந்த ஒரு மனிதனும் தகுதியானவனல்ல என்பது சர்ச்சைக்கிட மற்ற தீர்மானமான கருத்து. ஒருவேளை, உண்மை நிலை இப்படியாக இருந்தாலும், ஆவியானவர் தேவ ஞானம் பற்றி நாம் கொஞ்சமாகிலும் விளங்கிக் கொள்ளும்படியான சில கருத்துக்களை வேதாகமத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தியுள்ளார். யோபு புத்தகத்தில்அவர் பூரண ஞானமுள்ளவர் என்று தெரிந்துகொள்ள முடியும் [யோபு37:16]. ஏசாயா தீர்க்கனை கொண்டு ஆவியானவர், **பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது?** [ஏசாயா40:28] என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இப்படிப் பூரணமும், ஆராய்ந்து முடியாததுமான தேவ ஞானத்தை வெளிப்படுத்தும் வழிகளில் ஒன்றாக கிறிஸ்துவின் சிலுவை உள்ளது. எப்படியெனில், 1கொரி. 2:20-ல் **இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்** என்று சொல்லும் பவுலடியார் தொடர்ந்து கூறும்போது, **அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலக தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய**

**மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம்** என்று கூறுகிறார் [1கொரி.2:2-7]. இப்பகுதியானது தேவ ஞானத்திற்கும் கிறிஸ்துவின் சிலுவைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குமான பந்தத்தை நமக்கு எடுத்து விளக்குகிறது.

ஆக, தேவ ஞானம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் சிலுவை யையும், கிறிஸ்து கட்டின சபையையும் நாம் அற்பமாக எண்ணாமல், சிலுவையின் உபதேசத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, சிலுவையின் சபையாகிய கிறிஸ்துவின் சபையில் நாம் அங்கமாக மாறுவோம்.

**II கிறிஸ்துவின் சிலுவையும், தேவ வல்லமையும்**

கிறிஸ்துவின் சிலுவையிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், பரலோக தேவனுடைய வல்லமை பற்றியது.

தேவனுடைய வல்லமை இந்த இடத்திலே தான் இருக்கிறதென்று நாம் சொல்ல முடியாதபடி, அது விண்ணிலும், மண்ணிலும் நீக்கமற நிறைதிருக்கிறது. இந்த உண்மையைத்தான் தாவீது தனது சங்கீதங்களுள் ஒன்றில், **வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது** [சங்.19:1] என்று எழுதி அவருடைய வல்லமையைப் பிரபலப்படுத்துகிறார். எரேமியா தீர்க்கன் இன்னும் சிறப்பாக, **அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்** [எரே. 51:15] என்று கூறியுள்ளார். ஆம், தேவனுடைய வல்லமையை நாம் ஏதேன் தோட்டம் தொடங்கி, கிறிஸ்துவின் பிறப்பு [லுக்1:35], கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் [IIகொரி. 13:4], சபை ஸ்தாபிதம் [அப்.2]. வருகை பற்றிய விவரிப்பு [1தெச. 4:15-17] என்று எங்கும் காணலாம். அதைவிட, பரலோக மகிமை பற்றிய வர்ணனை தேவ வல்லமைக்கு எல்லையே இல்லை என்பதை நமக்கு உணர்த்துகிறது. இப்படிப்பட்ட தேவ வல்லமை கிறிஸ்துவின் சிலுவையிலும் நமக்குத் தெரியாமலில்லை.

அருமையானவர்களே, தேவனுடைய வல்லமையினாலே சிலுவையின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிற சுவிசேஷத்தை நாம் நம்முடைய வாழ்க்கையில் எந்த இடத்தில் வைத்துள்ளோம்? சிலுவையின் சுவிசேஷம் போதிக்கும் இரட்சிப்பை [1கொரி. 1:18] நாம் நம்முடைய வாழ்க்கையில் பெற்றுவிட்டோமா? சிந்திப்போம். சிலுவையின் சுவிசேஷம் தரும் இரட்சிப்பை புதிய ஏற்பாடு சொல்லும் உபதேசத்தின் படி நாம் பெறாமல், சிலுவைக்கு என்ன தான் முக்கியத் துவம் கொடுத்து அதைக் கையிலும், கழுத்திலும், சுவற்றிலும் தொடங்கவிட்டுக் கொண்டு **முறை** வைத்துப் பாடிப் பிரசங்கித்தாலும் நாம் சிலுவைக்குப் பகைஞராகவே தேவனால் பார்க்கப்படுவோம் [பிலி.3:18] என்பதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

## III கிறிஸ்துவின் சிலுவையும், இரத்தத்தின் வல்லமையும்

கிறிஸ்துவின் சிலுவையிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தின் வல்லமை பற்றியது.

விஞ்ஞானத்தின் அளப்பரிய சாதனைகள் விண்ணை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் இந்தக் காலத்திலும் ஓர் உண்மையை நாம் ஓங்கி அடித்துச் சொல்லமுடியும். அது, இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்திற்கு நிகரான வல்லமை வேறு எதற்கும் இல்லை என்று. ஆம், பரிசுத்த ஆவியானவர், இப்பேருண்மையை யோவான் அப்போஸ் தலனுக்கு அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளார். .... **அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்** வல்லமை கொண்டது என்று [1யோவான் 1:7]. கிறிஸ்துவின் இரத்தத்திற்கான இந்த வல்லமை வேறு எதற்கு உண்டு? அப்படி வேறு எதற்காகிலும் இருந்திருக்குமானால், பிதாவாகிய தேவன் தமது ஒரே பேறான குமாரனை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்திருக்க வேண்டிய அவசியமே இல்லையே! அப்படித்தானே.

ஆம், பாவத்தின் பயங்கரத்தினாலே தேவனிடமிருந்து பிரிந்து போன [ஏசாயா59:1,2] மனிதனைப் பாவத்திலிருந்து கழுவி, மறுபடியும் தேவனோடு ஒப்புரவாக்கும் செயலைச் செய்யும் வல்லமை கிறிஸ்துவின் இரத்தத்திற்கு மாத்திரமே உண்டு. அந்த இரத்தமானது, வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத வலி, வேதனைகளுக்கு மத்தியில் சிலுவையில் சிந்தப்பட்டது. இப்படி சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தம் தான் மனிதனுக்கு, தேவனோடிருந்த பகையைக் கொன்று [எபே.2:16] அவனுக்குச் சமாதானத்தைப் பெற்றுத்தந்தது. அப்படியானால், அன்பானவர்களே, நாம் ஒவ்வொருவரும் தேவனோடு சமாதானமாகி விட்டோமோ? இயேசுவானவர்பாடுகளையும், அவமானத்தையும் சகித்துக்கொண்டு சிலுவையில் இரத்தம் சிந்தினதற்கான நோக்கம் நாம் தேவனோடு சமாதானமாக வேண்டுமென்பது தான். மற்றபடி, வருடத்தின் சில மாதங்களில் நாம் அவரை நினைத்து, அவருடைய பாடுகளைப் பெரிதாகப் பேச வேண்டுமென்பதற்காக அல்ல.

ஆகையால், அருமையானவர்களே, இங்கே கிறிஸ்துவின் சிலுவை நமக்குக் கற்றுக் கொடுக்கும் இந்தப் பாடங்களை நாம் அப்படியே மனதில் ஏற்று, வருடத்தின் ஒரு சீசனுக்கு மாத்திரம் சிலுவைக் கிறிஸ்துவை நினைத்துக் கொண்டிராமல், கிறிஸ்துவுக்கும், அவருடைய சிலுவை போதனைகளுக்கும் உண்மையுள்ளவர்களாக நடந்து, கிறிஸ்து கட்டின ஒன்றான மெய் சபையில் அங்கமாகி, பரலோக பாக்கியத்தை உறுதி செய்து கொள்வோம். ஆமென்! ✝

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| மீட்புக்கு மீட்பர் தேவை | Louis Rushmore | ... 1 |
| நாங்களோ சிலுவையிலறையப்பட்ட ... | E.Z.S. Rajanayagam | ... 4 |
| பொறுமையோடு ஓடுவோம் | Jerry Bates | ... 11 |
| மண்பாண்டங்கள் | Byron Nichols | ... 15 |
| வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங் ... | J.C.Choate | ... 18 |
| வாழ்க்கையின் மதிப்புகளை ... | P.C. Philemon Rajah | ... 22 |
| கர்த்தருடைய ஊழியக்காரன் ... | B. Arjunan | ... 26 |
| என்னுடைய திட்டமா தேவ சித்தமா? | E.Z.Selvanayagam | ... 30 |
| விதையும், இதயமும் | Benny Martin | ... 33 |

## தேவன் – God

| | | |
|---|---|---|
| கர்த்தருடைய தூதனானவர் | Dave Hart | ... 37 |
| நன்றியுணர்வு | | ... 44 |

## இரட்சிப்பு – Salvation

| | | |
|---|---|---|
| ஐசுவரியவான் எதைக் கண்டான் | David R. Pharr | ... 45 |
| பரிசுத்தவான்களின் விடாமுயற்சி | Tim.D. Shoemaker | ... 48 |
| ஒருவர் கிறிஸ்தவராக கிறிஸ்துவுக்குள் ... | Sunny David | ... 51 |

## சபை – The Church

| | | |
|---|---|---|
| உறவுகள் | Clarence DeLoach, Jr | ... 54 |
| மூப்பர்களின் தகுதிகள் | Wayne Barrier | ... 56 |
| எழுந்து கட்டுவோம் வாருங்கள் | Gary C. Hampton | ... 58 |
| உள்ளூர் சபையைக் காயப்படுத்தும் ஐந்து ... | Roger Leonard | ... 60 |
| மார்க்கப்பிரிவினைக் கொள்கை ... | Carroll sites | ... 64 |

## வாழ்வதற்கான உபதேசம் - Doctrine to Live by

| | | |
|---|---|---|
| அறிக்கையிடுவது ஆத்துமாவுக்கு ... | John Deffenbaugh | ... 66 |
| அற்புதங்களை ஒப்பிட்டுப்பாருங்கள் | Royce Frederick | ... 68 |
| தேவனுடைய கிருபை அவருடைய ... | Hollis Miller | ... 70 |

## செயலில் கிறிஸ்தவம் - Christianity in Action

| | | |
|---|---|---|
| ஒரு சீடன் என்னவாக இருக்கிறான் | Donny Weimar | ... 74 |
| வீட்டுக்கு வாருங்கள் | Darrell powell | ... 76 |
| நல்ல சமாரியன் பிரமாணம் | Donald R. Fox | ... 78 |
| சமநிலை | Dale Grissom | ...80 |
| அன்பும் அக்கறையும் | Michael Dubina | ...82 |

## ஆராதனை - Worship

| | | |
|---|---|---|
| நான் ஆராதிக்க வரும்போது | Michael L.King | ... 83 |
| பதிலி ஆராதனை | Kevin L.Moore | ... 86 |

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை - Daily Christian Living

| | | |
|---|---|---|
| ஆவிக்குரிய சவால்கள் | Hardeman Nichols | ... 88 |
| கீழ்ப்படிந்திருங்கள் | Loy Mitchell | ... 92 |
| நேர்த்தியாக முதுமையாக்குதல் | Randall Caselman | ... 94 |
| நூறு வயது வரை வாழ விரும்புகிறீர்களா? | E. Claude Gardner | ... 97 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ... 100 |

## கிறிஸ்தவ இல்லம் - The Christian Home


| | | |
|---|---|---|
| அன்பும் விவாகமும் | Dolton Key | ... 102 |

## வேதாக கதாபாத்திரம் - Bible Characters

| | | |
|---|---|---|
| யூதாஸ் - உண்மையுள்ளவன், துரோகி ... | Robert R.Taylor | ... 105 |

## வேதாக கேள்விகள் - Bible Questions

| | | |
|---|---|---|
| சிலுவைக் கள்வன் ஞானஸ்நானம் ... | Keith Parker | ... 108 |



இணை ஆசிரியர்

# பொறுமையோடு ஓடுவோம்

## *Run with endurance*

*Jerry Bates*

**கி**றிஸ்தவ வாழ்க்கையில் நாம் சோர்ந்து போகும் போதுதான் உலக சந்தோஷங்கள், சமூக அழுத்தங்கள், சரீரப்பாடுகள் நம்மை கிறிஸ்தவ வாழ்க்கையை விட்டு வெளியேறத் தூண்டுகின்றன. எத்தனை இடர்பாடுகள் இருந்தாலும், நாம் கிறிஸ்தவ ஓட்டத்தை நிறுத்திவிடக்கூடாது. ஏனென்றால், அவைகள் நாம் இதுகாறும் பட்டபாடுகளை பாழாக்கிவிடும். கிறிஸ்தவ வாழ்க்கையில் சோர்ந்து போவது என்பது புதிதான ஒன்றல்ல. ஏனென்றால், வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற மாபெரும் மனிதர்களான எலியா, எரேமியா போன்றோர் கூட சில சமயங்களில் சோர்ந்துபோயிருக்கிறார்கள். இவ்விருவரும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் சோர்வுற்று தேவனுக்கு ஊழியம் செய்வதை விட்டு விட்டு வெளியேற விரும்பியிருக்கிறார்கள்.

நாம் அப்படி சோர்ந்துபோவதைத் தடுக்க முடியுமா? ஆம் முடியும். எபிரெயர் 12:1–12 வசனங்களில் இந்நிருபத்தின் ஆசிரியர் கிறிஸ்தவ ஓட்டத்தை விட்டு வெளியேற நினைப்பவர்களை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளைப் பதிவு செய்திருக்கிறார் ( எபிரெயர் 12:1–2)
**ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம். அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று உற்சாகப்படுத்துகிறார்.**

**முதலாவது,** இந்நூலின் ஆசிரியர் சில காரியங்களைத் தள்ளி வைக்க வேண்டுமென்று சொல்கிறார். நாம் பிரதானமாக பாவத்தைத்

தள்ளி வைக்க வேண்டும். அதாவது, நம்மைச் சுற்றிலும் பாவம் மலிந்து கிடக்கிறது. ஆகவே, சில கிறிஸ்தவர்களுக்கு பாவத்தைத்தள்ளி வைப்பதென்பது கடினமான காரியமாக இருக்கிறபடியால், நம் ஓட்டத்தின் வேகத்தைக் குறைக்கிற பாரத்தை நாம் இறக்கி வைக்க வேண்டும். பாரம் என்பது தன்னில் தானே தவறான ஒன்றல்ல, ஆனால் அது நம் உண்மையான கவனத்தைச் சிதறடித்து விடுகிறது. கிறிஸ்துவிடமிருந்து நம் கவனத்தைக் கலைக்கிற எந்த ஒரு காரியத்தையும் நம்மை விட்டு அகற்றிவிட வேண்டும்.

**இரண்டாவது,** நாம் கிறிஸ்தவ ஓட்டத்தை பொறுமையோடு ஓட வேண்டும். இங்கே எபிரெய ஆசிரியர் வாழ்க்கையை ஓர் ஓட்டப் பந்தயத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். சில வகையான பந்தயங்களுக்கு குறுகிய காலப் பயிற்சி போதுமானது, அப்பந்தயங்கள் சில நொடிகளிலேயே முடிந்து விடுகிறது. ஆனால், சில பந்தயங்களுக்கு தொடர்ச்சியான முயற்சிகளும், பல மணிநேர பயிற்சிகளும் அவசியப்படுகிறது. ஆம், கிறிஸ்தவ வாழ்க்கை மாரத்தான் ஓட்டப்பந்தயத்தைப் போன்றது. இது சில மணி நேர உணர்வுகளையோ சில நிமிடங்கள் நீடிக்கிற ஆவிக்குரிய அனுபவத்தையோ, அடிப்படையாக வைத்து அமைந்ததல்ல. மாறாக, இது வாழ்நாள் முழுவதுமான ஒரு சேவையாகும். இச்சேவைக்குத் தேவை அதிக ஆற்றலும் விடா முயற்சியும். கிறிஸ்தவ ஓட்டம் எளிதான ஒன்றல்ல, அதைப் பொறுமையோடு ஓடவில்லை யென்றால் நாம் ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியாது.

கிறிஸ்தவ ஓட்டம் முடிவதற்கு முன்பாக நாம் ஓட்டத்தை முடித்துக் கொண்டால் நித்திய மகிமையை எதிர்பார்க்க முடியாது. நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால், ஏற்ற காலத்தில் அறுப்போம் [கலாத்தியர் 6:9] இதற்கு முன்பு எபிரெயர் ஆறாம் அதிகாரத்தில் இந்நிருபத்தின் ஆசிரியர் ஆபிர காமின் உதாரணத்தைக் குறிப்பிடுகிறார். **அந்தப்படியே அவன் பொறுமையாகக் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்** [எபிரெயர் 6:15]. பவுல் இதே கருத்தை [ரோமர் 2:7] –ல் பதிவு செய்திருக்கிறார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார் [ரோமர்2:7]. ஆகவே, இந்த விசுவாச ஓட்டத்தை ஓடி முடிக்க பொறுமை மிக அவசியமாகும்.

**மூன்றாவது,** இந்த விசுவாச ஓட்டத்தில் நாம் இயேசுவை நோக்கி ஓட வேண்டும். வேறு விதமாகச் சொன்னால் நம் கண்களை இயேசுவின் மீது பதிக்க வேண்டும். மத். 14:30-ல் நாம் பார்க்கும் போது, பேதுரு இயேசுவை நோக்கிப் பார்த்துக்கொண்டு கடலின் மீது நடந்தபோது அமிழ்ந்துபோகவில்லை, ஆனால், அவன் இயேசுவிடமிருந்து தன் பார்வையை விலக்கிய போது தண்ணீருக்குள் அமிழ்ந்துபோகத் தொடங்கினான். நாமும் கூட கிறிஸ்தவ ஓட்டத்தில் இயேசுவை நோக்குவதை விட்டுவிட்டு வேறு எதையாவது நோக்கினால் சறுக்கி விழுந்து விடுவோம். ஏனென்றால், அவரே விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிறார் [எபிரெயர் 7:25] **மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.** எபிரெயர் 12:2-ல் அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிலுவையைப் பார்த்தது அவருக்கு எப்படி சந்தோஷத்தை உண்டு பண்ணியிருக்கும் என்று நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். ஆனால், இயேசுவானவர் தம்முடைய சிலுவை மரணத்தினால், சாத்தானை ஜெயிக்கும் காரியத்தைக் குறித்து சந்தோஷப்பட்டார். தம்மைப் பின்பிற்றி இரட்சிக்கப்பட்டவர்கள் பரலோகம் செல்லும் போது, அவர்களுக்குள் ஏற்பட்ட சந்தோஷத்தை இயேசுவானவர் கண்டார். அந்த சந்தோஷத்தை எதிர் பார்த்தவராய் அவர் சிலுவையை அதாவது, பாடுகளை, வேதனைகளை அவர் சகித்தார். சிலுவை மரணம் என்பது ஒருவருக்கு மரண தண்டனை கொடுக்க மனிதன் கண்டுபிடித்த கொடூரமான ஒரு வழியாகும். இருந்தபோதிலும் நம்மை இரட்சிக்க நம் இரட்சகர் அந்த சிலுவையை சகித்தார்.

**நான்காவதாக,** இயேசு கிறிஸ்து அவமானத்தை எண்ணாமல் என்று பார்கிறோம். இங்கே அவமானத்தை எண்ணாமல் என்று தான் மூலபாஷையிலும் பொருள்படுகிறது. சிலுவை மரணம் அந்நாட்களில் ஓர் அவமானச் சின்னமாகத்தான் கருதப்பட்டது. சிலுவை அந்நாட்களில் மிக மோசமான குற்றவாளிகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது. குற்றவாளிகளை எல்லோருக்கும் தெரிந்த பொதுவான இடத்தில் வைத்துத்தான் சிலுவையிலறைந்தார்கள்.

அப்போது அந்த வழியாகப் போகிறவர்களெல்லாம் சிலுவையில் அறையப்பட்டவர்களைப் பார்த்து பரிகாசம் செய்வார்கள். நம் ஆண்டவர் இந்தப் பரிகாசங்களையெல்லாம் சகித்துக் கொண்டார் [மத்தேயு 27:27-31;38-44].

இயேசு கிறிஸ்து தமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தை எப்படிப் பார்த்தாரோ, அவ்விதமாக நாம் இயேசு கிறிஸ்துவைப் பார்க்க வேண்டும். நம் வாழ்க்கையில் எத்தனை பாடுகள் வந்தாலும் சரி, நாம் இயேசுவைத் தான் நோக்கிப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அவர் நமக்காக மிக அதிகமான பாடுகளைப் பட்டு விட்டார்.

**ஐந்தாவதாக,** எபிரெயர் 12:3-ல் நாம் பார்த்த விதமாக அவரையே [இயேசு] நினைத்துக் கொள்ளுங்கள் என்று பார்க்கிறோம். இங்கே, இயேசுவானவரை வெறுமனே, நினைத்துக்கொள்வதென்பது போதுமான தல்ல. நம்முடைய பாடுகளுக்கும் அவருடைய பாடுகளுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அவரைப்போல உறுதியாய்த் தரித்துக்கொள்ள அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்று பொருள்படுகிறது. நம் கர்த்தரைக் குறித்தே நாம் சிந்தித்துக் கொண்டிருப்பது சோர்வடையாமல் இருக்க நமக்கு உதவி செய்கிறது. கிறிஸ்து சிலுவையில் சகித்த பாடுகளை மட்டுமல்ல அவர் இவ்வுலகத்தில் வாழ்ந்த நாட்களில் பட்ட பாடுகளையெல்லாம் நினைத்துப் பாருங்கள்.

நாம் நம் அன்றாட வாழ்வில் வரும் தற்காலிகமான அவமானங் களைப் பற்றி நினைக்காமல், சிலுவையினால் கிடைக்கும் நன்மைகளை அதிகமாக நினைத்துக்கொள்ள வேண்டும். பவுல் ரோமர் 8:18-ல் இதே கருத்தைத்தான் வலியுறுத்துகிறார். ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். இயேசு கிறிஸ்து பார்த்தது போல் நாம் சிலுவைக்கு அப்பால் பார்த்தால், நாம் கிறிஸ்தவ ஓட்டத்தை வெற்றிகரமாக ஓடி முடிக்க முடியும். எபிரெயர் 12:1-2ல், உள்ள வார்த்தைகள் கிறிஸ்துவை விட்டு விலக்கிச் செல்ல நினைத்த எபிரெய கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தும்படி எழுதப்பட்டது. இதே வார்த்தைகள் நம்மையும் உற்சாகப்படுத்துகிறதாக இருக்கிறபடியால், கிறிஸ்துவை விட்டு விலகிச் செல்லாமல், அவரிடமாகச் சேர்ந்து ஆத்தும மீட்புப் பெறுவோம். ✝



# மண்பாண்டங்கள்

## *Jars of clay*

**Byron Nichols**

**பொ**துவாக, பிரசங்கங்களில் சில காரணங்களுக்காக கதைகள் சேர்க்கப்படும் போது அது பிரசங்கத்தை மெருகேற்றுகிறது. இல்லையென்றால் பேச்சாக இருந்தாலும் சரி, எழுத்தாக இருந்தாலும் சரி அது சாதாரணமான அல்லது சுவாராஸ்யமற்ற ஒன்றாகத்தான் இருக்கும்.

தேவனுடைய படைப்புகள் எல்லாமே குறிப்பிடத்தக்கவைகளே! அதற்கு அவருடைய வார்த்தைகளும் விதிவிலக்கல்ல. தேவன் தம்முடைய தாசர்களைக் கொண்டு நமக்கு எழுதிக்கொடுத்திருக்கிற வார்த்தைகளும் கூட பல உதாரணங்களாலும், விளக்கங்களாலும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. மேலே குறிப்பிட்டிருக்கிற தலைப்பு கூட கர்த்தருடைய கையின் கிரியைக்கு ஓர் உதாரணமாயிருக்கிறது.

மண்பாண்டங்கள் என்னும் வேதாகம சொற்றொடரை நாம் ஆராய்வதற்கு முன்பாக சில அறிமுகத் தகவல்களை அறிந்து கொள்வது நமக்கு உதவியாயிருக்கும் என்று நான் நம்புகிறேன். சர்வ வல்ல தேவன் நம்மை உயர்த்தும்படிக்குத் தம்மை நம்மளவுக்குத் தாழ்த்துவது என்பது நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது! இந்த ஆச்சரியமான உண்மையை பவுல் எப்படி விவரிக்கிறார் என்று கவனியுங்கள் (ரோமர் 8:16-17). நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.

இயேசு கிறிஸ்துவினிடத்திலும், தேவனிடத்திலும் கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் கொள்வதால் நாம் ஆவிக்குரிய அல்லது புதிய பிறப்பின் அனுபவத்திற்குள்ளாகக் கடந்து வருகிறோம். அவ்விதமாக

நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். இது ஒருமாபெரும் ஈவாகும். இந்த ஈடு இணையற்ற ஈவு, பொறுப்பை உள்ளடங்கியதாயிருக்கிறது. மற்றவர்களும் இந்த மாபெரும் ஈவைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அதை அவர்களுக்கு அறிவிப்பது நம் பொறுப்பாயிருக்கிறது.

இப்போது மண்பாண்டங்கள் என்னும் நம்முடைய தலைப்பிற்குள்ளாக நாம் கடந்து வருவோம். அப்போஸ்தலனாகிய பவுல் II கொரிந்தியர் 4 ஆம் அதிகாரத்தில் சுவிசேஷம் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் பேசத்தொடங்கினார். பின்பு, ஏழாம் வசனத்தில் அவர் இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் என்றார்.

இங்கே பவுல் என்ன சொல்கிறார்? இவ்வுலகில் மனிதனை இரட்சிக்க வல்லமையுள்ள சுவிசேஷத்தை தேவன் மண் பாண்டங்களில் வைக்கத் தீர்மானித்து விட்டார் என்று சொல்கிறார். பவுல் இந்நிருபத்தை யாருக்கு எழுதினாரோ அவர்கள் மண்பாண்டங்களைக் குறித்து நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள். ஏனென்றால், பண்டைய காலத்தில் மண்பாண்டங்கள் அன்றாட வாழ்வின் அங்கமாக இருந்தன. பல பதார்த்தங்களைச் சேமித்து வைப்பதற்கு இந்த மண்பாண்டங்கள் பயன்பட்டன. அந்த மண்பாண்டங்களில் சில குறைகள், பழுதுகள் இருந்தபோதிலும், அவைகள் எந்த நோக்கத்திற்காக உத்தேசிக்கப்பட்டதோ அதற்காகப் பயன்பட்டன.

நாம் மண்பாண்டங்கள் என்பதை எளிதில் உணர முடியும். நாம் பொருட்கள் வைக்கப்படுவதற்கான பாத்திரங்களாக இருக்கிறோம். தேவன் ஏன் இதைத் தெரிந்து கொண்டார்? இதற்கான விடையை நாம் ஏழாம் வசனத்தில் காண முடியும். இந்த மகத்துவமுள்ள வல்லமை தேவனால் உண்டாயிருக்கிறது, அது நம்மால் உண்டாகவில்லை என்பதை விளங்கச் செய்யும்படி தான் தேவன் நம்மை உடைந்து போகக்கூடிய மண்பாண்டத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். பொதுவாக, இவ்வுலகில் நாம் பார்க்கும்போது விலையுயர்ந்த பொருட்களுக்குத் தான் மதிப்பு இருக்குமே தவிர, அந்தப் பொருட்கள் வைக்கப்படும்

பாத்திரத்திற்கு மதிப்பு இருப்பதில்லை. இது நமக்குப் புரியாத புதிரல்ல! இருந்த போதிலும், ஒரு சாதாரண பாத்திரத்தில் விலை மதிப்புள்ள பொருட்களை வைக்க முடியும். அந்த வகையில் தேவனுடைய பிள்ளைகள் உலகத்தை இரட்சிக்க வல்லமையுள்ள ஒரே பொக்கிஷத்தைத் தங்களிடத்தில் வைத்திருக்கிறார்கள். தம்முடைய சுவிசேஷத்தை மண்பாண்டங்களில் ஒப்புக்கொடுத்ததன் மூலமாக நற்செய்தியை மனிதனுக்கு எடுத்துச்செல்ல நாம் விசேஷித்தவர்கள் என்று நினைக்கிறவர்கள் தேவையில்லை என்பதை தேவன் நிரூபித்திருக்கிறார். பவுல் ரோமர் 1:16 ல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது என்று சரியாகத்தான் சொல்லுகிறார். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின என்று II கொரி.5:17-ல் நாம் கற்றுக் கொள்கிறோம். இதெல்லாம் மண்பாண்டங்களில் இருக்கிற பொக்கிஷத்தினால் ஏற்படுகிற தாக்கம் தான். அதாவது, பொக்கிஷமாகிய சுவிசேஷம் தேவனுடைய மண் பாண்டங்களாகிய கிறிஸ்தவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது. இவர்கள் தான் தேவனுடைய நற்செய்தியை சுமந்து செல்லும் பாத்திரங்களாக இருக்கிறார்கள். கீழ்ப்படிதலுள்ள ஒரு விசுவாசி புதிய சிருஷ்டியாக மாறுவது உண்மையாக இருந்த போதிலும் கூட, பூரணமற்ற ஒரு நிலையில் தான் இருக்கிறார்கள். பவுல் எவ்வளவு பெரிய தேவதாசர். ஆனால், அவருக்கு சரிரத்தில் ஏதே ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் ஏதோ ஒரு குறையுடன் தான் வாழ்ந்தார் (II கொரிந்தியர் 10:7) அந்த முள் நீங்கும்படியாக மூன்று தரம் பவுல் வேண்டினார்.

அதற்குக் கர்த்தர் என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும், என்று சொன்னார். அதற்குப் பிறகு பவுல் தன் சரீரத்திலுள்ள முள் நீங்கும்படி விண்ணப்பிக்காமல் தேவ ஞானத்தைப் புரிந்து கொண்டார். நம் தேவன், பவுல் போன்ற மாபெரும் தேவ தாசரின் பெலவீனத்தைத் தம்முடைய பெலனை வலியுறுத்தப் பயன்படுத்தியிருக்கிறார். நம் தேவன், வல்லமை செய்தியில் தான் இருக்கிறது, மண்பாண்டங்களில் இல்லை என்பதை முதலில் பவுலுக்குப் புரிய வைத்து விட்டு, அவர் மூலமாக அதை மற்றவர்களுக்கும் தேவன் புரிய வைத்தார். ✝

# வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்

## *Preaching Another Gospel.*

### *J.C. Choate*



அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சுவிசேஷம் என்றால் என்னவென்று தெரியும். ஏனென்றால், அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருக்கிறார். சுவிசேஷம் என்பது கிறிஸ்துவின் மரணம். அடக்கம் மற்றும் உயிர்த்தெழுத நிலைப்பற்றிய நற்செய்தி தான் [I கொரி. 15:1-4]. ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, தண்ணீரில் முழ்கி ஞானஸ்நானம் பெறும்போது, ஒருவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவது மாத்திரமல்ல, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, தண்ணீரில் முழ்கி ஞானஸ்நானம் பெறும்போது, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவது மாத்திரமல்ல, கிறிஸ்துவினுடைய மரணத்திற்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெறுகிறார் [ரோமர் 6:3,4]. இரட்சிப்பைக் கொண்டுவருவதற்குத் தேவனுடைய திட்டம் எவ்வளவு அருமையானது என்பதை எண்ணிப் பாருங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியருக்கு கலா. 1:6-9-ல், இவ்விதம் எழுதுகிறார். **உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், , நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தை அல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.**

பவுல் சொன்ன காரியத்தைக் கேட்டு அதைப்புரிந்து கொண்டீர்களா? கலாத்தியா நாட்டு கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் ஒரே சுவிசேஷத்தைத் தான் கேட்டிருந்தார்கள். அப்படியிருந்தும், அவர்கள் துரிதமாகச் சத்தியத்தை விட்டு விலகி, வேறொரு சுவிசேஷத்தைக் ஏற்றுக் கொண்டதைக் குறித்து பவுல் ஆச்சரியமடைந்தார். அந்த சுவிசேஷம் புரட்டப்பட்ட, திரிக்கப்பட்ட, தவறான சுவிஷேசமாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆகவே, அத்தகைய சுவிசேஷம் ஒருவருடைய ஆத்துமாவை ஆக்கினைக்குள்ளாகத்தான் தீர்க்குமே தவிர, அவர்களை நிச்சயமாக இரட்சிக்காது. தொடர்ச்சியாகப் பவுல், நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிஷேசத்தையல்லாமல், நாங்களாவது வானத்தி லிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன் என்றார் [கலா.1:8]. மேலும், இவ்வசனத்தில் பவுல் சொன்ன காரியத்தின் முக்கியத்துவத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். வசனம் 9- ல், முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

என் அருமை நண்பர்களே! எச்சரிப்பு என்பது இதைவிட எப்படி வெளிப்படையாக இருக்கமுடியும்? ஒரே சுவிசேஷத்தின் முக்கியத்துவத்தை வலிறுத்துவதற்கு இதைவிட வேறு ஏதாவது வழி இருக்கிறதா? தேவனுடைய சத்தியத்தை மாற்றி, அதை வேறொரு சுவிசேஷமாகப் பிரசங்கிக்கத் துணிகிற போதகர் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைவிடப் பெரிய தண்டனை ஒரு போதகருக்கு இருக்க முடியுமா? ஆகையால் தான். பவுல் இவ்வசனப்பகுதியில், ஏற்கனவே பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தையல்லாமல், வேறொரு சுவிசேஷத்தைத் தூதர்களே பிரசங்கித்தாலும் கூட அவர்களுக்கு என்ன நடக்குமென்று இங்கே விவரிக்கிறார். மேற்கூறப்பட்ட காரியங்களெல்லாம் கர்த்தருடைய உபதேசத்தோடு இணைந்திருப்பதன் அவசியத்தையும், அதைப் புரட்டிப் பேசாமல் இருப்பதன் அவசியத்தையும் நமக்கு வலியுறுத்து கின்றன. சத்தியம் ஒருவருடைய ஆத்துமாவை இரட்சிக்கும். அதேவேளையில், தவறான உபதேசம் ஒருவருடைய ஆத்துமாவை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும். மேலும், கர்த்தருடைய வழி ஒருவரை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும். மனிதனுடைய வழிகளோ நித்திய அழிவிற்குள் தான் கொண்டு செல்லும்.

வேதவாக்கியங்களில் இந்த எச்சரிப்புகள் இடம் பெற்றுள்ளதால், பவுலின் நாட்களிலே கள்ளப்போதகர்கள் இருந்திருக்கிறார்கள் மற்றும் கள்ளப் போதகங்கள் பிரசங்கிக்கப்பட்டு இருக்கின்றன என்கிற உண்மை உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. அதே பிரச்சனை இன்றளவும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. உண்மையில் சொல்லப்போனால், மனிதர்கள் இரட்சிக்கப்படுவதற்கு பல்வேறு வழிகளைச் சொல்வார்கள்! அதன் பொருள் அவர்கள் வித்தியாசமான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள் என்பதாகும். இவைகளில் பிரபலமானது, விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப்படலாம் என்னும் உபதேசமாகும். ஆனால், யாக்கோபு ஆசிரியர் யாக்கோபு 2-ம் அதிகாரம் 17 மற்றும் 24-ம் வசனங்களில் இவ்விதமாகச் சொல்லுகிறார். **அப்படியே விசவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும். ஆதலால் மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானக்கப் படுகிறானென்று நீங்கள் காண்கீறீர்கள்.**

இதில் கவலைக்குரிய விஷயம் என்னவென்றால், மெய்யான சுவிசேஷமும், ஒருவர் இரட்சிக்கப்பட்டுப் பரலோகம் போவதற்கு எவைகளையெல்லாம் செய்யவேண்டுமென கர்த்தர் விரும்புகிறாரோ, அவைகளெல்லாம் அவருடைய வார்த்தைகளில் மிகத்தெளிவாக விவரிக்கப்பட்ட பிறகு கூட சிலர், கர்த்தருடைய சித்தத்தைப் பின்பற்றுவதற்கப் பதிலாக, மனிதனுடைய உபதேசங்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவது தான் ஆச்சரியமாக இருக்கிறது. மார்க்க உலகில் இது உண்மையாக இருப்பது மாத்திரமல்ல, கர்த்தருடைய சபையைச் சார்ந்த சகோதரர்கள் கூட, சத்துருக்களோடு சேர்ந்துகொண்டு, அவர்களுடைய கள்ள உபதேசங்களை ஏற்றுக்கொண்டு, அந்தச் சுவிசேஷங்களைப் போதிப்பது வெட்கத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது. நிச்சயமாக இப்படிப்பட்டவர்கள் வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காகத் தேவனுக்கு முன்பாக சபிக்கப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

**ஜனங்களுக்கு மனுஷருடைய உபதேசங்களைப் பின்பற்றுவது எப்படி சௌகரியமாக இருக்கிறது?** எளிய விளக்கம் இதோ: பெரும் பாலான ஜனங்கள் வேதம் படிப்பதில்லை. தேவன், அவர்களை என்ன செய்யச் சொல்லியிருக்கிறார் என்பதைப் பற்றிய சரியான புரிந்து கொள்ளுதல் இல்லை. பலர், எனக்கு எது தெரியாதோ, அது என்னைப் பாதிக்காது என்றே சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால், வேத வாக்கியங்கள் அறியாமைக்கு விலக்கு அளிப்பதில்லை. ஓசியா 4:6 **என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய் ஆகையால், நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை**

**மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.** இன்னுமாக, மனுஷருடைய உபதேசங்களைப் போதிக்கிறவர்களை நம் கர்த்தரே கடிந்து கொண்டார். மத்தேயு 15:9, **மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்.** மத்தேயு 7:21-23, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்திலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்றார். மேலும், நமதாண்டவர், விசாலமான வழியில் தான், அநேகர் பயணிப்பதாகவும் **இடுக்கமான வழியில் ஒரு சிலரே பயணிப்பதாகவும் சொல்லியுள்ளார். மத்தேயு 7:13,14 இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர், ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சில என்றார்.**

அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குள்ளே பிரிவினையை உண்டாக்குகிறவர்களை நாம் தவிர்க்க வேண்டுமென்றும் சொல்லுகிறார். ரோமர் 16:17,18, அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். யோவான் ஆசிரியர் II யோவான் 9, கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல என்று எழுதுகிறார்.

தயவுசெய்து இந்த எச்சரிப்புகளைக் கண்டுகொள்ளாமல் இருந்து வேறொரு சுவிசேஷத்தை விசுவாசிக்கவோ அல்லது பிரசங்கிக்கவோ நாம் துணிய வேண்டாம்! காலம் சமீபித்திருக்கிறது. ✞

# வாழ்க்கையின் மதிப்புகளை பிள்ளைகளுக்குப் போதியுங்கள்
## *Teach The Values Of Life To The Children*

*P.C.Philemon Rajah*

இன்றைய நாட்களில், பிள்ளைகளை வளர்ப்பது என்பது மிகவும் சவாலான ஒன்றாக உள்ளது. பிள்ளைகளுக்கு மதிப்புமிக்கவைகளை போதிக்க வேண்டியது பெற்றோருடைய மிக முக்கியமான பொறுப்பு. இதைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

**1. ஏன் போதிக்க வேண்டும்?**

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நமது பிள்ளைகளுக்கு தீயதை அதாவது தரமற்ற செயல்களைக் கற்றுத்தர இந்த உலகம் மிகவும் மும்மரமாக இருக்கிறது. நாம் மதிப்புள்ளவைகளைப் போதித்து நல்வழிப்படுத்தாவிடில், அவர்கள் வாழ்வு முற்றிலும் கொடுமை யானதாகிவிடும். ஆகையால், அவர்களுக்கு நல்லவைகளைக் கற்றுக் கொடுத்து, நல்ல வழியில் நடத்த வேதாகமம் நம்மை ஊக்கப்படுத்துகிறது. எந்தப் பிள்ளையும் நல்லவைகளைத் தானாகக் கற்காது. எனவே, அவைகளைப் பெற்றோர் தான் கற்றுத்தர வேண்டியவர்களாக இருக்கிறோம். **நீதி 22:6** பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்.

**2. எப்பொழுது போதிக்க வேண்டும்?**

ஆகவே, பிள்ளைகளுக்கு வாழ்க்கையின் மதிப்புகளைப் போதிக்க வயது ஒன்றும் தடையல்ல. அவர்கள் எவ்வளவு பெரியவர்களானாலும் பெற்றோருக்குப் பிள்ளைகள் தான். ஆகையால், சிறுவர்களாக இருந்தாலும், பெரியவர்களானாலும் நாம் உயிரோடிருக்கும் வரை அவர்களுக்கு போதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஐனிக்கேயாள் மற்றும் லோவிசாள் சிறு வயதிலிருந்தே தீமோத்தேயுவிற்கு போதித்தனர் [IIதீமோ. 3:15;1: 5]. தாவீது, தன் மகன் சாலமோன் வாலிபனாக இருந்த போது மாத்திரமல்ல, அவன் அரசனான போதும் அவனுக்கு வாழ்க்கையின் தரமிக்க மதிப்புகளைப் போதித்தார்[ 1 நாளா. 28:9].

எல்லா வயது பிள்ளைகளுக்கும் எல்லாக் காலமும் வாழ்வின் மதிப்புகளைப் போதிக்க வேண்டும். நீதி. 23:19 என் மகனே, நீ செவி கொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து பிள்ளைகளின் முதிர்ச்சிக்கு ஏற்ப தொடர்ந்து சொல்லிக் கொடுக்க வேண்டும்.

**3. எங்கே போதிக்க வேண்டும்?**

பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டிய இடம் எது? வீட்டில் தான்முதன் முதலில் பிள்ளைகளுக்கு வாழ்வின் தரமிக்க மதிப்புகளைப் போதிக்க [ஆரம்பிக்க] வேண்டும் உபா.6:68. கர்த்தருடைய வார்த்தையை வீட்டில் தினமும், அடிக்கடி அவர்களிடம் பேச வேண்டும்.

**4. யார் போதிக்க வேண்டும்?**

பிள்ளைகளின் முதல் ஆசான் அவர்கள் பெற்றோரே! பெற்றோரை விட யாரும் அதிக அக்கறையுடன் பிள்ளைகளுக்கு வாழ்வின் தரமிக்க மதிப்புகளைப் போதித்து விட முடியாது. ஏனெனில், பிள்ளைகளுக்கு அவர்களது பெற்றோரே வாழ்வின் தரமிக்க மதிப்புகளைப் போதிப்பதில் மிக முக்கிய உதாரணமும் முன்மாதிரி யுமானவர்கள். [நியாயா 13:8]

**5. என்ன போதிக்க வேண்டும்?**

ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளுக்கு தரமிக்க மதிப்புகளை போதிக்கக் கட்டாயம் முடிவு எடுக்க வேண்டும். இந்த உலகத்திலேயே மிகவும் உயர்ந்த உன்னத பண்புகளை [Superior Moral] வேதாகமம் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆகையால், பிள்ளைகள் நமக்குப் பிரியமான படி அல்ல, தேவன் விரும்புகிற தெய்வீக நிலைப்படி வளர வேதாகமத்தைப் போதிக்க வேண்டும். **எபே 6:4** பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைககளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனை அவர்களை வளரப்பீர்களாக.

**6. எப்படிப் போதிக்க வேண்டும்?**

பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதிக்க வேண்டும் [உபா 6:6,7]. சிட்சித்து போதிக்க வேண்டும் [எபே 6:4]. அன்போடு போதிக்க வேண்டும்; அதே வேளையில் அதில் கண்டிப்பும் இருக்க வேண்டும் [நாளா 28:9]. அவர்கள் புரியும்படி போதிக்க வேண்டும். மேலும், அவர்களுக்குப் புரியும்வரை போதிக்க வேண்டும், சோர்ந்து போய்விட வேண்டாம் [2பேதுரு 1:12].

**7. வாழ்க்கையின் தரமிக்க மதிப்புகள் எவை?**

**அ. நேர்மை [வாய்மை]**

பிள்ளைகளுக்கு, எந்தச் சூழ்நிலையிலும், எப்பொழுதும் நேர்மையாக இருக்கக் கற்றுக்கொடுங்கள். அவைகளைப் பற்றி போதியுங்கள். நேர்மையாக இருப்பது எவ்வளவு உயர்ந்த பண்பு என்பதை விளக்குங்கள். தானியேல், தனது நேர்மையினாலேயே இன்றளவும் போற்றப்படுகிறார் [தானி 6:21,22]. கோணலான, அதாவது தாறமாறான இந்த உலகத்தில் தான், நாம் நேர்மையாக வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்மை சுற்றி யாரும் நேர்மையாக இல்லாவிட்டாலும், நாம் நேர்மையாக இருக்க வேண்டும் [பிலி 2:15-16].

### ஆ. தைரியம் [துணிவு]

தேவையற்ற பயங்களைச் சொல்லிக்கொடுத்து, பிள்ளைகளைப் பயமுறுத்தியே வளர்க்காதிருங்கள். துணிவுடன் வாழக் கற்றுக் கொடுங்கள். வாழ்வின் துன்பங்களைக் கண்டு ஒளிவதோ ஒதுங்குவதோ அல்ல தைரியம்; மாறாக, அதை எதிர்கொள்ளக் கற்றுக்கொடுங்கள்; ஏனெனில், அது தைரியம் மிகுந்த பலனைத் தரும். **எபி10:35** ஆகையால், மிகுந்த பலனுகேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். துணிவும், துணிகரமும் தைரியத்தின் இரட்டைப் பிள்ளைகள்; இரண்டிற்கும் பெரிய வித்தியாசம் உண்டு. நேர்மையாக வாழ, துன்பத்தில் தளராதிருக்க, பிரச்சனைகளைச் சந்திக்க , தோல்வியில் துவளாதிருக்க மனிதன் கொள்வது துணிவு. மோசமான வாழ்க்கை வாழ மனிதன் கொள்வது துணிகரம். வேதாகமம் நம்மை துணிவாகத்தான். இருக்கச் சொல்கிறது **(யாத் 23:2).**

### இ. சமாதானம் பண்ணுதல்

சமாதானமாக வாழ நம்முடைய பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். சமாதானமாக வாழ்வது என்பது தீமையோடு ஒத்துப் போவது அல்ல. தீமைக்கு விலகி நிற்க வேண்டும். அப்பொழுது தான் சமாதானமாக நாம் இருக்க முடியும். தேவனடைய பிள்ளைகள் சண்டை போடுகிறவர்களாகவோ, வாக்குவாதம் செய்கிறவர் களாகவோ, தேவ அதிகாரத்தை எதிர்க்கிறவர்களாகவோ இருத்தல் கூடாது. அவர்கள் சமாதானத்தை உண்டாக்குகிறவர்களாக இருக்க வேண்டும். **மத் 5:9** சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுகிறார்கள். மன்னிக்கவும், மறக்கவும் கற்றுக்கொள்வதே நம்மையும் நம்மை சார்ந்தவைகளையும் சமாதானமாக வாழச்செய்யும். தவறு செய்தால் மன்னிக்கவும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். பிள்ளைகள் முதலாவது பெற்றோரிடமிருந்தே பண்புகளைக் கற்றுக்கொள்கிறார்கள். நாம் சமாதானமாவதை நமது பிள்ளைகள் காணவேண்டும். **ரோமர் 12:18** கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.

### ஈ. தற்சார்பு [ தன்னம்பிக்கை மற்றும் திறமைகள்

தன்னம்பிக்கை உள்ளவர்களாக அவர்கள் தங்களை உருவாக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களது திறமைகளை மேம்படுத்த அவர்களைப் பொறுப்புள்ளவரகாளாக மாற்றுங்கள். தாவீது, இஸ்ரவேல் ராணுவமே பயந்து நடுங்கின கோலியாத்தை தனி ஒருவனாக எதிர் கொண்டார். தன்பக்கம் கடவுள் இருப்பதையும், அவரால், தான் ஒரு சிங்கத்தையும், கரடியையும் மேற்கொண்டதையும் அதினால் கோலியாத்தை வெல்ல முடியும் என்பதையும் குறித்து தனக்குப் தானே தன்னம்பிக்கை ஏற்படுத்தினார். தனக்கு பழக்கமில்லாத ஆயுதங்களைத் தவிர்த்து, தனது திறமையோடு [கூலாங்கல் எறிதல் ] சென்றார்; வெற்றியும் பெற்றார் [1 சாமுவேல் 17].

### உ. சுய ஒழுக்கம் [கட்டுப்பாடு]

தன்னைத் தானே அடக்கி ஆள பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். அதாவது, அவர்களுக்குத் தங்கள் மனதையும், உடலையும் கட்டுப்படுத்துதலின் அவசியத்தைப் போதிக்க வேண்டும். 1கொரி. 9:27 மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப் படுத்துகிறேன். சுயக்கட்டுப்பாடு என்பது, தனி மனித சுதந்திரம் என்ற பெயரில் அழிந்துபோய்க்கொண்டிருக்கிறது. வெற்றிகரமான வாழ்விற்கு தனி மனித ஒழுக்கம் மிகவும் அவசியமானது என்பதை பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். **ரோமர் 8:13** மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.

### ஊ. தூய்மை மற்றும் கற்பு

இந்த உலகத்தில் ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் இருவருமே வெவ்வேறு முறையில் வளரும்படி போதிக்கப்படு கின்றனர். இருவருமே தூய்மை மற்றும் கற்புடன் இருக்கப் பழக வேண்டும். ஆண் பிள்ளைகளை ஒரு மாதிரியும் பெண் பிள்ளைகளை வேறு விதமாகவும் அதாவது மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்ப்பது என்பது சரியான நிலை அல்ல. ஏனெனில், தூய்மை மற்றும் கற்பு என்பது பெண்களுக்கானது மட்டுமல்ல, அது ஆண்களுக்கும் உரியது. 1தெச. 4:7 தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால், பிள்ளைகளைச் சமமாகப் பாவித்து, நடுநிலைத் தன்மையுடன் அவர்களை நடத்த வேண்டும். திருமண வாழ்வின் பரிசுத்தம் மற்றும் தரத்தினைப் போதிக்க வேண்டும். அதினால் திருமணத்திற்கு முன்னும் பின்னும் அவர்கள் தகாத உறவின் அபாயத்திலிருந்து தங்களைக் காக்க முடியும். [எபி 13:4] மேலும், தீமையான நபர்கள் மற்றும் பழக்கங்களுக்கு அவர்கள் விலகி, தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வசனத்தினை மனப்பாடம் செய்யக் கற்றுக்கொடுங்கள். அதினால் தான் அவர்கள் தங்களைப் பொல்லாத வழிகளிலிருந்து விலக்கிப் பாதுகாத்துக் கொள்ள முடியும் [சங்கீதம் 119:9-11].

### இறுதியாக

பிரியமானவர்களே, நம்மோடு இருப்பதை விட நம் பிள்ளைகள், இந்த உலகத்தோடு தான் அதிக நேரம் இருக்கின்றனர். இந்த உலகம் தீயதைக் கற்றுத்தருவதில் ஒருபோதும் சோர்வதில்லை; நவீன தன்மை யோடும், அதிக வேகத்தோடும் கற்றுத்தருவதாக இருக்கின்றது. ஆகையால், இந்தப் பயங்கர உலகத்தில் நம் பிள்ளைகள் பரிசுத்தமாக தேவ பாதுகாப்புடன் இருக்க, நாம் நல்லவைகளை, அதாவது வாழ்வின் மதிப்புகளைச் சோர்வடையாமல் கற்றுத் தருவோம் எனத் தீர்மானிப்போம், மற்றும் செயல்படுவோம். இந்தத் தெய்வீக முயற்சியில் பரலோக பிதா உதவி செய்வாராக! ✞

## கர்த்தருடைய ஊழியக்காரன் எப்படியிருக்க வேண்டும்?
## *How Should Be The Lord`s Servant?*

*B. Arjunan*

கர்த்தருக்கு ஊழியம் செய்ய சிலர் தங்களை ஒப்புக் கொடுக்கிறார்கள் நல்லது தான். ஆனால், அவர்கள் எப்படியிருக்க வேண்டுமென வேதாகமம் போதிக்கிறது. **மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும் சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்** என அப்போஸ்தலனாகிய பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம் [எபே.6:6-]. உலக வேலை செய்கிறவர்களுக்கும் கர்த்தருக்கு ஊழியஞ் செய்கிறவர்களுக்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. கர்த்தருடைய ஊழியத்தை உலக வேலையோடே ஒப்பிட முடியாது. உலக வேலையில் மனுஷரைப் பிரியப்படுத்த வேலைசெய்வார்கள். கர்த்தருடைய ஊழியம் அப்படிப்பட்டது அல்ல, மாறாக அது, கர்த்தருக்கென்று நல்மனதோடே செய்ய வேண்டும். ஒரு ஊழியக் காரன் சண்டை பண்ணுகிறவனாய் இராமல் சாந்த முள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும் [2தீமோ.2:24]. சமாதானத்தைப் போதிக்கிறவன் சண்டை பண்ணிக் கொண்டிருந்தால் அவன் எப்படி கர்த்தருடைய வசனத்தை மற்றவர்களுக்குப் போதிப்பான்?

### 1. ஊழியக்காரன் போதகசமர்த்தனும் தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்.

இப்படிப்பட்டவர்களே கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யத் தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, **நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு** என எழுதுகிறார் [2தீமோ.2:15] வெட்கப்படக்கூடிய ஒரு நபர் கர்த்தருக்கு ஊழியம் செய்யமுடியாது. சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? அது இரட்சிப்பை உலக மக்களுக்குக் கொடுக்கக்கூடியது. அதைக் குறித்த வைராக்கியம் வல்லமையுள்ள சுவிசேஷத்தை எடுத்துச் சொல்வதில் ஆர்வமாக வெளிப்படவேண்டும். சுவிசேஷத்தைச் சொல்லுவதற்கு நேரத்தையோ காலத்தையோ நோக்கிக் கொண்டிருக்க வேண்டிய

அவசியமில்லை. சமயம் கிடைக்கும் போதெல்லாம் வாயிலிருந்து வெளிப்படுவது, இயேசுவின் மரணம் அடக்கம் உயிர் தெழுதலின் செய்தியாகிய சுவிசேஷமாகத்தான் இருக்க வேண்டும். **உன்னைக் குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைக்கொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்** என்கிறார் பவுல் [1தீமோ.4:16]. வேதாகமம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் அதைப் பயன்படுத்துவது அவ்வளவு எளிதானதல்ல. ஆகவே, கர்த்தருடைய உபதேசத்தைப் போதிக்கும் போது ஒரு ஊழியக்காரன் அந்த உபதேசத்தைக் குறித்து மிகவும் எச்சரிக்கையுள்ளவனாக இருக்கவேண்டும்.

**2. ஊழியக்காரர்களை கர்த்தர் சும்மா வேலைவாங்க விரும்பமாட்டார்**

ஆம், அவர்களுக்கு அதினால் பிழைப்பு உண்டாக்கி வைத்திருக்கிறார். **அந்தப்படி சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்** [1கொரி.9:14]. வேலை செய்கிறவன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். உலக எஜமான்களிடத்தில் வேலை செய்கிறவர்களுக்கு அன்றாடப் படி கொடுக்கப்படுகிறது. அதேபோல கர்த்தரும் எவரையும் வெறுமனே வேலை கொள்ள விரும்பமாட்டார். ஆக, சுவிசேஷத்தை அறிவிக்கிற அவர்களுக்கு அந்த சுவிசேஷத்தினாலே பிழைப்பை ஏற்படுத்தியிருக்கிறார். ஒரு சுவிசேஷகன் பலவந்தமாக ஏற்படுத்தப்படுவதில்லை. அதை அவன் கடமையாகக் கொள்ள வேண்டும். **சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால். எனக்கு ஐயோ** என்கிறார் பவுல் [1கொரி. 9:16]. இந்த சுவிசேஷம் யாருக்குச் சொல்லப்பட வேண்டும்? என்ற கேள்வியை எழுப்புவோமானால்; வேதம் சொல்லுகிறது: **அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்** [கொலோ.1:23]. ஆண்டவரும் நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றார். அந்தப்படியாக இன்றுவரை சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாருக்கும் பலவகையில் எடுத்துச் செல்லப்படுகிறது.

இந்த சுவிசேஷ ஊழியம் அன்பின் ஊழியம். இது கட்டாயத்தின் பேரில் செய்யக்கூடிய ஊழியம் அல்ல என்பதை நாம் முதலாவது புரிந்து கொள்ளவேண்டும். **சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கு**

**கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள் (கலா.5:13) மேலும், இப்பொழுது நான் மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே** [கலா.1:10]. ஒவ்வொரு ஊழியனும் கர்த்தரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்து கொண்டு ஊழியத்தைச் செய்ய வேண்டும். மனுஷரைப் பிரியப்படுத்தி ஊழியஞ்செய்கிறதினாலே அவன் கரத்தருக்கேற்ற ஒரு ஊழியக்காரனாக இருக்க முடியாது.

**3. ஊழியர்கள் தர்ம பணத்தை குறித்த விஷயத்தில் உண்மையுள்ளவனாயிருக்க போதிக்கப்படுகிறார்கள்.**

பவுல் இந்த விஷயத்தில் எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப் பணத்தைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தப்படாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து என குறிப்பிடுகிறார் [2கொரி.8:20]. ஊழியத்தில் நற்சாட்சி மிகவும் அவசியம். மற்றவர்கள் நம்மீது நம்பிக்கையற்றவர்களாக இருக்கும் போது நாம் சொல்லக்கூடிய சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வது கடினம். இதனால் சுவிசேஷம் தடைபடும். ஒவ்வொரு சுவிசேஷகனும் தன்னைப்பற்றிய கதைகளைச் சொல்லாமல் சுவிசேஷத்தை அறிவிக்கிறவனாக இருக்கப் பிரயாசப்படவேண்டும். பவுல் சொல்கிறார்; **நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்** என்கிறார் [2கொரி.4:5]. ஒரு சுவிசேஷகன் இயேசுவின் நிமித்தமாக ஜனங்களுக்கு ஊழியக்காரனாக இருந்தால், அதற்கேற்ற கூலியை அவன் கர்த்தரிடத்தில் பெறுவான். கிறிஸ்தவம் உண்மையின் உன்னத மார்க்கம். மேலும், அதில் கூட்டிச் சொல்வதற்கோ, அல்லது குறைத்துச் சொல்வதற்கோ இடமில்லை. அநேக மார்க்கங்கள் உலகத்தில் இருக்கிறது. அவைகளை சிலர் கூட்டியும் குறைத்தும், திரித்தும் கூறுவர். வேதாகமத்தைப் பொறுத்தவரை சத்தியத்தை சத்தியமாகவே சுவிசேஷகர்கள் பிரசங்கித்து வருகிறார்கள். தந்திரமாகவும் வேத வசனத்தைப் புரட்டியும் சொல்லவேண்டிய அவசியமில்லை. உண்மையான சத்தியத்தை எடுத்துரைக்கும் போது தேவனால் உண்டானவர்கள் தேவனுடைய வசனங்களுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். அதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் அறிந்துகொள்கிறோம்.

**4. ஊழியக்காரன் கர்த்தருக்கு ஊழியக்காரனாயிருக்கிறான் என்பதை ஒருபோதும் மறந்துபோகாதிருக்க வேண்டும்**

உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்; விசுவாசத்தினாலே

நிலைநிற்கிறீர்களே என்கிறார் பவுல் [2கொரி. 1:24]. சில சபை போதகர்கள் தாங்கள் அதிகாரிகள் போல விசுவாசிகளிடம் நடந்துகொள்கிறார்கள். ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் அந்த விதமாக நடந்து கொள்ளாமல். அவர்களுடைய சந்தோஷத்திற்குச் சகாயராக இருந்திருக்கிறார். **ஊழியஞ் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்: பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்: முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக் கடவன்: இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத் துடனே செய்யக்கடவன்** ரோமர்12:7,8]. அவரவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்வார்களேயானால் கர்த்தருடைய சபை வளர்ச்சிப் பாதையில் இருக்கும். ஆகையால், நீங்கள் ஒரு சபைப் போதகராக இருந்தால் அவைகளில் இன்னும் தேர்ச்சியடைய முற்படுங்கள் அல்லது நீங்கள் ஒரு சுவிசேஷகராக, ஊழியராக இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை சிறப்புடன் செய்து அதை நிறைவேற்றுங்கள். எதுவாக இருந்தாலும் கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினாலே வாய்க்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கவேண்டும். **அசதியாயிராமல் ஜாக்கிரதையாக இருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்** ரோமர்12:11]. கர்த்தருடைய ஊழியக்காரன் கர்த்தருக்கு ஊழியஞ் செய்யும்பொழுது தேவனால் கனத்தைப் பெற்றுக் கொள்ளுவான்.

**5. ஊழியக்காரன் சுவிசேஷத்தினிமித்தமாக தீங்கு அநுபவிக்க வேண்டுமா?**

ஆம், ஒரு ஊழியக்காரன் சுவிசேஷத்தினிமித்தம் தீங்கு அநுபவிக்க வேண்டும். அப்படியானால் யார் இந்த வேலைக்கு வருவார்கள் என்ற கேள்வி உங்களுக்குள் எழும்பும். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இவைகளை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். இயேசு சொல்கிறார்; **ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்** [யோவான் 12:26]. இயேசுவைப் பின்பற்றி அவருக்கு ஊழியஞ் செய்கிறவன் பிதாவினால் ஆசீர்வதிக்கப்படுகிறான். மனிதர்களைப் பின்பற்றி ஊழியஞ்செய்கிறவர்கள் ஏமாற்றப்படு கிறார்கள். உண்மையான ஒரு ஊழியன் சுவிசேஷத்தின் நிமித்தமாக தீங்கு அநுபவிக்க வேண்டும் . இதையே பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது; நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று என்றார் [2தீமோ.4:5]. நீங்கள் எப்படிப்பட்டவர்கள்? ✞

# என்னுடைய திட்டமா தேவ சித்தமா?
# *My Plan For The Will Of God?*
*E.Z.Selvanayagam*

சுமார் கி.பி 57 – ல் அப்போஸ்தலன் பவுல் ரோமாபுரியில் உள்ள பரிசுத்தவான்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் அவர்களுடைய விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாயிருக்கிறது என்று அவர்களை மெச்சிக்கொள்கிறார் [ரோமர் 1: 8]. அவர்களைக் காணவும் , ரோமாபுரியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும் தனக்குள்ள வாஞ்சையைத் தெரிவிக்கிறார் [ரோமர் 1, 15] ஆனாலும், அவருடைய எண்ணம் நிறைவேறாமல் தேவனால் தடுக்கப்பட்டுவிட்டதாகப் புலம்புகிறார் [ரோமர் 13: 15:22]. இருந்தபோதிலும், நான் ஸ்பெயின் நாட்டுக்குப் போகும் போதாவது உங்கள் ஊர் வழியாய்ப் பயணம் செய்து , உங்களைக் கண்டுகொள்ளவும் உங்களித்தில் சற்றுத் திருப்தியடைந்த பின்பு அவ்விடத்திற்கு உங்களால் வழி விட்டனுப்பப் படவும் எனக்கு சகாயம் கிடைக்கும் என நம்புகிறேன் என்று தன் ஆதங்கத்தை விவரிக்கிறார் [ரோமர் 15: 24,28]

கர்த்தரே தரிசனத்தில் **பவுலே, நீ திடன் கொள் நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததைப் போல ரோமாவில் சாட்சி கொடுக்க வேண்டும்** என்றாரே [அப். 23 : 11] பின்னே , ஏன் எனக்கு ரோமபுரிக்குப் போவதற்குத் தடை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது? என்று பவுலுக்கு ஒரே குழப்பமாக இருந்திருக்கலாம். தேவன் சொன்னதில் மாற்ற மில்லை. பவுல் அப்போஸ்தலன் ரோமாபுரிக்குப் போனார், சுவிஷேமும் அறிவித்தார். ஆனால், அவர் கற்பனை செய்து கொண்டிருந்ததைப் போலவும், அவர் விரும்பிய காலகட்டத்திலும் அவருடைய தீர்மானத்தின்படியும் அல்ல. மாறாக சிறைக் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டார். கைதியாக நான் பிடிக்கப்பட்ட பிறகு, நான் சுவிஷேத்தைப் பிரகடனம் செய்வது எப்படி முடியும்? என் திட்டம் எல்லாம் பாழாகிவிட்டதே என்று பவுல் நிலை குலைந்து போயிருக்கலாம். ஆனாலும், தேவன் தன் திட்டத்தை நிறை வேற்றினார். பவுல் ரோமாபுரியில் தனக்கென்று ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, அங்கே கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தார். ஏராளமானவர்கள் அவருடைய சிறை வீட்டுக்கு வந்து சுவிசேஷத்தைக் கேட்டனர். தடையில்லாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கித்து காத்திராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார் [அப். 28: 23, 30, 31].

மனிதர்களாகிய நாம் மிகுந்த ஞானத்துடனும் எச்சரிப்புடனும் திட்டங்களைத் தயாரித்து, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதாக நினைத்துக் கொண்டாலும், தேவனுக்கு என்று ஒரு திட்டம் உண்டு. அது, அநேக நேரங்களில் நம்முடைய திட்டத்துக்கு ஒத்துப்போகாது. அப்பொழுதெல்லாம் நமக்குக் கொடுக்கப்பட்ட அந்த முள் நீங்க வேண்டும் என்று கண்ணீரோடு மன்றாடியிருப்போம். ஆனால், அந்த முள் நீக்கப்படாதது மட்டும் அல்ல, அது இன்னும் கூர்மையாகி நமக்கு வேதனை அளிக்கிறதை நாம் தேவனை சபித்துவிட்டு செத்துப் போகலாம் என்று முடிவுக்கு வருமுன்னே [யோபு 2:9] உன் பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும் [IIகொரி. 12:9] என்ற மெல்லிய சத்தத்தால் நம்மைத் தேற்றுகிறார் . நம்முடைய பெலத்தையும், திறமையையும் குறித்துப் பெருமை பாராட்டிக் கொள்ளாதபடி, தேவன் மேல் சார்ந்து அவருடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுப்பதற்கு நமக்கு குறிப்பிட்ட சோதனைகளும், துன்பங்களும் அவசியமாக இருந்திருக்கலாம்.

நான் கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் சிறப்பாகச் செய்வதற்கு இன்னும் சில வசதிகள் இருந்தால் பெரிய அறு வடையைச் செய்து காண்ப்பிபேன் என்று ஏங்கியிருப்போம். ஆனால், இப்படியே வறுமைக்கும் பிரச்சனைகளுக்கும் மத்தியில் உழல்வது, நாம் மனத்தாழ்மையோடு ஊழியம் செய்வதற்கு நல்லது என்று தேவன் நினைத்திருப்பார் . சவுல் அரசனுடைய உடைகளையும் போர் ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு கோலியத்தை வெல்வதற்கு தாவீது முயற்ச்சிதான். ஆனால், அது அவனுக்குச் சரிப்பட்டு வரவில்லை. மாறாக, தன்னுடைய எளிமையான மேய்ப்பனின் ஆடைகளும் ஆயுதங்களும் கோலியாத்தை வீழ்த்துவதற்குப் போதுமானது என்னும் தேவ திட்டதைப் பின்னர் தான் அவன் உணர்ந்தான் [1 சாமு. 17: 38–51 ] வசதியாக இருக்கும் ஊழியனைப் பார்த்து, நானும் அப்படியிருந்தால் நன்றாக இருக்குமே என்று ஆசைப்பட வேண்டாம். தேவன் உனக்கு கொடுத்திருக்கிற தாலந்துங்களைக் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து உபயோகி, அப்பொழுது தேவன் நிச்சயம் நன்மை செய்வார்.

மோசேயை பயன்படுதியைதைப் போல நம்மையும் ஒரு முக்கியமான பணிக்கு தேவன் பயன்படுத்தமாட்டாரா? என்று அங்கலாய்த்திருப்போம் [அப். 7:25] மோசேக்குக் கல்விச் செல்வம், நிர்வாகப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, வில்வித்தை, வாள் வீச்சு இன்னும் எத்தனை எத்தனையோ பயிற்சிகளும் கொடுக்கப்பட்டி ருக்கலாம் [அப். 7:22] இளமை இருந்தது [வ.23] சமுதாயப் பற்று இருந்தது [வ.24] சொல்லப்போனால், தேவனே மோசேயை

அப்பணிக்கு என்று தான் பயிற்றுவித்தார். அப்படியில்லாவிட்டால் அடிமைகளைப் பெற்றோராகக் கொண்ட ஓர் அடிமை, தான் அடிமையாக இருக்கிற அதே நாட்டின் அரசுக் கட்டில் ஏற சூழ்நிலை அமையுமா? ஆனால், தேவன் நியமித்த நேரமும், சுழ்நிலைகளும் வரவில்லை என்பதை மோசே அறிய முடியாமல் உயிர் பிழைத்தால் போதும் என்று மீதியான் தேசத்துக்கு ஓடிப்போகச் செய்தார். தேவனுடைய திட்டத்தில் மாற்றமா? இல்லை. மோசே மீதியான் தேசத்துப் பாலைவனப் பல்கலைக்கழகத்தில் மௌனம் என்னும் சிறப்புப் பாடத்தை எடுத்து நாற்பது ஆண்டுகள் பயில வேண்டும் என்று தேவன் நினைத்தார். மோசே எப்படிப்பட்ட கடினமான பணிக்கு ஏற்படுத்தப்பட்டவன் என்பதை மோசேயை விட தேவன் தெளிவாக அறிந்திருந்தார். சகோதரனே, அவசரப்பட்டு ஆசைப்படாதே! கர்த்தருடைய வேலைக்காகக் காத்திரு.

முன்னொரு காலத்தில் தென் இராஜ்ஜியமாகிய யூதாவை ஆண்ட மிகச் சிறந்த அரசனாக விளங்கினார் எசேக்கியா. அவனைப் போல நல்ல அரசன் அவனுக்கு முன்னும் இருந்ததில்லை பின்னும் இருந்ததில்லை என்று பேர் பெற்று இருந்தான். அவர் மரிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று தேவன் ஏசாயா தீர்க்கன் மூலமாக தகவல் தந்தார். இது எல்லாருக்கும் கிடைக்கும் பேறு அல்ல; இருந்தபோதிலும், அவர் தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடாமல் இன்னும் சில காலம் வாழவேண்டும் என்று விரும்பி கண்ணீர் மல்க மன்றாடினான். தேவன் அவன் விருப்பப்படியே பதினைந்து ஆண்டுகள் நீட்டிக் கொடுத்தார். என்னே பரிதாபம்! அந்த நீடிக்கப்பட்ட ஆண்டுகளில் அவன் சமாதானம் இழந்தான். அந்த நாட்களில் அவன் பெற்ற பிள்ளை தான் **மனாசே** என்ற பொல்லாத அரசன். அவன் தன் தகப்பனுக்கு எதிர்த்திசையிலே பயணம் செய்து தேவனுக்கு அருவருப்பான விக்கிரக ஆராதனையை ஊக்குவித்து நாட்டை அழிவின் பாதையில் அழைத்துச் சென்றான். **எசேக்கியா தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து மரணத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அவனுடைய ஆட்சி, வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும்.** தேவசித்தத்துக்கு ஒப்புக் கொடுக்காததால் கிடைத்தது என்ன என்று சிந்தித்துப் பாருங்கள், [IIராஜா20,21ம் அதிகாரம்].

ஆக, நம்முடைய ஜெபங்களுக்கு **இல்லை** என்று மறுமொழி கிடைத்தாலும், நமக்குக் கொடுக்கப்பட்ட முள் எடுபட்டு போகா விட்டாலும், நம்முடைய பணித்திட்டங்கள் நிறைவேறாமற் போனாலும் நாம் கர்த்தருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து நம்முடைய ஊழியத்தைச் செய்வோம். ஆபகூக் தீர்க்கனைப் போல மகிழ்ச்சியாயிருப்போம். ✝

# விதையும், இதயமும்

## *The Seed and The Heart*

*Benny Martin*

**வி**தைக்கிறவனுடைய உவமையிலிருந்து சில உண்மைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன். லூக்கா எட்டாம் அதிகாரத்தில் இந்த உவமை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது விதைக்கிறவனுடைய உவமை என்றழைக்கப்பட்டாலும், இது உண்மையில் விதைக்கிறவனைப் பற்றியில்லாமல் விதை விழும் நிலத்தைப் பற்றியே உள்ளது. இவ்வசனப் பகுதியில் உலக இரட்சகர் இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் விவரிக்கிறார். என்ன! என்னைப் பற்றி இவ்வசனப் பகுதியில் இயேசு கிறிஸ்து விவரித்திருக்கிறாரா என்று நீங்கள் புருவத்தை உயர்த்துவது எனக்குத் தெரிகிறது. உங்கள் பெயரும் என் பெயரும் இங்கே நம் இரட்சகரால் குறிப்பிடவில்லை என்பது உண்மைதான். ஆனால், உங்கள் இருதயத்தைப் பற்றியும் என் இதயத்தைப் பற்றியும் இவ்வசனப் பகுதியில் அதாவது இந்த விதைக்கிறவனுடைய உவமையில் விவரித்திருக்கிறார் [லூக்கா 8:4-15].

நானிலத்தை ஆளும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்து நான்கு விதமான நிலங்களைப் பற்றி விவரிப்பதன் மூலமாக மனிதர்களுடைய நான்கு விதமான இருதயங்களைப் பற்றி விவரித்திருக்கிறார். நம் இருதயம் எப்படிப்பட்டது? பிரியமானவர்களே, இதற்கு உலகப் பிரகாரமான விளக்கங்கள் ஏராளமாக, தாராளமாக இருந்தாலும் கூட வேதவசனம் **எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?** என்று இருதயத்தைப் பற்றி அறிவிக்கிறது [எரேமியா17:9]. உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இருதயத்தைப் பற்றிய இந்த உலகளாவிய உண்மையை உதிர்த்திருக்கிறார். இவ்வுலகில் வாழும் மக்கள் எல்லாரும் இந்த நான்கு வகையான இருதயங்களை உடையவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வுலகில் நாட்டுக்கு நாடு மனிதர்களுடைய நிறத்தில் மாற்றம் இருக்கலாம், பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம். ஆனால், எல்லோரும் இந்த நான்கு வகையான இருதயங்களையே பெற்றிருக்கிறார்கள். பருவங்கள் மாறினாலும் துருவங்கள் இடம் மாறினாலும் இதுதான் உலகளாவிய உண்மை. நாம் எவ்வகையான இருதயத்தைப் பெற்றிருக்கிறோம் என்பது நம் நித்தியத்தை தீர்மானிக்கிறபடியால் சத்தியத்தின் சத்தத்திற்க்கு செவி கொடுப்போம்.

### வழியருகே இருதயம்

நம் அருமையான இயேசு முதல் வகையான இருதயத்தை வழியருகே இருதயம் என்று வரையறுக்கிறார். [லூக்கா 8:11] ல் விதை தேவனுடைய வசனம் என்று உவமையின் கருப்பொருளைத் தெரிவித்திருக்கிறார். நம் இந்தியா போன்ற விவசாய நாட்டில் நிலத்தில் நாமே விதை விதைத்திருப்போம் அல்லது மற்றவர்கள் விதைப்பதையாவது பார்த்திருப்போம். ஒவ்வொரு சிறு விதையிலும் ஜீவன் இருக்கிறது. அது நம் கண்ணுக்கு முன்பாக மண்ணிலிருந்து முளைத்து தழைத்து கனி தருவதை நாம் அறிந்திருக்கிறோம். மண்ணில் விதைக்கப்பட்ட விதை மிகுந்த வல்லமையுடன் மண்ணை துளைத்துக்கொண்டு முளைக்கிறது. ஆவிக்குரிய விதையாகிய தேவனுடைய வசனத்திற்கும் மிகுந்த வல்லமை உண்டு. அதற்கு எல்லையே இல்லை! இப்போது வழியருகே இருதயத்திற்கு மறுபடியும் வருவோம். இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்கும் ஒரு நபர் தேவனுடைய வசனத்தை தன் இருதயத்தின் மேல் தட்டில் மட்டும் வைத்திருக்கிறார். அதைத்தன் இருதயத்திற்குள் ஊடுருவ அனுமதிப்பதில்லை. மத்தேயு 13:19-ல், நம் ஆண்டவர் இவ் வகையான இருதயத்தைக் கொண்டிருப்பவர்கள் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கிறார்கள் என்று சொல்கிறார். தேவனுடைய வார்த்தையை கேட்கும்போது அவர்களுக்கு எந்த விதமான உணர்வோ, உற்சாகமோ உள்ளத்தில் ஏற்டுவதில்லை. எனவே, பிசாசானவன் வந்து வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் என்று தேவன் வாக்குரைத் திருக்கிறார் [யாக்கோபு 4:7]. ஆனால், வழியருகே இருதயத்தைக் கொண்டிருக்கும் ஒரு நபர் தேவனுடைய வார்த்தைக்குச் செவி சாய்ப்பதில்லை. அந்த நபர் பிசாசின் வலையில் விழுந்து தன் நிலையை இழந்து விடுகிறார். அதன் விளைவாகத் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதுமில்லை, அவர் இரட்சிக்கப்படுவது மில்லை. அருமையானவர்களே! நம்மில் ஒருவருக்கும் இவ்வகையான இருதயம் அறவே வேண்டாம்.

### கற்பாறை இருதயம்

இது இரண்டாவது வகையான இருதயம். இவ்வகையான இருதயத்தைக் கொண்டவர்கள் ஆரம்பத்திலே தேவனுடைய வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால்,

இவ்வகையான இருதயத்தில் பிரச்சனை என்னவென்றால், இந்த நபருக்கு ஆவிக்குரிய வேர்கள் இருப்பதில்லை, மேலும் அவர் தேவனுடைய வார்த்தை உள்ளத்தில் ஊடுருவ அனுமதிப்பதில்லை. இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருப்பவர்கள் மேலோட்டமான ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்பவர்கள். நம் அருமை இரட்சகர் இவர்களுக்கு என்ன நடக்கும் என்று சொன்னார்? மத்தேயு 13:21-ல், **வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவார்கள்** என்று சொன்னார். நீங்களும் நானும் தேவனுடைய வார்த்தையை எப்படி இருதயத்திற்குள் ஆழமாக ஊடுருவச் செய்வது? அதற்கு அனுதின முயற்சியும், பயிற்சியும் தேவை. நாம் அனுதினமும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்தால் மட்டும் போதாது அவைகளை நாம் ஆழமாகவும், விரிவாகவும் சிந்திக்க வேண்டும். நம் அன்றாட வாழ்வில் தேவனுடைய வார்த்தைகளை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று யோசித்து அவைகள் நம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தத்தக்கதாக உள்ளத்தில் நாட்ட வேண்டும் (யாக்கோபு1:21). அப்போதுதான் நம்மிடத்தில் ஆழமான ஆவிக்குரிய வேர்கள் காணப்படும். மேலும், நாம் உபத்திரவங்கள் மற்றும் பாடுகளால் தடம்மாறி நிலை மாறும்போது இடறலடைய மாட்டோம்.

**முள்ளுள்ள இருதயம்**

இது மூன்றாவது வகையான இருதயம். இந்த முட்கள் தேவனுடைய வார்த்தையின் மீது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது? இவைகள் தேவனுடைய வார்த்தையை நெருக்கிப் போடுகிறது. இது, இத்தகைய இருதயத்தை உடைய நபரின் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிக மோசமான விளைவுகளை ஏறப்படுத்தும். இவர் ஆவிக்குரிய கனியைக் கொடுப்பதற்கு வாய்ப்பே இல்லை. விவசாய ரீதியாகப் பார்த்தால், ஒரு விவசாயி தன் பயிர்கள் நடுவில் முட்கள் வளர்ந்தால் என்ன செய்வார்? அதை உடனே அகற்றிப் போடுவார். ஏனென்றால், அம்முட்கள் பயிர்களை நெருக்கிப், அவைகள் அவருடைய வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் வற்றச் செய்துவிடும். பிரியமானவர்களே! நம் இருதயங்களில் ஆவிக்குரிய முட்கள் வளர்ந்தால் அவசரமாக, அவசியமாக அகற்றிட வேண்டும். இந்த உவமையில் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து எவைகளை ஆவிக்குரிய முட்களாக சொல்லியிருக்கிறார்? இப்பிரபஞ்சத்திற்குரிய கவலைகள், ஐசுவரியம்,

சிற்றின்பம் போன்றவைகளைத் தான். இவைகள் நம் இருதய விருட்சத்தில் கூடுகட்டிக் குடியிருக்க நாம் அனுமதித்தால் தேவனுடைய வார்த்தைகளையும், நம் வாழ்க்கையையும் நெருக்கி விடும். மத்தேயு 13:22-ல், நம் ஆண்டவர் ஐசுவரியத்தின் மயக்கம் என்று குறிப்பிடுவதில் எந்த தயக்கமும் காட்டவில்லை. ஈராயிரம் வருடங்களுக்கு முன்பாக நம் அருமை இரட்சகர் சொன்ன வார்த்தைகள் இன்றளவும் உலகளாவிய உண்மையாக இருக்கிறது. இவ்வுலகம் ஐசுவரியத்தின் மயக்கத்தில்தான் மயங்கிக் கிடக்கிறது. பணப்பசி நிறைந்த இவ்வுலகம் காலை தோறும் பணச்சிந்தனையில் தான் கண் விழிக்கிறது. **பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை கச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்** என்று வேதாகமம் பண ஆசையைக் குறித்து எச்சரிக்கிறது [1தீமோத்தேயு 6:10].

### நல்ல இருதயம்

இது நான்காவது வகையான இருதயம். இந்த இருதயத்தைத்தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நல்ல நிலத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். பயிர் செய்யும் ஒரு விவசாயிக்கு நல்ல நிலம் கிடைத்தால் அது எல்லையில்லா மகிழ்ச்சியைக் கொடுக்கும். எனவேதான், நீங்களும் நானும் இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்க இறுதிவரை பாடுபட வேண்டும். மேலும், இயேசு கிறிஸ்து இவ்வகையான இருதயத்தைப் பற்றிச் சொல்லும்போது உண்மையும் நன்மையுமான இருதயமாக இருக்கிறபடியால் தீய சிந்தனைகள் இங்கு குடியிருக்கவே முடியாது என்றும் இந்த நல்ல இருதயத்திலிருந்து யாரும் தேவனுடைய வார்த்தையைப் பிரிக்கவோ பறிக்கவோ முடியாது. அடுத்ததாக, இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்கும் நபர் பொறுமையுடனே பலன் கொடுக்கிறார். அதாவது, இவர் தேவனுடைய வார்த்தைகளை கேட்கிறவராய் மாத்திரம் இராமல் அதின்படி செய்கிறவருமாயிருக்கிறார் [யாக்கோபு 1:11]. பிரியமானவர்களே, இதுகாறும் நாம் நான்கு வகையான நிலங்களை அதாவது இருதயங்களைப் பார்த்தோம். அதில் உண்மையும் நன்மையுமான இருதயமே தேவனுக்குப் பிரியமான இருதயமாக இருக்கிறபடியால், இவ்வகையான இருதயத்தை அதாவது உண்மையும் நன்மையுமான இருதயத்தைக் கொண்டு தேவனைப் பிரியப்படுத்துவோம். ✝

தேவன்

# கர்த்தருடைய தூதனானவர்

## The Angel of Jehovah

*Dave Hart*

ஒட்டு மொத்த வேதாகமத்தின் சுவாரஸ்யமான ஆளுமைக்குள் ஒருவராக கர்த்தருடைய தூதனானவர் இருக்கிறார். அநேகமாக வேறெந்த வேதாகம கதாபாத்திரமும் கர்த்தருடைய தூதனைப் போல குறைவாக அறியப்படவுமில்லை, குறைவாகப் புரிந்து கொள்ளப் படவுமில்லை. யார் இந்த கர்த்தருடைய தூதனானவர்? இக்கேள்விக்கான பதிலை அளிப்பது தான். நம் படத்தின் நோக்கமாயிருக்கிறது.

### தேவதூதர்களின் குணாதிசயங்கள்

இந்த கர்த்தருடைய தூதனானவரை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், பொதுவாக தேவ தூதர்களின் குணாதிசயங்களை நாம் அலசி ஆராய வேண்டும். தேவ தூதர்கள் உண்டாக்கப்பட்ட ஜீவன் இருக்கிறார்கள். தேவதூதர்கள் கிறிஸ்துவால் முன்பொரு காலத்தில் உண்டாக்கப்பட்டவர்கள் [கொலோசெயர் 1:16,17] அவர்கள் உண்டாக்கபட்ட சிருஷ்டிகளாக இருக்கிற படியால் தெய்வீக தன்மை அவர்களிடத்தில் இல்லை. தேவ தூதர்கள் பரிசுத்தமுள்ளவர் களாயிருக்கிறார்கள். ஆனால், பாவம் செய்யும் தன்மை உடையவர்கள் [II பேதுரு 2:4]. தேவ தூதன் என்றாலே, தேவனுடைய செய்தியை எடுத்துச் செல்லும் தூதுவர் என்று அர்த்தம். மனிதன் தேவ தூதர்களை ஆராதிக்கும்படி அனுமதிக்கப்படவில்லை. தேவனை மாத்திரமே தொழுதுகொள்ளும்படி கட்டளை பெற்றிருக்கிறோம் [வெளி. 22:89].

### கர்த்தருடைய தூதனானவரின் செயல்பாடுகள்

பழைய ஏற்பாட்டில் குறைந்தது 23 இடங்களில் கர்த்தருடைய தூதனானவரின் செயல்பாடுகள் குறித்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய தூதனானவர் சாராளின் வேலைக்காரியாகிய ஆகார் வனாந்தரத்தில் அலைந்து திரிந்து கொண்டிருந்த வேளையில் அவளுக்கு முன்பாகத் தோன்றி அவளுக்கு ஒரு குமாரனையும் திரளான சந்ததியையும் வாக்குத்தத்தம் பண்ணினார். அப்பொழுது அவள், என்னைக் காண்பவரை, நானும் இவ்விடத்தில் கண்டேன், அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள் [ஆதி. 16:7-14].

கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே ஆபிரகாமுக்கு தரிசனமானார் [ஆதி. 18:1-2] ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்து பார்க்கும் போது மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள் [ஆதி 18:1-2] **ஆபிரகாம் அந்த மூன்று பேருக்கும் ஆகாரம் கொடுத்தான்.** அந்த மூன்று பேரில் ஒருவர் ஆபிரகாமிடம் உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார் [18:10] இதைக் கேட்ட சாராள் நகைத்த போது, கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ என்றார் [18:14] மேலும், அவர் சோதோமின் நிலைமையைப் பார்த்தறியும்படி தாம் வந்திறங்கினதாக ஆபிரகாமிடம் சொன்னார். ஆபிராம் அந்த மூன்று பேரில் ஒருவரை **சர்வலோக நியாயாதிபதி** என்று கண்டார் [18:25] கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடிந்த பின்பு போய்விட்டார் ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான்[18:32] அதன் பின்பு, கர்த்தர் சோதோமின் மேலும், கொமொராவின் மேலும், வானத்தி லிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப் பண்ணினார் என்று வாசிக்கிறோம். 19:24, ஆபிரகாமை சந்தித்த மூன்று நபர்களில் ஒருவர் சாதாரணமான மனிதனைப் போல் தோற்றமளித்தாலும் உண்மையில், அந்த நாளில் ஆபிரகாமைச் சந்தித்தது யெகோவா வாகிய கர்த்தர் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஆதியாகமம் 22:9-18 வசனங்கள் ஆபிரகாம் ஈசாக்கை பலியிட்ட சம்பவத்தைப் பதிவு செய்திருக்கின்றன. ஆபிரகாம் தன் குமாரனைப் பலியிடுவதற்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார் [ 22:11]. பின்பு ஆபிரகாம் பலி செலுத்துவதற்குப் புதரில் ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டபோது, அதைப்பிடித்து அதைத் தன், குமாரனுக்குப் பதிலாகத் தகன பலியிட்டான். ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே, என்று பேரிட்டான். அதினாலே, கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும் என்று இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது. [22:14]

ஆதியாகமம் [28:10-17] வசனங்கள் பெத்தேலிலே யாக்கோபு கண்ட சொப்பனத்தைப் பற்றி சொல்கிறது. அந்த சொப்பனத்தில் ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே, தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்கு கிறவர்களுமாய் இருந்தார்கள். ஆதியாகமம் 31:11-13 வசனங்களில், யாக்கோபு சொப்பனத்தில் கண்ட பெத்தேலின் தேவன் கர்த்தருடைய தூதனானவர்தான் என்று மோசே சொல்கிறார்.

யாக்கோபு தன் சொந்த ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது ஒரு மனுஷனோடு பொழுதுவிடியும் வரை போராடினான். அந்த மனுஷன் யாக்கோபிடம் உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும், தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்; அப்பொழுது யாக்கோபு நான் தேவனை

முகமுகமாய்க் கண்டேன் என்று சொல்லி அந்த ஸ்தலத்திற்கு **பெனியேல்** என்று பேரிட்டான் [ஆதி. 32:24-32]. பிற்பாடு ஓசியா தீர்க்கதரிசி யாக்கோபைப்பற்றி சொல்லும் போது, அவன் தாயின் கர்ப்பத்திலே தன் சகோதரனுடைய குதிங்காலைப் பிடித்தான்; தன் பெலத்தினாலே, தேவனோடு போராடினான். அவன் தூதனான வரோடே போராடி மேற்கொண்டான், பெத்தேலிலே, அவர் அவனைக் கண்டு சந்தித்து அவ்விடத்திலும் நம்மோடே பேசினார்;கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன் யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம் [ஓசியா 12:3-5] யாக்கோபு மரணப்படுக்கையில் இருக்கும்போது, தன் குமாரரை தேவனுடைய பெயரால், அதாவது, தன்னை எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி மீட்ட தூதனானவருடைய பெயரால் ஆசீர்வதித்தார் [ஆதி. 48: 15,16].

மோசே, எரிகிற முட்செடியைப் பார்த்தபோது, அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜீவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது, மோசே, முட்செடி அக்கினியால் ஜீவலித்து எரிந்தும், இந்த முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன நான் கிட்டபோய், இந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பேன் என்று அதைப் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார்; முட் செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: இங்கே கிட்டிச் சேராயாக, உன் கால்களில் இருக்கிற பாதரட்சயைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார் [யாத்3:2-5]. மேலும், மோசே தேவனை நோக்கி இஸ்ரவேல் புத்திரர், உம்முடைய நாமம் என்ன என்று கேட்டால். நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான்.அதற்கு தேவன்: **இருக்கிறவறாக இருக்கிறேன்** என்று மோசேடனே சொல்லி இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார் [யாத் 3:13-14].

இஸ்ரவேல், ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேறியபோது, இஸ்ரவேலின் சேனைக்கு முன்பாக நடந்தது கர்த்தருடைய தூதனானவர் தான் என்று பார்க்கிறோம் [யாத். 14:19,20]. தம்முடைய தூதனானவரைக் குறித்து யெகோவா இஸ்ரவேலரை எச்சரித்தார் [யாத். 23:20-23]. வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய் சேர்க்கிற தற்கும் இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். அவர் சமூகத்தில் எச்சரிக்கையாயிருந்து அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது. நீ அவர் வாக்கை நன்றாய் கேட்டு, நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன்.

என் தூதனானவர் உனக்கு முன் சென்று எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டு போவார்; அவர்களை நான் அதம் பண்ணுவேன். இங்கே இஸ்ரவேலர்கள் கர்த்தருடைய தூதனானவருக்குக் கீழ்ப்படியும் போது, அவர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார் என்பதை கவனியுங்கள். கன்றுக்குட்டி சம்பவத்தில் தேவன் இந்த விசேஷித்த தூதனை விலக்கிக்கொண்டு சாதாரண தூதனை அனுப்புவதாக வாக்குத்தத்தம் பண்ணினார். இது மோசேயையும் அவர் எந்த ஜனங்களுக்காகப் பரிந்து பேசினாரோ அந்த ஜனங்களையும் அதிகமாகத் துக்கப்படுத்தியது. ஆனாலும், அவர்கள் மனந் திரும்பியதை அடுத்து, தேவன் தம்முடைய தூதன் அவர்களை வழிநடத்தும்படி அனுப்பிக் கொடுத்தர் [யாத். 33:1–3; 12–16].

யோசுவா, எரிகோவின் வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார். உருவின பட்டயம் அவர் கையில் இருந்தது. யோசுவா அவரிடத்தில் போய்: நீர் எங்களைச் சேர்த்தவரோ, எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான். அதற்கு அவர்: அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன் என்றார்; அப்பொழுது யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டு, அவரை நோக்கி: என் ஆண்டவர் தமது அடியேனுக்குச் சொல்லுகிறது என்னவென்று கேட்டான். அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி; உன் கால்களிருக்கிற பாதரட்சகளைக் கழற்றிப் போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்; யோசுவா அப்படியே செய்தான் [யோசுவா 5:13–15]. தொடர்ச்சியாக யோசுவா 6:2–ல் பார்க்கும் போது, கர்த்தர் யோசுவாவை நோக்கி என்று வாசிக்கிறோம். எனவே, யோசுவா கர்த்தருடைய தூதானவருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டான் என்பது முந்தைய வசனங்களில் தெளிவாகிறது.

நியாதிபதிகள் புத்தகத்தில் மூன்று முறை கர்த்தருடைய தூதனானவர் தோன்றியது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. போகீமிலே கர்த்தருடைய தூதனானவர் ஜனங்களுக்கு முன்பாகத் தோன்றி அவர் களுடைய கீழ்ப்படியாமைக்காக அவர்களைக் கடிந்துகொண்டார் [2:1–5]. இரண்டாவதாக, கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு முன்பாகத் தோன்றி மீதியானியர்களிடமிருந்து இஸ்ரவேலைக் காப்பாற்றும்படி கட்டளையிட்டார். இங்கே, கர்த்தருடைய தூதனானவர் யேகோவாவாகிய கர்த்தர் என்றழைக்கப்படுவதைக் கவனியுங்கள் [ நியா. 6:11–14] நியாயாதிபதிகள் 13–ம் அதிகாரத்தில் கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்கும், அவருடைய மனைவிக்கும் தரிசனமாகி ஒரு குமாரனைப் பெறுவாய் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். மனோவா, கர்த்தருடைய தூதனானவரை புசிக்கச் சொன்னபோது, கர்த்தருடைய தூதானவர் நீ அதை

கர்த்தருக்குப் பலியாகச் செலுத்துவாயாக என்று கட்டளையிட்டார் [13:16]. கர்த்தருடைய தூதனானவர் மனோவை நோக்கி: நீ என்னை இருக்கச் சொன்னாலும் நான் உன் உணவை புசியேன்! நீ சர்வாங்க தகன பலி இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்றார் அவர் கர்த்தருடைய தூதன் என்பதை மனோவா அறியாதிருந்தான். அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி, உம்முடைய நாமம் என்ன என்று கேட்டான். அதற்குக் கர்த்தருடைய தூதனானவர்: என் நாமம் என்ன என்று நீ கேட்க வேண்டியது என்ன? அது அதிசயம் என்றார். [நியா. 13:16-158].

[II இராஜா. 19:33-36] வசனங்களில் யேகோவா கர்த்தர் எருசலேமையும், எசேக்கியா இராஜாவையும் அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிபின் சேனைகளிடமிருந்து, தப்புவிப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினார். கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளையத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்.

அடுத்ததாக, [I நாளா. 21:9-30] வசனங்களில், தாவீது தன் படைபலத்தை கணக்கெடுத்தன் நிமித்தம் பாவம் செய்த போது, தேவன் தம்முடைய தூதனைக்கொண்டு தேசத்திலே பஞ்சத்தை ஏற்படுத்தினார். தாவீது தன் கண்களை ஏறெடுத்து, பூமிக்கும் வானத்திற்கும் நடுவே நிற்கிற கர்த்தருடைய தூதன் உருவின பட்டயத்தைத் தன் கையில் பிடித்து, அதை எருசலேமின்மேல் நீட்டியிருக்கக் கண்டான்: அப்பொழுது மூப்பர்களும் இரட்டுப் போர்த்துக்கொண்டு, முகங்குப்புற விழுந்தார்கள். [21:16]

தானியேல் கி.மு.533 -ல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபோது, ஒரு தரிசனங் கண்டார் [தானி. 10:5,6] என் கண்களை ஏறெடுக்கையில், சணல் வஸ்திரந்தரித்து, தமது அரையில் ஊப்பாசின் தங்கக்கச்சையை கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன். அவருடைய சரீரம் படிகப்பச்சையைப்போலவும், அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப் போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப்போலவும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும், அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக் கூட்டத்தின் ஆரவாரத்தைப் போலவும் இருந்தது. தானியேல் அந்தப் பெரிய தரிசனத்தைக் கண்ட போது, அவருடைய பெலனெல்லாம் போயிற்று, அவருடைய உருவம் மாறி வாடிப் போயிற்று. கர்த்தருடைய தூதன் அத்தேசத்தின் வருங்காலத்தை தானியேலுக்கு அறிவிக்கும்படி தரிசனத்தில் தோன்றினார் [10:5-14].

**கர்த்தருடைய தூதனைப் பற்றிய உண்மைகளின் சுருக்கம்:**

கர்த்தருடைய தூதனானவர் என்று தொடங்குகிற சில வசனங்களை நாம் பார்த்தோம். ஆனால், அந்தப் பெயர் நாம் [யாத்.

3:2-6] வசனங்களில் பார்ப்பது போல கர்த்தர், தேவன் என்று விவரித்துக் கொண்டே போவதை நாம் காண முடியும். கர்த்தருடைய தூதனானவருக்குத் தேவனுடைய வல்லமையும் அதிகாரமும் இருப்பதை நாம் காண முடியும். மேலும், கர்த்தருடைய தூதனால் வருங்காலத்தை அறிவிக்க முடிகிறது [தானி. 9:14]. அதேபோல், இரட்சிக்கவும், அழிக்கவும் வல்லமை இருந்திருக்கிறது [I நாள. 21:14, 15] கர்த்தருடைய தூதனை நாம் தொழுதுகொள்ளும்படி கட்டளை பெற்றிருக்கிறோம். ஆனால், தேவதூதர்களை நாம் நிச்சயமாக தொழுதுகொள்ளக் கூடாது[வெளி 22:8,9].

**அப்படியென்றால் யார் இந்த கர்த்தருடைய தூதனானவர்?**

கர்த்தருடைய தூதனானவர் நிச்சயமாக உருவாக்கப்பட்ட ஒருவரல்ல. இவர் ஒரு மனிதனுமல்ல. வேதாகமத்தின் இடங்களில் மனித உருவத்தில் இவர் இருப்பதை நாம் பார்க்கிறோம். அதே நேரத்தில் இவர் பிதாவாகிய தேவனுமல்ல. ஏனென்றால், அப்போஸ்தலனாகிய யோவான் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்று சொல்லியிருக்கிறார் [ யோவான் 1:18].

கீழ்க்காணும் காரியங்கள் இந்த வல்லமையுள்ள கர்த்தருடைய தூதனானவர் கிறிஸ்துவாகிய தேவனுடைய வார்த்தை என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். கர்த்தருடைய தூதனானவர் மோசேயிடம் தம்முடைய நாமம் **இருக்கிறவராகவே இருக்கிறேன்** என்று சொன்னார். இயேசு கிறிஸ்துவும் **நான் இருக்கிறேன்** என்று சொன்னார் [யோவான் 8:58]. கர்த்தருடைய தூதனானவர் இஸ்ரவேலர்களை வனாந்தரத்தின் வழியாய் வழிநடத்தி அவர்களுடைய தேவைகள் எல்லாவற்றையும் சந்தித்தார் [யாத்திராகமம் 14:19,20]. மோசே வனாந்திரத்தில் ஜனங்கள் தண்ணீர் குடிக்கத்தக்க கன்மலையை அடிக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டதாகச் சொல்கிறார். ஆனால், பவுல் கொரிந்தியர் 10:4 ல் அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே என்றார்.

யோசுவா புத்தகத்தில் கர்த்தருடைய தூதனானவர் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இருப்பதை நம்மால் காண முடியும். வெளிப் படுத்தின விசேஷம் 19 ஆம் அதிகாரத்தில் கர்த்தருடைய தூதனை பரலோக சேனையின் தலைவனாகக் காண்கிறோம். யோவான் அப்போஸ்தலன் 13 ஆம் வசனத்தில் தேவனுடைய வார்த்தை என்று குறிப்பிடுகிறார். யோவான் சுவிசேஷப் புத்தகத்தில் யோவான் **தேவனுடைய வார்த்தையாகிய** கிறிஸ்து மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார் என்று குறிப்பிடுகிறார் [யோவான் 1:14] கர்த்தருடைய தூதனானவர் மனோவாவிடம் தம்முடைய பெயர் **அதிசயம்** என்று சொன்னார் [நியாயாதிபதிகள் 13:16-18]. ஏசாயா தீர்க்க தரிசி தன்னுடைய பிரசித்தி பெற்ற தீர்க்கதரிசனத்தில் அவர் நாமம் அதிசயமானவர் என்று சொல்லியிருக்கிறார் [ஏசாயா 9:6]. மேலும், ஏசாயா கர்த்தருடைய

தூதனானவரைப் பற்றிச் சொல்லும் போது **அவருடைய சமூகத்தின் தூதனானவர்** என்று குறிப்பிடுகிறார் [63:9]. எபிரெய ஆசிரியர் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும்போது, இவர் அவருடைய தன்மையின் **சொரூபமாயிருக்கிறார்** என்று சொல்கிறார்[எபிரெயர் 1:3].

அதியாகமம் 28 -ம் அதிகாரத்தில் யாக்கோபு ஒரு செப்பனங் கண்டார். அதில் ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவ தூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்றார் என்று வாசிக்கிறோம். யோவான் 1:51 ல் இயேசு கிறிஸ்து தம்மை அந்த **ஏணியாகச்** சொல்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் ஆராதிக்கப்படத்தக்கவர் [யோவான் 5:4]. ஆனால், சிருஷ்டிக்கப்பட்ட தேவ தூதர்களோ அல்லது மனிதர்களோ ஆராதிக்கப்படதக்கவர்களல்ல [அப்போஸ்தலர் 10:25,26; வெளி 22:89]. நாம் இதுகாறும் பார்த்த வசனங்களில் கர்த்தருடைய தூதனானவர் யேகோவா என்று திரும்பத் திரும்ப அழைக்கப்படுகிறார், இயேசு கிறிஸ்துவும் **யேகோவா** என்று அழைக்கப்படுகிறார். ஏசாயா தீர்க்கதரிசியும் கூட **யேகோவா** அல்லது கர்த்தரை அல்லாமல் ரட்சகர் இல்லை என்று தெளிவுபடுத்தியிருக்கிறார் [ஏசாயா 43:11]. அப்போஸ்தலனாகிய பவுல் நம் இயேசுவை மகாதேவனும் இரட்சகரும் என்று விவரிக்கிறார் [தீத்து 2:13]. இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது நம் இயேசு கிறிஸ்து **யேகோவா** அல்லது **கர்த்தராயிருக்கிறார்** என்பது நிச்சயம். தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர்கள் யேகோவா என்னும் வார்த்தை நித்தியமான சுயத்தோற்றமுள்ள ஒருவரைத்தான் குறிக்கும் என்கின்றனர். அந்த வகையில் பார்க்கும்போது இவ்வார்த்தை **பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர்** ஆகிய மூவருக்கும் பொருந்தும்.

தானியேல் கர்த்தருடைய தூதனை அவருடைய முழு மகிமையில் கண்டார் [தானி.10:5,6]. யோவான் அப்போஸ்தலனும் இந்த மகிமையான தூதனை பத்மு தீவில் கண்டார் [வெளி. 1:12-18], நாம் இதுகாறும் பார்த்த காரியங்கள் அப்போஸ்தலனாகிய யோவான் [யோவான் 1:1-3]ல் பதிவு செய்திருக்கிறபடி நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நித்தியத்திலிருந்தே பிதாவாகிய தேவனோடு இருந்து வருகிறார் என்பது நிரூபணமாகிறது. நம் இரட்சகர் இப்பூமியில் மரியாளின் குமாரனாகப் பிறப்பதற்கு முன்னதாகவே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக இருந்து செய்த செயல்களைச் சொல்கின்றன. இந்த வேத வாக்கியங்களில் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டின் நாட்களில் வல்லமை பொருந்திய கர்த்தருடைய தூதனாக இருந்து மனித இனத்தை ஆசீர்வதித்து, இப்போது நசரேனாகிய இயேசுவாக இருந்து நம்மையெல்லாம் ஆசீர்வதித்து வழிநடத்தி கொண்டிருக்கிற மேசியாவை நாம் கனப்படுத்தி, போற்றித் துதிப்போமாக! ✞

# நன்றியுணர்வு!

கர்த்தாவே! எப்பொழுதும் ஜெபத்தின் மூலமாக உம்மிடம்
கிட்டிச்சேர வாய்ப்பு தந்தமைக்காக என்றென்றும்
உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன்!

உம்முடைய சிங்காசனத்திற்கு முன்பாக முழங்கால்படியிடும்
போதெல்லாம் என்னை என்றும் காண்கிறீரே
உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன்!

இப்போதும்கூட இந்தநள்ளிரவில் வெள்ளி நிலவின்
வெளிச்சத்தில் உம் சமூகத்தை நோக்கிப் பார்ப்பதால்
உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன்!

பரலோக நம்பிக்கையைத் தந்து வாழ்நாள் முழுதும்
கரம்பிடித்து, பாதுகாத்து வழிநடத்துகின்றீரே
உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன்!

நாதியற்ற நான் இந்தப்பீதி நிறைந்த உலகில்
உம்மையே என்னை மீதியாய் வைத்திருப்பதால்
உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன்!

இவ்வுலகில் நான் சார்ந்திருக்கத்தக்கதாக உம்மைத்தவிர
என்மீது அன்புகொள்ள வேறொருவருமில்லை என்பதால்
உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன்!

இரட்சிப்பு

# ஐசுவரியவான் எதைக் கண்டான்?
## *What The Rich Man Saw?*
*David R.Pharr*

**தொ**லைக்காட்சியில் நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பப்பட்டது. அதில் பணக்காரர்கள் மற்றும் புகழ் பெற்றவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைக் காட்டினார்கள். அந்த நிகழ்ச்சி உலகிலுள்ள பணக் காரர்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வீட்டுக்குச் சொந்தக் காரர்கள், தனிவிமானங்களில் செல்பவர்கள், உல்லாசக் கப்பல்களில் பயணிப்பவர்களைப் பற்றியது. பலர் ஆர்வக்கோளாறு காரணமாக, தொலைக்காட்சியில் தோன்றினவர்கள் என்ன உடை அணிந்திருக்கிறார்கள், எந்த வாகனத்தை ஓட்டுகிறார்கள், எவ்வளவு பணம் செலவு செய் கிறார்கள் என்பதை அறிய விரும் பினார்கள். எவ்வித சந்தேகமு மின்றி, இந்த ஆர்வமே ஆச்சரியமாக மாறி, இதுவே பொருளாசைக்கும் வழிவகுத்து விட்டது [1தீமோ. 6:9,10].



வேதாகமம், ஐசுவரியவானாக இருந்து, ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த ஒரு மனிதனைப் பற்றிச் சொல்லுகிறது. அவன் ஒரு பாதுகாப்பான வீட்டில் வாழ்ந்தான். விலையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்தான். சுவைமிக்க ஆகாரங்களை ருசித்தான். அவன், செல்வத்தைத் தன் பெற்றோர்களிடமிருந்து சுதந்திரமாகப் பெற்றிருக்கலாம் அல்லது ஒரு புத்திசாலியான வியாபாரியாக இருந்து சம்பாதித்திருக்கலாம். மேலும், விவேகமான முதலீட்டினால் பொருள் ஈட்டியிருக்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, இந்த மனிதன் தன் வாழ்க்கையை எப்படி ஆடம்பரமாக வாழ்ந்திருக்கிறான் என்று தெளிவாக விளக்குகிறார்.ஆனால், இந்த மனிதனுடைய செல்வம்,

இவனை சிறந்த மனிதனாக மாற்றவில்லை. மேலும், இவன் தன் பாவங்களுக்கு மன்னிப்பைக் காணமுடியவில்லை. அதன் பின்பு, ஒரு நாள் வந்தது. செத்த அவன் சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது. ஆனால், அவன் ஆத்துமா பாதாளத்திலே வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, அவன் தான் இருக்கும் இடத்தைக் கண்டான் [லூக்கா 16:23].

ஓர் இழந்துபோன ஆத்துமாவையுடையவன் தன் கண்களைத் திறந்து மரணத்தின் மறுபுறம் பார்த்த போது எதைக் கண்டான்? அவன் அநேகர் நம்ப மறுக்கின்ற ஒன்றைக் கண்டான். அதாவது, இவ்வுலகத்திற்கு அப்பால், ஓர் உணர்வுள்ள உலகம் இருப்பதைக் கண்டான். ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது [ யாக்கோபு 2:26]. பூமிக்குரிய சரீரம் செத்து அழிந்து போகிறது. ஆனால், ஆவி அழியாமல் என்றென்றும் வாழுகின்றது. மரணம் மனிதனைத் தாக்கும்போது, இரட்சிக்கப்பட்டவர்களின் ஆத்துமாக்களுக்காகத் தேவதூதர்கள் இறங்கி வந்தார்கள். அதாவது, தூதர்கள் வந்து, லாசருவை ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய்விட்டார்கள். அதேவேளையில், இந்த ஐசுவரியவான் கண் விழித்துப் பார்த்தபோது, தான் வேதனைக்குரிய இடத்திலே இருப்பதைக் கண்டான். இதினிமித்தம் இந்த ஐசுவரியவான் அக்கினி ஜீவாலை உண்மை என்பதை உணர்ந்து கொண்டான். மேலும், இந்த அக்கினி ஜீவலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான் [லூக்கா 16:24].

இந்த ஐசுவரியவான் பாதாளத்தில் அதன் மறுபக்கத்தைப் பார்க்க அனுமதிக்கப்பட்டபடியால், பரதீசிலிருந்த தேறுதலின் ஸ்தலத்தைக் காண முடிந்தது. ஆனால், அவனால், அதை அனுபவிக்க முடியாத அவலநிலை. கர்த்தருக்குள் மரிக்கிறவர்களுக்கு அருமையான வாக்குதத்தங்கள் தேவனால் அருளப்பட்டிருக்கின்றன. [வெளி. 14:13]. அதேவேளையில், அந்த ஆறுதலின் ஸதலத்திலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இந்த ஐசுவரியவான் இருக்கும் வேதனை இடத்திற்குக் கொண்டு வர முடியாது!

இந்த ஐசுவரியவான் தான் என்றென்றும் தப்பிக்க முடியாத சிறையில் இருந்ததைக் கண்டான். அதுமாத்திரமல்ல, அங்கே யாரும் கடக்க முடியாத பெரும் பிளவு இருப்பதையும் கண்டான். பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தக்காரச் சங்கலிகளினாலே

கட்டி, நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தது போல [II பேதுரு 2:4], கீழ்ப்படியாமையில் வாழ்ந்து மரித்தவர்கள் காவலிலுள்ள ஆவிகளைப் போல் வைக்கப் பட்டிருக்கிறார்கள் [I பேதுரு 3:19].


இந்த ஐசுவரியவான் கண்ட மற்றுமொரு காரியம், இப்பூமிக்குரிய வாழ்க்கையில் தன்னால் நிராகரிக்கப்பட்ட, தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் மரணத்தின்போது மீட்டெடுக்க முடியாது என்பது தான். தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவரா யிருக்கிறார் [எபே.2:7]. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவரா யிருக்கிறார் [I தீமோ.2:4]. இந்த ஐசுவரியவான், இப்பூமியில் வாழ்ந்த போது, இரட்சிக்கப்படும்படியாக எத்தனையோ வாய்ப்புகள் கொடுக்கப் பட்டன. ஆனால், அவன் அவைகளையெல்லாம் நிராகரித்து விட்டு பாவத்திலே மரித்தான் [யோவான் 8: 21,24].

இந்த ஐசுவரியவான், இப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு, தேவனுடைய வார்த்தையால் மட்டுமே வராமல் தடுக்க முடியும் என்பதைக் கண்டான். மேலும், இவன் மரித்தோரிலிருந்து ஒருவர் போய் பூமியிலுள்ள தன்னுடைய சகோதரர்களுக்குத் தேவனுடைய வார்த்தையைக் அறிவிக்க ஆசைப்பட்டான். ஆனால், அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும், நம்பமாட்டார்கள் என்றான் [லூக்கா 16:31]. ஒருவருக்கு இரட்சிப்பு என்னும் வெகுமதி தேவனுடைய வார்த்தைகள் மூலமாக வழங்கப்படுகிறது. இது ஒருவரை மனந்திரும்பச் செய்யும். மனந்திரும்பாதவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும். முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டிருக்கிறது [எபி. 2:3].

ஒருவர் நீங்கள் மரித்த அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் எங்கே இருப்பீர்கள்? என்று கேட்டார். லூக்கா 16:19- 31- ல், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அதற்கான தேடலைக் கொடுத்துவிட்டார். ✞

# பரிசுத்தவான்களின் விடாமுயற்சி
## The Perseverance of the Saints

Tim. D. Shoemaker




## தீர்மானம், விடாமுயற்சி, கடின உழைப்பு

சிலவேளைகளில் உலகம் போய்கொண்டிருக்கும் போக்கை நாம் பார்க்கும்போது, கிறிஸ்தவ வாழ்க்கைப் போராட்டத்தில் தொடர்ந்து போராடுவது கடினமாகிவிடுகிறது. ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிற காரியத்தில் அதாவது அப்போராட்டத்தில் உலகம் மனிதனை வீழ்த்தி வென்றுவிடுகிறது. இதன் காரணமாக அநேகர் கிறிஸ்தவர்களாக மாறமாட்டார்கள். இன்னும் கிறிஸ்தவர்களாக இருக்கும் சிலரும் சோர்வடைந்து, கிறிஸ்தவத்தை விட்டே வெளியேறி விடுகிறார்கள். மாபெரும் தேவமனிதர்கள் கூட தங்கள் வாழ்க்கை நிகழ்வுகளால் வலுவிழந்து விசுவாசத்தை விட்டு வெளியேறுவதற்கருகில் வந்துவிட்டார்கள். ஆனால், சங்கீதக்காரன், சங்கீதம் 73:23 –ல் இவ்விதமாகத் தன்னுடைய உணர்வுகளை

வெளிப்படுத்துகிறார். தூய்மையான வாழ்க்கையை வாழத் தன்னால் முடிந்தவைகளைச் செய்தபோதிலும், அவைகளெல்லாம் விருதாவாகி விட்டதாகவும் நாள் முழுவதும் தான் உபத்திரவப் பட்டதாகவும் புலம்புகிறார் [ சங்.73:13,14] அதேவேளையில், தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து துன்மார்க்கருடைய முடிவைக் கவனித்து உணருமளவும், அது அவர் பார்வைக்கு விசனமாயிருந்தது [சங்.73:17,18]. நம்முடைய வாழ்க்கையில் பின்னடைவுகளும், போரட்டங்களும், நிராசைகளும் இருந்தாலும் இறுதியில் தேவனுடைய சித்தமே வெற்றிபெறும். ஆகையால், தேவனுக்கு உண்மையாயிருப்பவர்கள் குற்றமற்றவர்களாகத் தீர்க்கப்பட்டு நீதிமான்களாக்கப்படுவார்கள்.

அமெரிக்க ஐக்கிய தேசத்தின் இருபத்தெட்டாவது ஜனாதிபதி Woodrow Wilson என்பவர் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்விதமாகச் சென்னார். நான் இப்போது வெற்றியடைந்து பின்னால் தோல்வியைத் தழுவுவதை விட, இப்போது தோல்வியடைந்து பின்னால் வெற்றிபெறும் காரணத்திற்காக, இப்போது தோல்வியைத் தழுவுவதையே விரும்புகிறேன் என்றார். கிறிஸ்தவர்களும் இன்று இதே சூழ்நிலையில் தான் தங்கள் விசுவாசத்தைக் காண்கிறார்கள். இன்று நாம் இவ்வுலகில் பாடுகளை அனுபவிக்கலாம். ஆனால், நிச்சயம் ஒருநாள் பரலோகம் என்ற வெற்றியைப் பெறப்போகிறோம் என்ற காரணத்திற்காக இப்போது நாம் பாடுகள் என்னும் தோல்வியைச் சகித்துக் கொண்டிருக்கிறோம். அதேவேளையில், துன்மார்க்கர் ஒருநாள் நரகம் என்னும் தோல்வியைத் தழுவும் காரணத்திற்காக இப்போது நன்மையென்னும் வெற்றியைப் பெற்றுக்கொண்டிருக் கிறார்கள் என்று வேதாகமத்தின் வெளிச்சத்தில் காண்பதினால் ஆறுதல் அடைகிறோம்.

வெளிப்படுத்தின விசேஷம் பதிமூன்றாம் அதிகாரத்தில், சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வருவதை நாம் காண்கிறோம். மேலும், அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது மல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும், பாஷைக்காரர் மேலும் ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது[வச.7]. இவ்வசனத்தைப் பார்க்கும் போது, கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை

பிரகாசமாயிராதது போல் தோற்றமளிக்கிறது. ஆனால், அப்படிப்பட்டவர்கள் தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருக்கிற காரியம் முடிந்து போவதில்லை என்பது தான் [வெளி. அதிகாரம் பதிமூன்று]. மேலும், அடுத்த அதிகாரத்தில் யோவான் ஆசிரியர் இங்ஙனம் எழுதுகிறார். **தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் கற்றுக்கொள்ளுகிறவர்காளாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்** என்று [14:12]. ஆரம்பத்தில், தேல்வியடைவது போல் தோன்றினாலும், இறுதியில் கிறிஸ்தவர்களே வெற்றி பெறுவார்கள், உலகம் தோற்றுப்போகும். இதை கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசப் வாழ்க்கையில் புரிந்துகொள்ளும்போது, கிறிஸ்துவுக்குள்ளான அவர்களுடைய வாழ்க்கையை பற்றிய கண்ணோட்டம் மிகச்சிறந்ததாக அமைந்து ஆறுதல்படுத்தும். இதினிமித்தம் தான் கிறிஸ்தவர்கள் பொறுமையோடு பாடுகளைச் சகிக்கவேண்டும். அதேவேளையில், உலகத்தில் காரியங்களைப் பின்பற்றுபவர்கள் என்றென்றும் வேதனைப்படுவார்கள், அவர்களுக்கு என்றென்றும் இளைப்பாறுதல் இராது. வெளி 14:11- ல் அவர்களுடைய வாதையின்புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது என்பதைக் கிறிஸ்தவர்களாகிய நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேலும், கிறிஸ்தவர்களுடைய வெற்றிக்கான மகுடம் என்றென்றும் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை வெளி. 14:13-ல் நாம் காண்கிறோம். பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று. உண்மையாகவே பாடுகள் வழியாய் சோர்வடைந்திருக்கும் கிறிஸ்தவர்களுக்கும், அவரைப் பின்பற்றுகிற அனைவருக்கம் இவ்வசனம் மிகுந்த ஆறுதலாக இருக்கிறது. இதுதான் பரிசுத்தவான்களின் விடாமுயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். I யோவான் 4:4 – நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.' ✝

# இரட்சிப்பு
# ஒருவர் கிறிஸ்தவராகும்படி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறார்
## *One Is Baptized Into Christ To Become a Christian*
*Sunny David*



சமீபத்தில் நான் ஒரு புத்தகத்தை வாங்கினேன். அப்புத்தகத்தின் பெயர் **விசுவாசித்து ஞானஸ்நானம் பெறு** என்பதாகும். இப்புத்தகத்தின் ஆசிரியர் ஞானஸ்நானம் என்பது உட்புறமான இரட்சிப்புக்கு வெளிப்புறமான அடையாளமாயிருக்கிறது என்றும், மற்றுமொரு இடத்தில் அவர் அப்போஸ்தலர் 2:38 –ம் வசனத்தை விளக்கும் போது, ஒருவர் தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படவும், பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறவும் மனந்திரும்பினால் போதும் என்றும் துணிகரமாக எழுதியிருக்கிறார். ஒரு தவறை நிரூபிப்பதற்கு ஒருவர் எப்படி இத்தனை துணிச்சலாக எழுதமுடியும் என்று தெரியவில்லை. அப்.2:38 ல் இப்படித்தான் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? வேதாகமம் தெளிவாக இவ்விதம் சொல்கிறது. **பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று.** ஆகவே, ஒருவர் பாவமன்னிப்பைப் பெறவேண்டுமென்றால், அவர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று வேதாகமம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. மாறாக, வெறுமனே மனந்திரும்புதல் மாத்திரம் போதுமானதல்ல.

இப்புத்தகத்தின் ஆசிரியர் மற்றுமொறு இடத்தில், ஒருவர் கிறிஸ்தவராக மாறுவதற்காக ஞானஸ்நானம் பெறுவதில்லை. மாறாக, தன்னை ஒரு கிறிஸ்தவனாகக் காட்டிக்கொள்வதற்காக ஞானஸ்நானம் பெறுகிறார் என்று எழுதுகிறார். வேதாகமம் கலா.3:27 **கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே என்று** தெளிவாக்குகிறது. ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக வராமல் அல்லது கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளாமல் கிறிஸ்தவராக முடியுமா? ஒருவர் கிறிஸ்துவை எப்படித் தரித்துக்கொள்கிறார்? **கிறிஸ்துவுக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருகிறது.** [கொலோ.1:14] என்று வேதாகமம்தெளிவாகப் போதிக்கிறபடியால், கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதினாலே தான் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பேதுரு, தன்னுடைய முதலாம் நிரூபத்தில் ஞானஸ்நானத்தை இரட்சிப்போடு தொடர்புபடுத்தி, நோவாவின் பேழை மற்றும் ஜலப்பிரளயத்தை மேற்கோள் காட்டுகிறார். **அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப் படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்கு தலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை யிலிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது** [1பேதுரு2:21]. இவ்வசனப் பகுதியிலிருந்து நாம் முடிவுக்கு வருகிற காரியம் என்னவென்றால், தண்ணீர் தான் நோவாவை அழிந்துபோன கீழ்ப்படியாமையின் சந்ததியிடமிருந்து பிரித்துக்காட்டியது. அதேபோல், தண்ணீர் ஞானஸ் நானந்தான் இன்று, கீழ்ப்படியாமல் அழிந்து போகிறவர்களிடமிருந்து இரட்சிக்கப்பட்டவர்களைப் பிரித்துக் காட்டுகிறது. ஞானஸ் நானத்திற்கு முன்பு ஒருவர் கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கிறார். ஞானஸ்நானத்திற்குப் பிறகு அவர் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார். கிறிஸ்துவுக்குள்ளாக புதிய ஜீவன் என்பது ஞானஸ்நானத்திற்குப் பிறகுதான், மாறாக, ஞானஸ்நானத்திற்கு முன்பாக அல்ல. ஒருவர் ஞானஸ்நானத்திற்கு முன்பாக பாவபாரத்தால் அழுத்தப்படுகிறார். ஞானஸ்நானம் பெறும்போது அவருடைய பாவங்கள் கழுவப்படுகின்றன [அப்.22:16]. ஒருவர் பாவ மன்னிப்பைப் பெறுவதற்காகவும் சுத்த மனசாட்சியைப் பெற்றுக் கொள்வதற்காகவும், ஞானஸ்நானத்தில் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுக்கிறார்.

இப்போது நாம் அப்போஸ்தலருடைமய நடபடிகள் புத்தகத்தி லிருந்து இரண்டு மனமாற்றச் சம்பவங்களைப் பார்ப்போம். சுவிசேஷ கனாகிய பிலிப்பு சமாரியா பட்டணத்துக்குப் போய் அங்கே தேவனுடைய ராஜ்ஜியத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்துப் பிரசங்கித்தார். அப்பொழுது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்.8:12). இதிலிருந்து தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்து வினுடைய நாமத்துக்கும் எற்றவைகளில் ஞானஸ்நானம் இடம் பெறாமல் இருந்திருக்காது. அப்படி இல்லையென்றால், சமாரியர்கள் எப்படி ஞானஸ்நானம் பெற்றிருக்க முடியும். கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதும், ஞானஸ்நானமும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவைகள்.

மேலும், இவ்வதிகாரத்தில் எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றச் சம்பவத்தைப் பற்றி நாம் வாசிக்கிறோம். தேவ மனிதனாகிய பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியிடம் இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார். வேதவசனம் சொல்லுகிறது, **இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்** (அப்.8:36-38). பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியிடம் இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார். எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார் என்றால் இது எதைக் காட்டுகிறது? ஞானஸ்நானத்தைப் பற்றிப் பேசாமல், கிறிஸ்துவைப் பற்றி ஒருவரிடம் உண்மையாகப் பிரசங்கிப்பது இயலாத காரியம் என்பது தெளிவாகிறது. நான் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறேன் என்றால், கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வாயிலாக ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதாயிருக்கிறது. பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:15,16) என்றார். ✝

சபை

# உறவுகள்

## *Relationships*

Clarence DeLoach, Jr

**நா**ம் தேவனோடு ஐக்கியத்தில் இருக்கும்போது, ஒருவரோடொருவர் சிறப்பான உறவைக் கொண்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலனாகிய யோவான் தெளிவுபடுத்தியிருக்கிறார். இந்த அருமையான உறவுதான் ஐக்கியம் என்றழைக்கப்படுகிறது.

ஐக்கியம் என்னும் வார்த்தை மூலபாஷையாகிய கிரேக்க பாஷையில் Koinonia என்று அழைக்கப்படுகிறது. தேவன், மீட்கப்பட்ட தம்முடைய ஜனங்களை சபை என்னும் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கிறார். சபையின் சூழலில் நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளர்வதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. நாம் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டிகளாக இருக்கிறபடியால், நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்குச் சாதகமான சூழல் சபையில் காணப்படுகிறது.

Koinonia என்னும் இந்த ஐக்கியம் ஆதித் திருச்சபையில் அருமையான குணாதிசயங்களுள் ஒன்றாக இருந்தது. இப் பண்பைப் பார்த்து ரோம உலகமே வியந்திருக்கிறது. ரோமக் கவிஞர்களே இப்பண்பைப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். ஆதித் திருச்சபை மக்கள் ஒருவருக்கொருவர் அதிக அக்கறையுடையவர்களாக இருந்திருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் உண்மையோடு பழகியிருக்கிறார்கள். மற்றவர்களுடைய தேவைகளைக் குறித்து உணர்வுடையவர்களாக இருந்திருக்கிறார்கள். இதைக்குறித்து லூக்கா சொல்லும்போது, **விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்** என்று சொல்கிறார் [அப்போஸ்தலர் 2:44].

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டபோது, அவர்கள் ஒருவரையொருவர் சமமாக ஏற்றுக் கொண்டார்கள். ஒருவொருக்கொருவர் திறந்த மனதோடு பேசினார்கள் மற்றும் ஆதரவாயிருந்தார்கள். ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய காயங்கள், பெலவீனங்கள், பிரச்சனைகள், கவலைகள் போன்றவற்றைப் பகிர்ந்து கொண்டார்கள். அவர்கள் உண்மையாகவே சகோதர சகோதரிகளாக இருந்தார்கள். கர்த்தருடைய ஆவிக்குரிய சரீரத்தில் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய இடத்தைக் கண்டார்கள். ஆவிக்குரிய குடும்பத்தில் ஒவ்வொருவரும் சொந்தம்

கொண்டாடினார்கள். சபையின் அங்கத்துவம் என்பது அந்நாட்களில், சபை பதிவேட்டில் இடம்பெற்ற ஒன்றாக இருக்ககூறவில்லை. மாறாக, அது ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உதவும் அலாதி அனுபவமாக இருந்தது.

முதல் நூற்றாண்டில் ஒற்றுமை ஓங்கும்படி வலியுறுத்தப் பட்டது. பிரிவினை கடுமையாகக் கண்டிக்கப்பட்டது. ஒருமித்த கருத்தின்மை ஐக்கியத்திற்கு அச்சுறுத்தலாக இருந்தது. எனவே, சபையில் எப்போதெல்லாம் பொறாமை, பெருமை, பட்சபாதம், சுயமையப் படுத்துதல் போன்றவைகள் தலைதூக்கினதோ, அப்போதெல்லாம் அவைகள் முறையாக கையாளப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், இவைகள்தான் பிரிவினையின் வேர்களாக இருக்கின்றன. பிரிவினை ஐக்கியத்தை அறவே அழித்துப் போடுகிறது [1கொரி.3].

இன்றைய நாட்களிலும், சபை வளரவேண்டுமென்றால் முதல் நூற்றாண்டில் பின்பற்றப்பட்ட காரியங்கள் தான் பின்பற்றப்பட வேண்டும். கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கும் ஐக்கியத்தை நாம் பக்தி வைராக்கியத்தோடு காத்துக் கொள்வோம். அதினிமித்தம் ஐக்கியத்தில் நாம் வளரமுடியும்! மேலும், ஐக்கியத்தால் பல ஆத்துமாக்களை நாம் சந்திக்க முடியும்.

Koinonia என்னும் ஐக்கியம் அன்பில் வேரூன்றப் பட்டிருக்கிறது. நாம் கிறிஸ்துவின் அன்பைப் பெற்றிருக்கிறபடியால், நம்மால் அவருக்கு நம் அன்பை திரும்பச் செலுத்த முடியும். அதேபோல் மற்றவர்களிடத்திலும் நாம் அன்பு செலுத்த முடியும். அன்பு இப்படித்தான் மகத்தான காரியங்களைச் செய்யும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் இதுபற்றி ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்யவிரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம் என்றும், உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக [ மத்.7:12;22:37] என்றும் எடுத்துரைப்பதிலிருந்து அன்பின் இலககணமாம் ஐக்கியத்தின் உறவை மேம்படுத்தியிருக்கிறார். ✝

***சபை அங்கத்துவம் என்பது, அந்நாட்களில் சபை பதிவேட்டில் இடம்பெற்ற ஒன்றாக இருக்கவில்லை. மாறாக, அது ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உதவும் அலாதி அனுபவமாக இருந்தது.***

சபை

# மூப்பர்களின் தகுதிகள்

## *Qualifications of Elders*

***Wayne Barrier***

**வே**தாகமத்தை நாம் முழுமையாகப் படித்துப் பார்க்கும்போது, வெளிப்படுத்தப்பட்டிருக்கும் காரியம் என்னவென்றால், புதிய ஏற்பாட்டு சபை மூப்பர்களால் கண்காணிக்கப்பட வேண்டும் [ I பேதுரு 5:2], விசாரிக்கப்பட வேண்டும் ( I தீமோ.5:17] சேவை அல்லது ஊழியத்திற்காக ஆயத்தமாக வேண்டும் [எபே. 4:12, 13], மற்றும் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டும் [அப்.20:28,29] ஆவிக்குரிய பிரகாரமாகப் போஷிக்கப்படவேண்டும் என்பதாயிருக்கிறது. இவர்கள் மூப்பர்கள், கண்காணிகள், மேய்ப்பர்கள் என்றும் வேத வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். மூப்பர்களின் பொறுப்பின் தன்மை கருதி, அதை வலியுறுத்தும் வகையில் வேதாகமத்தில் வித்தியாசமான பெயர்களால் அவர்கள் அழைக்கப் படுகிறார்கள். சபையை நடத்துவதற்கும் , கண்காணிப்பதற்கும் முழுமையான அதிகாரம் படைத்தவர்கள் மூப்பர்களே. சபையின் நீண்டகால நலனுக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் அவர்களுடைய சேவை அவசியமானதாகும். வேதவாக்கியங்களில் இடம் பெற்றிருக்கும் மூப்பர்களுக்குரிய கடுமையான தகுதியாம்சங்கள் வேத வாக்கியங்களில் கீழ்கண்டவாறு விவரிக்கப்பட்டிருக்கிறது.

கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை. ஆகையால், கண்காணியானவன், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கிதை யுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமை யுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசையில்லாத வனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்து கிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுடைவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன்

சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக் கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனுமாயிருக்க வேண்டும். நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும் படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே. குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும் அடக்காதவர் களென்றும் போரடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடைய வனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக் கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், மதுபானப்பிரிய மில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதிற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும் [ I தீமோ. 3:1–7; தீத்து 1:5–9].

இவ்வுலகிலே மிக முக்கியமான அமைப்பு சபை தான். சபையின் பணிதான் உலகிலேயே முக்கியமான பணியாயிருக்கிறது. கிறிஸ்துவே சபைக்குத் தலையாயிருக்கிறார் [எபே.1:22]. சபையை வழிநடத்துவதற்கு அதிகாரப்பூர்வமான ஒரே புத்தகம் வேதாகமம் தான் [ I I தீமோ.3:16]. மூப்பர்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை தேவனுடைய வார்த்தையை ஆதாரமாகக் கொண்டு மேற் பார்வையிட வேண்டும். [ I கொரி.12:29]. சபை ஆற்றல்மிக்க ஓர் அமைப்பாக இருக்க வேண்டுமென்றால், மூப்பர்கள் தகுதியான வர்களாக இருக்க வேண்டும். மூப்பர்களுக்கான தகுதியம்சங்கள் வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளைப் புரிந்து கொண்டு கடைபிடிப்பதற்கு எளிதாகவுமே இருக்கின்றன. ✞

# எழுந்து கட்டுவோம் வாருங்கள்
## *Let Us Rise Up And Build*

Gary C. Hampton

எருசலேம் நகரின் சுவர்கள் இடிபாடுகளுக்குள் கிடந்தபடியால், யூதர்கள் பலரால் பரியாசப் பொருளாகப் பார்க்கப்பட்டார்கள். தேவ தாசனாகிய நெகேமியா இடிந்து போன சுவர்களினிமித்தம் மனமடிந்து அதை மறுபடியும் கட்டியெழுப்ப வந்தார். அவர் இஸ்ரவேலின் அவமானத்தை எடுத்துப்போட விரும்பினார். நிச்சயமாகவே நெகேமியாவின் முயற்சியைக் குறைத்துப் பேசி அவரை குறை கூற விமர்சகர்கள் அந்நாட்களிலேயே இருக்கத்தான் செய்தார்கள். இருந்தபோதிலும் அவர்களுடைய உட்குத்தலான கேள்விகளில் வெற்றியின் மாபெரும் கேள்விகளை நாம் காண முடியும்.



**அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன?**

மோவாபியனான சன்பல்லாத் இடிந்து போன சுவர்களை நெகேமியா மறுபடியும் கட்டினபோது, சமாரியாவில் குறிப்பிடத்தக்க பதவியில் இருந்தான். அவர் சமாரியர்களிடமும் தன் சகோதரர்களிடமும் **அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன?** என்று கேட்டான். அவனுடைய கேள்வி வெற்றிக்காக நாம் தேவனை

முழுமையாக சார்ந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அப்போஸ் தலனாகிய பவுல் **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு** என்று சொல்கிறார் [பிலிப்பியர்4:13]. மனிதர்கள் பலவேளைகளின்வெற்றிக்கான இரகசியமாக தங்கள் திறமைகளைக் குறித்துப் பெருமை போவார்கள். ஆனால், பவுல் தன்னுடைய வெற்றிக்குத் தான் எந்தவிதத்திலும் காரணம் இல்லை என்று வெளிப்படையாகவே சொல்கிறார். ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கைகளையும் உங்களில் உண்டாக்கு வராயிருக்கிறார் [பிலிப்பியர் 2:13]. அதேபோல், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் யோவான் 15:5–ல் இவ்விதமாக சொல்கிறார். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்றார்.

நெகேமியாவும் அவரோடிருந்தவர்களும் எத்தனையோ எதிர்ப்புகள் மத்தியிலும் மதில்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். நெகேமியா தன் சகயூதர்களைப் பார்த்து நீங்கள் எவ்விடத்தில் எக்காள சத்தத்தைக் கேட்கிறீர்களோ அவ்விடத்திலே வந்து, எங்களோடே கூடுங்கள்; நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார் என்றான் [ நெகேமியா 4:20]. உண்மையாகவே, ஒருவரோடு தேவன் இருந்தால் அதுதான் பெரும்பான்மை, ரோமர் 8:31 –ல் இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?

**ஒரு நாளில் முடிந்து விடுவார்களோ?**

பலருடைய துவக்கம் நன்றாக இருக்கும். ஆனால், இறுதிவரை பயணிப்பதில்லை. ஜனவரி மாதம் முடிவதற்கு முன்பே எத்தனை புத்தாண்டுத் தீர்மானங்கள் முறிந்து விடுகின்றன? அப்போஸ் தலனாகிய பவுல் கலாத்தியர் 6:9–ல் இவ்விதமாக எழுதுகிறார். நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். அதேபோல், Iகொரிந்தியர் 15:58 –ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக.

**சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான**
**கற்களுக்கும் நம் தேவன் உயிர் கொடுப்பார்!**

சபை

# உள்ளூர் சபையைக் காயப்படுத்தும் ஐந்து பாவங்கள்

## *Five Sins That Will Hurt The Local Church*

*Roger Leonard*

**நா**ன் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலோ நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்தவீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது [1தீமோ.3:14,15].

அப்போஸ்தலனாகிய பவுல் மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளை சுவிசேஷகனாகிய தீமோத்தேயு சபையிலே நடந்துகொள்ளும் விதத்தை விளக்குவதற்காக, இது தீமோத்தேயுக்கான தனிப்பட்ட நிருபமாக இருந்தாலும் கூட, தனிப்பட்ட நபர்களாலானது தானே சபை? ஆகையால், தேவனை ஆராதிப்பதற்காக கூடி வரும் கர்த்தருடைய சபையில் நாம் ஒவ்வொருவரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

ஓர் உள்ளூர் சபையைக் காயப்படுத்தும் பாவங்கள் என்ன? இக்கட்டுரையில் நாம் ஐந்து பாவங்களைப் பற்றி விவாதிக்கலாம்.

### 1. ஜெபம் இல்லாமை

சில வேளைகளில் நாம் சபை அங்கத்தினர்களை குறிவைத்து அவர்களுடைய குறைகளைச் சுட்டிக்காட்டுகிறோம். ஆனால் கர்த்தருடைய ஜனங்களுக்காக நாம் ஜெபிக்கத் தவறி விடுகிறோம். சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டுமென்று நம் இரட்சகர் சொல்லியிருக்கிறார் [லூக்கா18:1]. நாம் சபையின் வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையற்றுப் போகும்போது சோர்ந்து போகிறோம். பல நேரங்களில் நாம் நம் சகோதர சகோதரிகளை குற்றம் சாட்டுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுலும் கூட **நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ணவேண்டுமென்றும், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள், அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது** என்று சொல்கிறார் [1தெசலோனிக்கேயர் 5:17,18]. நம் சகோதர சகோதரிகளுக்காக நம்பிக்கை இழந்து, சோர்வடைவதைவிட,

அவர்களுக்காகத் தனிப்பட்ட முறையிலும், ஒட்டு மொத்த சபையாகவும் நாம் ஜெபிக்க வேண்டும். நம் ஆண்டவராகிய இயசு கிறிஸ்து சபையின் எதிர்காலத்திற்காக ஜெபித்திருக்கிறார். [யோவான்17:2021]. ஆதித் திருச்சபை ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருந்தது [அப்போஸ்தலர் 2:42]. பவுல் எந்தெந்த சபைகளுக்கு நிரூபங்களை எழுதினாரோ அவர்களுக்காக எப்பொழுதும் ஜெபித்ததாகச் சொல்லியிருக்கிறார் [கொலோசெயர்1:5]. எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை அவரை நாள்தோறும் நெருக்கினது இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கிறது [11கொரிந்தியர் 11:28]. நாம் எப்பொழுதும் சபைக்காக ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

**2. சோம்பல்**

ஒரு சபை அங்கத்தினர் ஒருவர் மேற்கொள்ளளும் பாவங்களில் சோம்பலும் ஒன்றாகும். மத்தேயு25:24-27 - வசனங்களில் தன் தாலந்தை பயன்படுத்தாமல் நிலத்தில் புதைத்து வைத்த ஒரு தாலந்து பெற்ற ஊழியக்காரனைப் பார்த்து **பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரனே** என்று சொன்னதினால் நம் ஆண்டவராகிய கிறிஸ்து சோம்பலை எவ்வளவு கடுமையாகப் பார்க்கிறார் என்பது நமக்கு விளங்குகிறது. இந்த ஊழியக்காரன் அல்லது வேலைக்காரன் செயல்படாமல் இருந்ததற்குப் பயம் தான் காரணமாக அமைகிறது என்றாலும் கூட, அதை நம் இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொள்ளவில்லையே. உண்மையில் **பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்** என்றார். இயேசு கிறிஸ்து ஏன் இவ்வளவு கடுமையாக நடந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் நினைக்கலாம். சபையில் சேவை அல்லது ஊழியத்தின் அவசியத்தை உணர்த்துவதற்காகத்தான் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களால் உண்டானது [அப்போஸ்தலர் 2:47;எபேசியர் 5:23]. எனவே, நம் ஆண்டவர் ஆவிக்குரிய சரீரத்தின் வளர்ச்சிக்காக தம்முடைய ஜனங்கள் முழுமையாக ஈடுபட வேண்டுமென்று விரும்புகிறார் [எபேசியர் 4:16]. சோம்பலுக்கான ஒரே மருந்து முழு ஈடுபாடுதான்.

**3.பிடிவாதம் அல்லது கலகம்**

தேவனுடைய வார்த்தைகள் பத்திரிக்கைகள் மூலமாக அறிவிக்கப் படுகிறது. வேத பாடங்களில் போதிக்கப்படுகிறது, இன்னும்

ஊடகங்கள் மூலமாகவும் பிரசங்கிக்கப்படுகிறது. நாம் அதற்கு எப்படி பதிலளிக்கிறோம் என்பதைக் குறித்து ஒவ்வொருவரும் கணக்குக் கொடுக்க வேண்டும். இயேசு கிறிஸ்து ஜனங்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதன் அவசியத்தை மறுபடியும் வலியுறுத்தியிருக்கிறார். சாமுவேல் தீர்க்கதரிசி சவுலைப் பார்த்து **இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனியப் பாவத்திற்கும் முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது, நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்த படியினாலே அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்** [1சாமுவேல் 15:23]. கர்த்தருடைய வார்தைதை புறக்கணிக்கப்படுவதைக் கர்த்தர் எப்படியாகப் பார்த்தார் என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். சபையிலும் கூட கர்த்தருடைய வார்த்தையை ஏற்க மறுக்கும் கலகக்காரர்களினிமித்தம் ஒட்டு மொத்த சபையும் பாதிக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் சபை அவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளலாம்.

**4. உலகத்தன்மை**

இது கிட்டத்தட்ட மூன்றாவது தலைப்பைப் போன்றதுதான். இங்கே கருத்து என்னவென்றால் உலகப் பிரகாரமான மனநிலைதான். வேறு விதமாகச் சொன்னால், நீங்கள் உலகத்தன்மை உடையவராக யிருப்பதை சபை அறிந்திருக்கலாம் அல்லது அறியாமலுமிருக்கலாம். ஆனால், உலகம் உங்களைக் கவனிப்பதால் அது அறிந்திருக்கிறது நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறது போல, நீங்கள் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள். பவுல் கொரிந்தியருக்கு இவ்விதமாக எழுதினார். [1கொரி10:32-33]. நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயேஜத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறது போல, நீங்கள் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுருவும் இவ்விதமாகச் சொல்கிறார் [1பேதுரு2:11,12] பிரியமானவர்கள, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள்

நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

கிறிஸ்தவர்கள் கெட்ட வார்த்தைகள் பேசுகிறதை, சபிக்கிறதை உலகத்தார் கண்டால் அல்லது கிறிஸ்தவர்கள் குடி, சூதாட்டம், பொய் போன்றவைகளில் ஈடுபடுவதைக் கண்டாலோ, கேட்டாலோ அது சபையைக் குறித்து எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும், இது பலர் இடறலடைந்து இழந்துபோவதற்குக் காரணமாக அமைந்து விடுகிறது. ஆகையால், சபை அங்கத்தினர்கள் உலகத்தில் அல்ல தேவனிடத்தில் அன்புகூர வேண்டும். [1யோவான்2:15-17].

**5.வெதுவெதுப்பானநிலை**

இயேசு கிறிஸ்து இந்த வார்த்தையை ஒரே முறைதான் லவோதிக்கேயா சபைக்குப் பயன்படுத்தியிருக்கிறார். உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன் [வெளி3:15 16]. இது நம்மை அறியாமலேயே செய்கின்ற பாவங்களுள் ஒன்றாக இருக்கிறது. இப்படிப்பட்ட காரியத்தை யார் தான் ஒத்துக் கொள்வார்கள்? நம் கர்த்தர் அவருக்காக பக்தி வைராக்கியமாக செயல்படுவதை மூன்று வகையாகப் பிரிக்கிறார்.

1. **நீர்த்துப்போன வைராக்கியம்**
2. **வெதுவெதுப்பான வைராக்கியம்**
3. **துடிப்புள்ள வைராக்கியம்.**

நாம் கர்த்தருடைய காரியங்களில் அனலுள்ளவர்களாய் இருக்க வேண்டும் அல்லது குளிருள்ளவர்களாய் இருக்க வேண்டும். அப்படியென்றால் வெதுவெதுப்பாயிருப்பதில் என்ன பிரச்சனை இருக்கிறது? அது இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்துப் பாசாங்கு செய்வதாகும். இப்படிச் செய்வது கர்த்தருக்கு அருவருப்பானதாகும். இப்படி வெதுவெதுப்பான நிலையில் இருப்பவர்கள் சபைக்கு வருவதும் போவதுமாக இருப்பார்கள். ஆனால், சபைக் காரியங்கள் எதிலும் பங்கேற்கமாட்டார்கள். இந்த வெதுவெதுப்பான நிலைக்கு மருந்து என்னவென்றால், ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்புவது தான் [வெளி.3:19]. ✝

சபை

# மார்க்கப் பிரிவினை கொள்கையில்லாத கிறிஸ்தவம்

## *Christianity Without Denominationalism*

Carroll Sites




பேதுரு, யாக்கோபு யோவான், பெந்தேகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட அந்த 3000 பேர், கொர்நேலியு, எத்தியோப்பிய மந்திரி, லீதியாள் பிலிப்பிய சிறை அகிகாரி ஆகியோர் எந்த மார்க்கப் பிரிவினை கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்கள் **கிறிஸ்துவின் சபையின்** அங்கத்தினர்களாக மாத்திரமே இருந்தார்கள் [எபேசியர் 1:22-23; கொலோசெயர் 1:18,24] இவர்களெல்லாரும் எந்த ஒரு மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தின் அங்கத்தினர்களாயிருக்கவில்லை. வேதாகமத்தில் நாம் பார்க்கும் போது இரட்சிக்கப்பட்டவர்களெல்லாம் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் அங்கத்தினர்களானார்கள். அதாவது, இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் [அப்போஸ்தலர்2:47]. இவர்கள் யாரும் எந்த ஒரு மார்க்கப்பிரிவினை கூட்டத்திலும் சேரவில்லை. இவர்களெல்லாம் இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்பட்டவர்கள் [கொலோசெயர் 1:13]. மறுபடியும் சொல்கிறேன் அவர்கள் யாரும் எந்த ஒரு மார்க்கப் பிரிவினைக் கூட்டத்திலும் அங்கத்தினராக இருக்கவில்லை.

இன்றும் ஒரு பாவி கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, மேலே குறிப்பிட்டிருப்பது போல ஞானஸ்நானம் பெறும்போது, அவர் கிறிஸ்தவராக மாறுகிறார். அதைவிட மேலாக ஒன்றுமில்லை [மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:36-41; அப்போஸ்தலர் 8:36; 16:15; 16:30,34 ரோமர் 6:3,4; கலாத்தியர் 3:26,27] இந்த வேதவாக்கியங்களின்படி ஒருவர் கிறிஸ்தவராகும் போது அவர் எந்த ஒரு மார்க்கப்பிரிவினைக் கூட்டத்திலும் அங்கத்தினராவதில்லை.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படும்படி செய்த காரியங்களை இன்றைய நாட்களில் ஜனங்கள் பெரும் எண்ணிக்கையில் செய்தால் அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கமாட்டார்களா? இன்றைய நாட்களிலும் ஜனங்கள் பெரும் எண்ணிக்கையில் வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிப்பதற்காக ஒன்று கூடி அப்போஸ்தலர்களும், கிறிஸ்தவர்களும் முதல் நூற்றாண்டில் எந்த பெயரால் அழைக்கப்பட்டார்களோ அந்தப் பெயராலேயே தங்களை அழைத்துக்கொண்டு வேதாகமத்தை மாத்திரம் விசுவாசச் சட்டமாக ஏற்றுக்கொண்டு அப்போஸ்தலர்களும், ஆதிக் கிறிஸ்தவர்களும் எந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்களோ அதே கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக, அதாவது கிறிஸ்தவர்களாகவே இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் இவ்வுலகில் எந்த ஒரு மார்க்கப் பிரிவடினைக் கூட்டத்திலும் அங்கம் வகிக்கவே மாட்டார்கள். நாம் எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டுமென்பதுதான் இயேசு கிறிஸ்துவின் வேண்டுகோளாயிருக்கிறது. நாம் வேதாகமக் காரியங்களில் ஒன்றாயிருந்தது மார்க்க சம்மந்தமான காரியங்களில் வேதாகமத்தை இறுதி அதிகாரமாகப் பயன்படுத்தும்போது நாம் ஒன்றாயிருக்க முடியும். இது தான் எல்லா தேசத்திலும் கிறிஸ்துவின் சபையின் வேண்டுகோளாயிருக்கிறது. ஆகையால, வேதாகமத்தின் ஒரே சபையான **கிறிஸ்துவின் சபையில்** நீங்கள் அங்கம் வகிக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா?

## உங்கள் குழந்தை தகுதி பெற்றிருக்கிறது

- ★ **உங்கள் குழந்தை நீங்கள் ஜெபிப்பதைக் கேட்கத் தகுதி பெற்றிருக்கிது.**
- ★ **உங்கள் குழந்தை** உங்களோடு ஆராதனைக்கும் வேதபாட வகுப்புகளுக்கும் வரத் தகுதி பெற்றிருக்கிறது.
- ★ **உங்கள் குழந்தை நீங்கள் கர்த்தருக்காகத் தியாகம் பண்ணுவதைக் காணத் தகுதி பெற்றிருக்கிறது.**
- ★ **உங்கள் குழந்தை** நீங்கள் கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லுவதைக் கேட்கத் தகுதி பெற்றிருக்கிறது.

# அறிக்கையிடுவது ஆத்துமாவுக்கு நல்லது

## *Confession is Good For the Soul*

*John Deffenbaugh*

இதை நம் வாழ்க்கை முழுவதும் கேள்விப்பட்டிருக்கிறோம். இது உண்மை தானா? நமக்கு நன்மை உண்டாக்கும் அறிக்கையைப் பற்றி வேதாகமத்தில் ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்று நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டில் இரண்டு வகையான அறிக்கைகள் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவது ஒரு வகை [அப்போஸ்தலர் 8:37]; இன்னொரு வகை, யோவான் ஸ்நானகனால் போதிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சீஷர்களால் கடை பிடிக்கப்பட்ட பாவ அறிக்கை [மத்தேயு 3:6; அப்போஸ்தலர் 19:18].

கிறிஸ்து இயேசுவினிடத்தில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவது நம்மை இரட்சிப்புக்குள் வழி நடத்துகிறது [ரோமர் 10:8-10]. இவ்வகையான அறிக்கை நம் ஆத்துமாவுக்கு மிகவும் நல்லது, மிகவும் அவசியமானது கூட [மத்தேயு 10:32-33]. பாவங்களை அறிக்கையிடுவதை உன்னிப்பாகக் கவனித்தால் பல காரியங்கள் வெளிப்படுத்துகின்றன. நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம் [Iயோவான் 1:8,10]. தாவீது ராஜா தன் பாவத்தை அறிக்கை செய்யாமல் அடக்கி வைத்ததினால் என்ன பாடுபட்டார் என்பதை [சங்கீதம் 30:3,4] வசனங்களின் பதிவு செய்திருக்கிறார். நம் வாழ்க்கையில் பாவத்தை மறுப்பதோ அல்லது மறைப்பதோ நம் ஆத்துமாவை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதோடு நம் இதயங்களையும் பாரப்படுத்துகிறது. நாம் எப்போதும் திறந்த மனதோடு இருந்து, நம் பெலவீனங்களையும், குறைகளையும் குறித்து நேர்மையாயிருக்க வேண்டும்.

இப்பூமிக்குரிய வாழ்வில் நாம் யாரும் பூரணரல்ல, மாறாக, குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். இதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். [1யோவான் 1:9] நம் பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிடுவது ஆத்துமாவுக்கு மிகவும் நல்லது. ஏனென்றால், அது 1. சுத்திகரிப்பையும், மன்னிப்பையும் கொண்டு வருகிறது. 2. நம் ஆத்துமாவைக் கீழ்ப்படிய வைக்கிறது. 3. நாம் வளர வேண்டியதன் அவசியத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது.

கர்த்தருடைய பாவமில்லாத வாழ்க்கையை உயர்வாக பார்ப்பதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது. 5. நம் வாழ்க்கையில் தேவனுடைய கிருபைக்கான அவசியத்தையும் நமக்குக் காட்டுகிறது. 6. அத்தோடு, நம் பாவங்களை கழுவி சுத்திகரிக்கும் வல்லமை பெற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு நாம் நன்றியாயிருப்பதன் அவசியத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

நம் பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிடுவது அவசியமானது. ஆனால் சில வேளைகளில் நம் பாவங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட வேண்டும். யாக்கோபு 5:16ல் **உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முந்தைய வசனங்களில் பிணியாளிகளுக்காகவும் பாவமன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும் என்று கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. பதினாறாம் வசனத்தின் இறுதிப்பகுதி ஜெபத்தையும் அதன் வல்லமையையும் வலியுறுத்துகிறது. ஜெபங்களின் இடையில் யாக்கோபு ஆசிரியர் ஒருவொருக்கொருவர் குற்றங்களை அறிக்கையிடுவதை உட்புகுத்தியிருக்கிறார். அப்போஸ்தலர் 19:18 ல் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கையிட்டதற்கு உதாரணம் இருக்கிறது. இங்கே சந்தர்ப்பம் என்னவென்று பார்க்கும் போது இந்த ஜனங்கள் கடந்த காலத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்கிறவர்கள் இப்போதும் விசுவாசித்திருக்கிறார்கள் இப்போதும் விசுவாசிகனாகத்தான் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பாவம் வந்து சேர்ந்தபோது என்ன செய்திருக்கிறார்கள்? அவர்கள் ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கையிடுவது நல்லது ஏனென்றால் அது 1 நாம் சொஸ்தமடைய அனுமதிக்கிறது. 2 நாம் மனந்திரும்பியதை மற்றவர்களுக்கு தெரியப்படுத்த இது ஒரு வழியாயிருக்கிறது. 3 நம் சகோதரர்கள் நம் ஆத்துமாக்களுக்காக துல்லியமாக ஜெபிக்க வழி வகுக்குகிறது. 5 இது தாழ்மை, வெளிப்படைத்தன்மை, நேர்மை நம்பிக்கைபோன்றவற்றை மேம்படுத்துகிறது.

நாம் கிறிஸ்தவர்களாக சில வேலைகளில் தேவனிடத்திலிருந்து வழி தப்பிவிடுகிறோம். அப்போஸ்தலர் 8 ஆம் அதிகாரத்தில் சீமோனைப் போல் நம் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையிராமல் போய்விடுகிறது (வசனம்21) சில வேலைகளில் நாம் பாவக்கட்டில் அகப்பட்டுவிடுகிறோம் (வசனம்23). தவறு இழைக்கும் கிறிஸ்தவர்களுக்கு தேவனுடைய தீர்வு சுலபமானது. ✞

## வாழ்வதற்கான உபதேசம்

# அற்புதங்களை ஒப்பிட்டுப் பாருங்கள்

## *Compare the Miracles*

*Royce Frederick*

**சி**லர் வேதாகமத்தின் அற்புத அடையாளங்களை மறுக்கிறார்கள். சிலர் வேதாகமத்தின் அற்புத அடையாளங்களைப் போலத் தாங்களும் செய்வதாகப் பாசாங்கு செய்து மக்களை ஏமாற்றி வருகிறார்கள் ( மத்தேயு 24:24–25). ஆனால் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள அற்புதங்களெல்லாம் தேவனிடத்திலிருந்து வந்த மெய்யான அற்புதங்களாகும். முதல் நூற்றாண்டில் பல அற்புதங்கள் இயேசு கிறிஸ்துவாலும், அவருடைய அப்போஸ்தலர்களாலும், பரிசுத்த ஆவியானவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சீஷர்களாலும் நிகழ்த்தப்பட்டன ( மத்தேயு 4:23–25;10:8 அப்போஸ்தலர் 2:43; Iகொரிந்தியர் 12:11). வேதாகமத்தின் மெய்யான அற்புதங்களுக்கும், இன்றைய நாட்களில் மனிதர்களால் நடத்தப்படும் பொய்யான அற்புதங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்து கொள்ளப் பல உண்மைகள் நமக்கு உதவுகின்றன.


**w எல்லா அற்புதங்களும் ஜனங்களால் தெளிவாகக் காணப்பட்டன.**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெறுமனே சரீரத்திற்குள்ளோ அல்லது மனதிற்குள்ளோ மறைந்திருந்த வியாதிகளை மாத்திரம் சுகப்படுத்தவில்லை. அவர் குஷ்டரோகம், முடக்குவாதம் என எல்லா வகையான நோய்களையும் சுகப்படுத்தினார்( மத்தேயு 4:23,24). நம் கர்த்தர் புயல் காற்றிடம் பேசி அதை நிறுத்தினார், ஐந்து அப்பம் இரண்டு மீன்களைக் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்தார், தண்ணீரின் மேல் நடந்தார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார் (மத்தேயு 8:14; யோவான் 11). இப்படி எல்லாமே வெளிப்படையாகவும், தெளிவாகவும், மனுஷர் காணும்படியாகவும் இருந்தது. ஆனால், இன்றைக்கு எப்படி?

**w சுகமளிக்கும் அற்புதங்கள் உடனே நிகழ்த்தப்பட்டன.**

இயேசு கிறிஸ்து நிகழ்த்திய அற்புதங்களில், ஜனங்கள் தவணை முறையில் சுகமடையவில்லை. மாறாக, அவர்கள் உடனே சுகம் பெற்றார்கள். சில வருடங்களுக்கு முன்பு சிலர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி படம் எடுத்தார்கள். அதில் கிறிஸ்து பேதுருவின் மாமியரை சுகப்படுத்துவது போல் ஒரு காட்சி. அப்பெண் கடும் காய்ச்சலால் கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறார், கிறிஸ்து அவளைச் சுகப்படுத்தின பிறகு, இரண்டு பேர் அப்பெண்ணை மற்றொரு

அறைக்குக் கொண்டுபோய் அவளுக்கு உதவி செய்கிறார்கள், அவள் இளைப்பாறி, இழந்த பெலனை திரும்பப் பெறுகிறாள். ஆனால், வேதாகமத்தில் நாம் பார்க்கும்போது உடனே, அவள் எழுந்திருந்து அவர்களுக்கு பணிவிடை செய்தாள் என்று தான் பார்க்கிறோம் [லூக்கா 4:39]. பேதுருவின் மாமியார் உடனடியாக முழுமையாக சுகம் பெற்றார்.



W **அற்புத சுகம் அளிக்கும் கூட்டங்கள் என்றெல்லாம் வேதாகமத்தில் இல்லை.**

இயேசு கிறிஸ்துவோ அல்லது அவருடைய சீஷர்களோ அற்புத சுகமளிக்கும் கூட்டங்கள் நடத்தப்படும் என்று சொல்லி, விளம்பரப் படுத்திப் பெருங்கூட்டத்தைக் கூட்டவில்லை. அவர்கள் எல்லோரையும் கூட்டி மேடைகளில் வைத்து அற்புதங்களை நிகழ்த்தவில்லை. அவர்களுக்கு அப்படிச் செய்யவேண்டிய அவசியமுமில்லை. அந்த அற்புதங்கள் உண்மையாக இருந்தபடியால் திரளான மக்கள் இயேசு கிறிஸ்துவினிடத்திற்கு நம்பிக்கையோடே வந்தார்கள்.

W **வேதாகமத்தின் அற்புதங்கள் பெந்தேகொஸ்தே நாளில் திரளான ஜனக்கூட்டத்தால் உண்மையென நிருபிக்கப்பட்டன.**


அப்போஸ்தலனாகிய பேதுரு பகை, கொலை போன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்த மக்களிடத்தில் தைரியமாகப் பேசினார் [அப்.2:22,23,32]. குறிப்பாக நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே அற்புத அடையாளங்களை நடத்தினார் என்று தைரியமாகப் பிரசங்கித்ததைக் கேட்ட ஜனங்கள் பேதுருவைக் கொல்லும்படி எழுந்திருக்கவில்லை. மாறாக ஏறக்குறைய மூவாயிரம் பேர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். ✝

வாழ்வதற்கான உபதேசம்

# தேவனுடைய கிருபை அவருடைய பிரமாணத்தை இல்லாமல் போகச்செய்கிறதா?

## *Does God's Grace Annul His Law?*

*Hollis Miller*




**அ**ப்போஸ்தலனாகிய யோவான் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது; கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின (யோவான் 1:17) என்று எழுதுகிறார். யோவானின் வார்த்தைகளை எடுத்துக்கொண்டு மோசேயின் காலத்தின் கீழ் கிருபையும் சத்தியமும் இல்லை என்று முடிவுக்கு வந்துவிடக்கூடாது. கிருபையும், சத்தியமும் முழுமையான அளவில் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நியாயப்பிரமாணம் என்று சொல்லும் போது, யோவான் பழைய உடன்படிக்கையை மனதில் கொண்டுதான் எழுதியிருக்க வேண்டும். ஏனென்றால், மோசேயின் மூலமாக அது கொடுக்கப்பட்டது என்று உறுதியாகச் சொல்கிறாரே. இதில் புதிய ஏற்பாட்டு சட்டங்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் விரிவான அகராதியின் (Vin's) விளக்கத்தின்படி **nomos** [சட்டம்] என்பது ஒரு பணியைச் செய்யும் படியாக வலியுறுத்தும் ஒரு சக்தியாக, ஒரு தாக்கமாக இருக்கிறது. [Vine's] ன் விளக்கத்தின் படி, தேவனுடைய பிரமாணம் தான் மனிதன் பின்பற்றும்படியாக அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மனிதன் செய்யும்படியாகக் கொடுக்கப்பட்ட பணியில் ஏதோ ஒரு சக்தி அல்லது ஆற்றல் அவன் அச்சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட அவனை இயக்குகிறது.

கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் தேவனுடைய கிருபை எப்படி வேலை செய்கிறது என்பதைப் புரிந்து வைத்திருந்தார்கள். தேவனுடைய கிருபையிருப்பதினாலே புதிய உடன்படிக்கையின் மக்கள் எந்தவித கிரியையிலும் ஈடுபடாமல் இருப்பது எந்தவிதத்தில் நியாயமாகும்? தேவனுடைய கிருபை நமக்கிருக்கிறது என்பதற்காக தேவன் பணித்திருக்கிற காரியங்களை மனிதன் செய்யாமலிருக்க முடியாது. உதாரணமாக, நாம் தேவனிடத்தில் அன்கூர வேண்டுமென்று கடமை பெற்றிருக்கிறோம். இயேசு கிறிஸ்து **நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்** [யோவான்14:15] என்று சொல்லியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளில் ஒன்றைக்கூட நாம் மீற முடியாது.

உண்மையாகவே, தேவனுடைய கிருபை ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும், வல்லமையும், அன்பும் நிறைந்த சக்தியாக விளங்கி வருகிறது. கர்த்தருக்கென்று உண்மையாக வேவை செய்ய நினைக்கும் ஒவ்வொருவருடைய இருதயத்திற்கும், ஆத்துமாவிற்கும் தேவையானவற்றை கிருபை தான் சந்தித்து வருகிறது. தேவனடைய கிருபை ஒருவர் தன்னுடைய சக்திக்கு அப்பால் கர்த்தருக்கொன்று காரியங்களைச் செய்ய வழிவகுக்கிறது. தேவனுடைய கிருபை போலியான ஒன்றல்ல. இது உண்மையான கிருபையாகும். பவுல் தன்னுடைய ஜெபங்களில் மறுபடியும் மறுபடியும் தான் நிருபங்களை யாருக்கு எழுதினாரோ அவர்களுக்கு கிருபை கிடைக்க வேண்டுமென்று நினைவு கூர்ந்திருக்கிறார். பவுல் உங்களுக்கு கிருபை உண்டாவதாக என்று சம்பிரதாயமாக எழுதவில்லை [ ரோமர் 1:7 Iகொரிந்தியர் 1:3; கலாத்தியர் 1:3]. உண்மையாகவே, நாமெல்லோரும் தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் [ எபேசியர்2:8].

நாம் தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்பட்டால், வேதாகமம் எவைகளெல்லாம் இரட்சிப்புக்கு அவசியம் என்று சொல்லியிருக்கிறதோ அவைகளெல்லாம் அதில் உள்ளடக்கம். உதாரணமாக, விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம் போன்றவைகள் நம்மை இரட்சிப்பதாக வேத வசனம் சொல்கிறது. நிச்சயமாகவே இவைகளெல்லாம் நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதின் அத்தியாவசியமான பாகங்களாக இருக்கின்றன. ஒருவர் கிருபையை அவமாக்கிவிட்டு விசுவாசம், மனந்திரும்புதல் , மற்றும் ஞானஸ்நானம் போன்றவைகள் இரட்சிப்புக்கான மிகச் சிறந்தவைகள் என்று சொல்ல முடியாது அல்லது இரட்சிப்புக்கு அவசியமானவைகள் என்று வேறு எதையும் சொல்ல முடியாது.

புதிய ஏற்பாடு, மனிதனோடு தேவனுடைய உறவு பற்றி எவைகளையெல்லாம் போதிக்கிறதோ, அவைகளிளெல்லாம் தேவனுடைய கிருபையை மிகச்சிறந்த முறையில் புரிந்துகொள்ள முடிகிறது. இயேசு கிறிஸ்துவின் உபதேசமும், அப்போஸ்தலருடைய உபதேசமும் தேவனுடைய அன்பைப் பற்றி எவ்வளவாய் வெளிப்படுத்துகிறதோ அவ்வளவாய் தேவனுடைய கிருபையைப் பற்றி வெளிப்படுத்தியிருக்கிறது. ஏனெனில், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய். இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, என்று பவுல், தேவகிருபையைக் குறித்து விளக்குகிறார் [தீத்து. 2: 11,12] இயேசு கிறிஸ்துவும் தேவனுடைய கிருபையும் பிரிக்க முடியாதவைகள். ஏனென்றால், கிறிஸ்து எவைகளைப் போதித்தாரோ அவைகளை தேவனுடைய கிருபையும் போதிக்கிறது. கிறிஸ்துவும் அவருடைய போதனையும் மனிதனுக்கான தேவனுடைய கட்டளையாக இருக்கிறது, அதை யாரும் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. ✝

**புதிய ஏற்பாடு மனிதனோடு தேவனுடைய உறவு பற்றி எவைகளையெல்லாம் போதிக்கிறதோ, தேவனோடு மனிதனுடைய உறவு பற்றி எவைகளையெல்லாம் போதிக்கிறதோ அவைகளிலெல்லாம் தேவனுடைய கிருபையை மிகச்சிறந்த முறையில் புரிந்து கொள்ள முடிகிறது.**

# அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் எல்லாம் சரியாக இருந்தது.

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு முதல் பெந்தகொஸ்தே நாளில் சபை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட படியே சபை ஆரம்பிக்கப்பட எல்லாம் சரியாக இருந்தது!



பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். - அப்போஸ்தலர் 2:38.

| | | |
|---|---|---|
| **சரியான மனிதர்கள்** | | மாற்கு 9:1<br>அப். 1:8 |
| **சரியான இடம்** | எருசலேம் | ஏசாயா 2:2–3<br>மீகா 4:1–2 |
| **சரியான நேரம்** | கடைசி நாட்களில் | அப். 2:16–17<br>யோவேல் 2:28–29 |
| **சரியான வல்வமை** | பரிசுத்த ஆவியானவர் | அப் 1:8 |
| **சரியான செய்தி** | மனம்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்பு | லூக்கா 4:47–49<br>மாற்கு 16:6 |
| **சரியான பெயர்** | கிறிஸ்துவின் நாமம் | லூக்கா 24:47<br>அப். 2:38 |
| **சரியான மக்கள்** | வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிடமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் | அப். 2:5<br>ஏசாயா 2:2 |

*குறிப்பு : சில வருடங்களுக்குப் பிறகு செசரியாவில் பேதுரு பெந்தகொஸ்தே நாளை ஆதியிலே என்று குறிப்பிடுகிறார் (அப்போஸ்தலர் 11:15).*

# ஒரு சீடன் என்னவாக இருக்கிறான்?

## *What A Disciple Is*

*Donny Weimar*

**சு**ருக்கமாகச் சொன்னால் இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை **நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி** என்பதாயிருக்கிறது [மத்தேயு 28:19]. பொதுவாக நாம் பார்க்கும்போது, மாணவர்கள் ஆசிரியருக்கு முன்பாக அமர்ந்து அவர் என்ன சொல்கிறாரோ அதை அப்படியே கற்றுக் கொள்பவர்கள். ஆனால், சீஷர்கள் என்பவர்கள் அதைவிட மேலானவர்கள். அவர்கள் கற்றுக்குட்டிகள். இவர்கள் குருவினுடைய மாதிரியை அப்படியே பின்பற்றி குருவைப்போல் மாறிவிடுகிறார்கள். இயேசு கிறிஸ்து ஒருமுறை **சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்** என்று சொன்னார் [லூக்கா 6:40]. சீடன் ஒருவன் தன் குருவைப் போல் மாறுகிறான் என்றால் குருவின் குணாதிசயத்தை, தன் வாழ்க்கையின் மாதிரியாகப் பின்பற்றுவதற்கு பயிற்றுவிக்கப்படுகிறான் என்று தான் பொருள்.

யோவான் சுவிசேஷப் புத்தகத்தில் சீஷர்கள் என்பவர்கள் யார் என்பதற்கான விளக்கத்தை மிகத்தெளிவான முறையில் அவர் கொடுத்திருக்கிறார்.

### I கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் சீஷர்கள்

இயேசு கிறிஸ்து தம்மை விசுவாசித்தவர்களைப் பார்த்து நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால், மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்றார் [யோவான் 8:31]. வேதாகமப் புரிந்து கொள்ளுதல் இல்லாத ஒருவர் உண்மையான விசுவாசத்துக்கடுத்த காரியங்களைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. ஏனென்றால், மெய்யான விசுவாசம் கிறிஸ்துவின் வசனத்தை கேட்பதினால் வரும் [ரோமர் 10:17].

### II ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிறவர்கள் சீஷர்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய

சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்று போதித்தார் [யோவான் 13:35]. அன்பில்லாத கிறிஸ்தவன் ஓர் உண்மையுள்ள சீஷனாக இருக்க முடியாது [I யோவான் 4:20]. தேவனுடைய பிள்ளைகள் வேதாகம அன்பைப் புரிந்து கொள்கிறார்கள், ஏனென்றால்தேவன் அன்பாகவே இருக்கிறார் [I யோவான் 4:8]. I யோவான் 3:16 அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

### III கனி கொடுக்கிறவர்கள் கிறிஸ்துவின் சீஷர்கள்

நீங்கள் மிகுந்த கனியைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள் [யோவான் 4:8]. வேதாகமத்தில் கனி கொடுப்பது என்பது விளைவை ஏற்படுத்தும் விசுவாசத்தோடு சம்பந்தப்படுவதாயிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதனத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது [யாக்.3:18]. ஆகையால், கனி கொடுப்பது தான் உண்மையான சீஷர்களை தீர்மானிப்பதற்கான பரீட்சையாக இருக்கிறது.

உண்மையான சீஷர்களாக இருக்க வேண்டுமென்றால், ஒருவர் கிறிஸ்துவினிடத்திலிருந்து கற்றுக்கொண்டு அவரை அப்படியே பின்பற்றி, அவருடைய சுவிஷேத்தை பலரிடத்தில் பகிரவேண்டும். சீஷர்கள் சீஷர்களை உருவாக்குகிறார்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் [மத்தேயு 28:20] என்றார். இதினிமித்தம் உபதேசம் பண்ணுவவதே சீஷனின் உண்மையான கனிகொடுத்தலாகும். ✝

**வானம் எப்போதும் தெளிவாக இருந்தால் நாம் சூரியப் பிரகாசத்தை அதிகமாக விரும்ப மாட்டோம். அதேபோல், நாம் கண்ணீரே வடித்ததில்லை யென்றால் புன்னகையின் மதிப்பை நாம் ஒரு போதும் அறிந்துகொள்ளவே மாட்டோம்!**

# வீட்டுக்கு வாருங்கள்
# *Come Home*

*Darrell Powell*

**தே**வன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் [யோவான் 3:16] என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். நம்முடைய பாவங்களுக்காகத் தம்முடைய ஒரே பேறான குமாரனை தேவன் சிலுவையில் மரிக்கக் கொடுத்தது மனித இனத்தின் மீது தேவன் எவ்வளவு அன்பாயிருக்கிறார் என்பதற்கு ஆதாரமாயிருக்கிறது. தேவன் எப்போதுமே, தம்முடைய பிள்ளைகள் தம்மோடு இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். **அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைப்பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்** [யோவான் 1:12]. தேவனையும், அவருடைய வார்த்தைகளையும் உண்மையாய் ஏற்றுக்கொண்டவர்கள், அவருடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தம்முடைய பிள்ளைகள் இவ்வுலகிலும், நித்தியத்திலும் அவருக்கருகில் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.



இயேசு கிறிஸ்துவும் இளைய குமாரனுடைய உவமையை லூக்கா 15-ம் அதிகாரத்தில் சொன்னார். இந்த இளைய குமாரன் தன் தகப்பனிடமிருந்து, ஆஸ்திகளைப் பறித்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப் போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியையெல்லாம் இப்படியாக அழித்துப் போட்டான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதேவேளையில், கஷ்ட காலம் வந்தபோது, தான் வாழ்ந்து வந்த வாழ்க்கையை எண்ணிப்பார்த்து, மனதில் குத்தப்பட்டு, தன் தகப்பன் வீட்டில் வாழ்ந்த செழிப்பான வாழ்க்கையை நினைவு கூர்ந்தான். அவன் தன் தகப்பன் வீட்டுக்குத் தாழ்மையான

ஆவியுடன், ஒரு வேலைக்காரனாகத் திரும்பி வந்தான். ஆனால், அவன் தகப்பனோ தன்னுடைய ராஜ்யத்தில் அவனை இளவரசனாக ஏற்றுக்கொண்டார். அந்த இளையகுமாரன் தாழ்மையும், மனந்திரும்புதலும் இல்லாமல் வீடு திரும்பியிருந்தால் அங்கே காட்சி எப்படியிருந்திருக்கும்?

நம் பரமபிதா தம்முடைய பிள்ளைகளிடத்தில் மிகுந்த அன்புள்ளவராக இருந்தாலும், அவருடைய மறுபக்கத்தையும் நாம் அறிந்திருப்பது நமக்கு அவசியமாகும். அப்போஸ்தலனாகிய பவுல், ரோமர் 11;22 – ல், **ஆகையால் தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார். விழுந்தவர்களிடத்திலேயே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார். அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால், உனக்கு தயவு கிடைக்கும். நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்** என்று சொல்லுகிறார். ஒருவரும் கெட்டுப்போவது, தேவனுக்குச் சித்தமல்ல. ஆனால், மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் [ லூக்கா 13:3].

நம் மீதான தேவனுடைய மாபெரும் அன்பு கூட, நாம் மனந்திரும்பாமற்போனால், அவர் நம்மைத் தண்டிக்கத் தவறுவதில்லை. தேவனுடைய பிள்ளை ஒருவர், தன் பிதாவினிடத்தில் தாழ்மையுள்ள, மனந்திரும்பிய ஆவியுடன் அணுகவில்லையென்றால் உண்மையாகவே தகப்பனுடைய வீட்டுக்கு வரவில்லை என்றுதான் பொருள்.

நீங்கள் தேவனுடைய வீட்டைவிட்டுத் தூரமாக இருந்தால், இன்று ஏன் தகப்பனுடைய வீட்டுக்கு வரக்கூடாது? உங்கள் பரமத் தகப்பன் தம்முடைய வீட்டில் கரங்களை விரித்துக் காத்துக் கொண்டிருக்கிறார் உங்களுக்காக. ✝

**நாம் எப்படி?**

*எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவனே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று என்றார் இயேசு [மத்.23:37]*

# நல்ல சமாரியன் பிரமாணம்
## *The Good Samaritan Law*
*Donaid R. Fox*

**வே**தாகமத்தில், தங்கச்சட்டத்தோடு [மத்.7:12] சேர்ந்து, நல்ல சமாரியன் முன் மாதிரியும் சக மனிதர்களுக்கு மருத்துவ உதவியோ அல்லது வேறு ஏதாவது உதவியோ அவசியப்படும்போது, உதவி செய்ய விரும்பும் எல்லா நாகரீகமான மனிதர்களுக்கும் மிகச்சிறந்த செயல்பாடாக தனித்து நிற்கிறது. இவ்வகையான உதவி, ஆபத்து அல்லது கஷ்டத்தில் இருக்கும் சகலமனிதர்களுக்கும், இயற்கை யாகவே மற்றவர்களிடத்தில் அன்பும், இரக்கமும் உள்ள மனிதர்களால்தான் செய்யப்படுகிறது.



நான் மேற்சொன்ன காரியங்களை எழுதும்போது, இஸ்லாமிய அமைப்பு மற்றும் அவர்களின் ஆணித்தரமான போதனைகளைக் குறித்தும், அவைகளைப் பின்பற்றுகிற ஏராளமானோரைக் குறித்தும், அவர்கள் கையாளுகிற காரியங்களைக் குறித்தும் சிந்தித்தேன்.

அவர்களுடைய வாழ்க்கையில் தங்கச் சட்டத்தை விதியை மட்டுமல்ல, நல்ல சமாரியன் முன்மாதிரியையும் பார்க்க முடிவதில்லை. **சக மனிதர்களிடம் இரக்கத்தை மறுப்பது நாகரீகப் புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது.** உதவி தேவைப்படும் ஒருவரிடத்தில் பகையுணர்வையும், மிருகத்தனத்தையும் காட்டுவது வெட்கத்திற்குரியதாகும். அவர்களிடத்தில் மாற்றம் ஏற்படவும், சக மனிதர்களிடத்தில் ஆழமான அக்கறையும் அன்பும் செலுத்தப்பட வேண்டுமென்பதும் எங்களுடைய ஊக்கமான ஜெபமாக இருக்கிறது.


**எனக்குப் பிறன் யார்? (லுக்கா10:29-37).**

அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: **எனக்குப் பிறன் யார் என்று கேட்டான்.** இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஓர் ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான். இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார்? அதற்கு அவன் : அவனுக்கு இரக்கஞ் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: **நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்.** ✝

# சமநிலை
## *Balance*

*Dale Grissom*

ஜனங்கள் எப்போதுமே சமநிலையான வாழ்க்கையை நடத்த சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் இந்த நவீன காலத்தில் நாம் செய்யும் காரியங்களில் மிதமான போக்கைக் கடைபிடிப்பது எளிதானதல்ல.



கிறிஸ்தவர்களும் ஆராதனையில் சமநிலையை அடைய அதிகமாக சிரமப்படுகிறார்கள். சிலர் ஆராதனை வேளையில் உணர்வுகளை அதிகமாக வெளிப்படுத்துகிற வகையைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். சிலரோ, எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல் மந்தமாக இருப்பது வேதனையை அளிக்கிறது. ஆராதனை நேரத்தில் சில கிறிஸ்தவர்கள் தங்களை இறுக்கமாக

வைத்துக்கொண்டு ஆராதனையில் அனுபவிக்காமல் இருப்பது மிக மோசமான போக்காகும். இதில் சமநிலை இருக்க வேண்டும். அதாவது நாம் ஆராதனை அதிக உணர்வுகளை வெளிப்படுத்து கிறவர்களாகவும் இருக்கக்கூடாது, அதே நேரத்தில் உணர்வுகளை அறவே வெளிப்படுத்தாமல் மந்தமாக இருக்கிறவர்களாகவும் இருந்து விடக்கூடாது.

நாம் கிறிஸ்துவின் சுவி சேஷத்திற்குக் கீழ்ப்படியும்போது, மெய்யாகவே நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அப்படி நாம் செய்யும் போது எல்லாவற்றிலும் தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்க முடியும். இது, இதற்கு முன்பு நாம் ஒருபோதும் அனுபவித்திராத சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுத்து, நம் வாழ்நாள் முழுவதும் தொடர்கிற ஓர் அனுபவமாயிருக்கும். இதினிமித்தம் மகிழ்ச்சியும், நம் சிருஷ்டிகரைப் பணிந்து ஆராதிக்கும் போது சமநிலையையும் உண்டாக்கும்.


தனிநபர் ஊழியத்தில் ஈடுபட பெரும்பாலான கிறிஸ்தவர்கள் விருப்பம் காட்டுவதில்லை. இப்படிப்பட்ட மனநிலை கர்த்தருடைய சபை வளராமல் இருப்பதற்குப் பிரதான காரணமாயிருக்கிறது. நாமோ அப்படியிராமல்இல்லங்களிலும் சமுதாயத்திலும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், போதிக்கவும் தொடங்க வேண்டும். ஜனங்களிடத்தில் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு சுவிசேஷத்தை எடுத்துரைக்க வேண்டும். வேத பாட வகுப்புகளையும், பிரசங்க மேடைகளையும் நம் செயல்களால் ஆக்கப்பூர்வமானதாக மாற்ற வேண்டும்.

வெளிநாடுகளில் குறிப்பாக வளர்ச்சி அடையாத நாடுகளில் தனிநபர் ஊழியம் வெற்றியடைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். அதன் தொடர் வெற்றிக்காக ஜெபிக்கிறோம். ஆனால், நாம் வாழ்கின்ற இடத்தில் தனிநபர் ஊழியத்தில் நாம் ஆர்வம் காட்டுவதில்லை, அப்படியென்றால், சமநிலை எங்கே? நாம் வாழ்கின்ற இடத்திலுள்ள ஆத்துமாக்களைக் குறித்த அக்கறையில்லாமல் வெளிநாடுகளில் ஆத்துமாக்கள் இரட்சிக்கப் படுவதைக் குறித்து சந்தோஷப்படுவது ஏன்? எல்லா இடங்களிலும் உள்ள ஆத்துமாக்களும் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்கள்தான். இம்மனப்பான்மை எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் இருக்கவேண்டும். ✝

# அன்பும் அக்கறையும்

## *Love and care*

### *Michael Dubina*



அன்பும் அக்கறையும் கொண்ட வாழ்க்கைதான்
இன்புற நமக்குத் தேவையானவைகள் இப்பூவுலகில்
இக்கிருபையின் ஈவுகளை எவ்வித பாரபட்சமுமின்றி
ஏராளமாக, தாராளமாக அள்ளி வழங்குவோம்

அன்பையும், அக்கறையையும் தேவையில் இருப்பவர்களுக்கு நாம்
காட்டும் போது மனிதநேயம் இன்றும் உயிரோடிருக்கிறதென்றும்
உதவிசெய்யும் மனப்பான்மை நீர்த்துப்போகவில்லையென்றும்
உதவும் உள்ளங்கள் உலகில் இன்றும் இருக்கிறதென்றும் தெரியப்படுத்துகிறோம்.

உங்களிடமிருந்தும் என்னிடமிருந்தும் வெளிப்படுத்தப்படும் அன்பும் அரவணைப்பும்
தீரா துயரத்தில் துவண்டு போயிருப்பவர்களின் கண்ணீரைத் துடைக்கும்
விசுவாசம் உள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற நாம் தேவனிடத்திலிருந்து
பெற்ற அன்பையும் அக்கறையையும் தேவைப்படுவோர்க்குப் பகிரக் கடமைப்படுகிறோம்.

ஆராதனை

# நான் ஆராதிக்க வரும்போது...

## *When I Come To Worship...*

*Michael L. King*



**தே**வனுடைய நன்மையை வலியுறுத்தி அவரை ஆராதிப்பதின் மூலமாகத் தான் அவருக்கு நன்றி செலுத்த முடியுமென்று எழுத்தாள ராகிய யாக்கோபு தன்னுடைய பெயரைத் தாங்கி வரும் நிருபத்தில் குறிப்பிடுகிறார். இந்நிருபம் நடை முறை கிறிஸ்தவத்தைப் பற்றிய புத்தகம் என்று பலரால் குறிப்பிடப் பட்டது போலவே, நடைமுறைக் காரியங்களைப் பற்றித்தான் அதிகம் பேசுகிறது.

இந்நிருபத்தில் 1ஆம் அதிகாரம் 18–22 வசனப்பகுதிகளில் நடைமுறைக் காரியங்கள் குறித்து எழுதப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். **அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். ஆகையால், என் பிரியமான சகோதரரே யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவராய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.**

யாக்கோபு, இந்நிருபத்தில் தேவனை நன்மையான ஈவுகளின் ஆதாரமாகக் காட்டுகிறார் [வசனம்17]. நம் வாழ்க்கையில் நன்மையானவைகளெல்லாம் தேவனிடத்தில்இருந்துதான் வருகிறது. அதேவேளையில், தீமையானவைகளை மனிதன் தனக்குத்தானே வருவித்துக் கொள்கிறான். இதினிமித்தம்

நன்மையான ஈவுகள் பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ள மாட்டான் [யோவான்3:27]. மனிதனுக்கு, வேத வாக்கியங்கள் வெளிப் படுத்தப்படாமல் இருந்திருந்தால் தேவனுடைய அன்பையும், நன்மையையும் குறித்து அவன் அறியாமலே இருந்திருப்பான். தேவனுடைய சித்தம் நன்மையானதாகவும், சுத்தமுள்ளதாகவும் இருக்கிறபடியால் நாம் எல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே யூதர்கள் மத்தியிலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும் எரேமியா தீர்க்கர்களால் தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்ட புதிய உடன்படிக்கை உண்மையாகவே ஆச்சரியமான ஒன்றுதான். **இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கையை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில், நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரே.31:31-34).**

புதிய உடன்படிக்கையின் மக்களாகிய நாம் அதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக உணர்ந்து கொண்டோம் [எபே.1:3; 2பேதுரு1:3]. நாம் கர்த்தருடைய சபையில் இருப்பதன் மூலமாகத்தான் இவைகளையெல்லாம் நாம்அறிந்து, உணர்ந்து தேவனுடைய ஈவுகள் எத்தனை நன்மையானது, பூரணமானது, நாம் அவைகளுக்கு எவ்வளவு கடன்பட்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டால் தான் அவருக்கு உண்மையான ஆராதனை ஏறெடுக்க முடியும். நமக்கு ஈவுகளைத் தந்தருளின மாபெரும் தேவனுக்கு நன்றி செலுத்தும்

விதமாக, ஆராதிக்க நாம் ஒன்று கூடும்போது, நாம் கேட்கிறதற்குத் தீவிரமாயிருக்க வேண்டும். யூதப்பாரம்பரிய பழமொழி ஒன்று இவ்விதம் குறிப்பிடுகின்றது. நீதிமான்கள் குறைவாகப் பேசி, நிறைவாகச் செய்வார்கள்; துன்மார்க்கர் அதிகமாகப் பேசி ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று.

மேலும், ஞானத்திற்கும் உதடுகளை அடக்குவதற்கும் இடையே ஒரு சம்பந்தம் உண்டு. புத்திமான் தன் உதடுகளை அடக்குகிறான் [நீதி.10:19]. Adam Clarke என்னும் வேதவல்லுனர் சொல்லும்போது, பேசுகிறதற்குத் தீவிரமாய் இருப்பவர்கள் பொதுவாக, கோபக்குணம் உடையவர்களாகத்தான் இருப்பார்கள் என்று சொல்லுகிறார். யாக்கோபு 1:19 –ல், **ஆகையால், என் பிரியமான சகோதரரே யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்** என்கிறார். அதாவது, பேசுகிறதற்குத் தீவிரமாயிருப்பவர்கள் தாங்கள் பேசும் வார்த்தைகளைக் குறித்து யோசிக்காமல் கோபத்தின் வார்த்தைகளை அனல் தெறிக்க அள்ளி வீசுவார்கள். ஆனால், நாம் நம்முடைய அன்பையும், பக்தியையும் தேவனுக்கு வெளிப்படுத்தும் விதமாய் ஆராதனைக்காகக் கூடி வரும்போது, ஆராதனையை வியர்த்தமாக்கும் எந்தவொரு காரியத்திலும் நாம் ஒருபோதும் ஈடுபடக்கூடாது. **தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதைப்போல பலியிடுவதைப் பார்க்கிலும் செவி கொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள். தேவசமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியில் இருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக** [பிரசங்கி 5:1,2]. ஞானி இங்கே சொல்லும்போது நாம் பூமிக்குரியவர்களாயிருக்கிறபடியால், நாம் துணிகரமாய்ப் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார். ஆகையால் நாம், பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசவும், உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவும் [எபே. 4:28; 1பேதுரு 3:15]. வேதம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. ✞

# பதிலி ஆராதனை
## *Proxy Worship*

Kevin L. Moore

மார்மன் சபை மூப்பர்களிடம் நான் விவாதித்துக் கொண்டிருந்த போது, நான் அவர்களுடைய வியாழன் மாலை கூடுகையில் கலந்து கொண்டால், வாரத்தின் இடைப்பட்ட நாளில் கிறிஸ்துவின் சபையில் நடக்கும் வேத பாட வகுப்பில் கலந்து கொள்வதாக அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அது அநேக புதிய தகவல்களை எனக்குக் கற்றுக் கொடுத்த அனுபவமாக இருந்தது. ஒட்டுமொத்த மார்மன் சபையின் ஆராதனையும் செயற்கைக்கோள் மூலமாக ஒளிபரப்பப்பட்டது. பாடங் களையெல்லாம் மார்மன் சபை பாடல் குழுவினரால் வழிநடத்தப் பட்டன. கூட்டத்தின் முடிவில் எல்லோரும் பாடும்படியாக அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், அங்கே கூடியிருந்த சபையார் பாடல் விஷயத்தில் நடந்துகொண்ட விதம் என்னை அதிகமாகத் துக்கப்படுத்தியது என்பதை நான் இங்கே கூடியிருந்த ஜனங்கள் பாடல் குழுவினரைப் பாடவிட்டு அவர்கள் பாடாமலிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். இன்னும் சொல்லப்போனால் அவர்கள் பாடல் பாட கற்றுக்கொள்ளவே விரும்பவில்லை.

சில வருடங்களுக்கு பிறகு ஒரு Anglican சபை போதகரோடு வேதபாடம் நடத்திய போது புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளில்லாத பாடல் முறை இருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியப்பட்டார். அதற்குப் பிறகு அவர் ஒரு காரியத்தை என்னோடு பகிர்ந்து கொண்டார். அந்த Anglican சபையில் ஆர்கன் என்ற இசைக்கருவி வாசிப்பவர் இறந்துவிட்டார். எனவே வாசிப்பதற்கு வேறுயாருமில்லை, இறந்து போனவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்கும் வரை சபை அங்கத்தினரல்லாத வரை ஆர்கன் வாசிக்க வைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், தன்னுடைய கொள்கையில் பிடிப்புள்ள அந்தப் போதகர் ஓர் அவிசுவாசி ஆராதனையை நடத்த அனுமதி கொடுக்கவில்லை. அவர் சபையாரைப் பார்த்து நீண்ட நாட்களாக நாம் இந்த ஆர்கனை நம்பிதான் ஆராதித்து வந்தோம், இனிமேல் நாம் தேவனைத் துதிக்க நம் குரல்களைப் பயன்படுத்துவோம் என்று சொன்னார். அடுத்த சில மாதங்களில் ஆர்கன் இசை இல்லாமலேயே ஜனங்களுடைய பாடலில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டதாக ஒத்துக்கொண்டார். சிலகாலம் சென்றபிறகு ஆர்கன் வாசிக்கும் ஒருவர் கிடைத்த உடனே பழையபடி வாசிக்கத் தொடங்கிவிட்டார்கள். நான் என் போதக

நண்பரிடம் ஆர்கன் இல்லாமலேயே பாடல் நன்றாகத்தானே இருந்தது,. மறுபடியும் நீங்கள் ஏன் ஆர்கனை சேர்த்தீர்கள் என்று கேட்டதற்குப் பதில் எதுவுமில்லை.

சமீபத்தில் நானும் என் குடும்பமும் உறவினர்களைப் பார்த்து விட்டு அருகில் உள்ள ஒரு சபைக்குச் சென்றோம். அங்கே ஆராதனை தொடங்கினவுடனே பிரசங்க மேடையில் நின்று கொண்டிருந்த பாடல் தலைவனுக்குப் பின்னால் ஆண்களும் பெண்களும் மைக்குளுடன் அணிவகுத்து விட்டனர். அங்கே நின்று கொண்டிருந்த துதி குழுவின் உதவியால் ஆராதனை இனிதே நிறைவேறியது. ஆனால், என்னருகில் இருந்தவர்கள் பாடாமல் வாயைத் திறவாமலிருந்ததையும், சிலர் முணு முணுத்துக் கொண்டிருந்ததையும் என்னால் காண முடிந்தது. அந்த சபையில் பெரும்பாலோனோர் பின்னால் உட்கார்ந்து மற்றவர்கள் பாடுவதைத்தான் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள்.

இந்த அனுபவங்கள் மூலமாக ஆராதனையில் தவிர்க்க வேண்டியவைகளைக் குறித்து தேவன் விவரித்திருக்கிற காரியங்களால் அதிகமாக கவரப்பட்டேன். ஆராதனையை மேம்படுத்த மனிதனுடைய வெளிப்புறமான முயற்சிகள் அதாவது அவைகள் பாடல் குழுவாகவோ, இசைக்கருவிகளாகவோ அல்லது துதி குழுவாகவோ இருக்கலாம். அவைகள் ஜனங்களுடைய கவனத்தைச் சிதறடிக்கிறவைகளாகவும், தடைகளாகவும் தான் இருக்கின்றன. ஆராதிப்பவர்களால் ஆவியோடும், உண்மையோடும் ஏறெடுக்கப்பட வேண்டிய ஆராதனை, மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதுமைகளால் தடைப்படுகின்றன. இதைக் குறித்து நாம் தேவனுக்கு முன்பாக கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயிருப்பதால் ஜாக்கிரதையாயிருப்போம்!

மதசம்பந்தமாக நாம் நடைமுறைப்படுத்துகின்ற எல்லா காரியங்களுக்கும் முக்கியமானது வேதாகம அதிகாரந்தான். புதிய ஏற்பாடுதான் பூரணமானது இதற்கு மேல் பூரணப்படுத்த ஒன்றுமில்லை கொலோ. 3:16,17). **கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாடுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது** கிரியையினாச்லாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். நாமும் அந்தப்படியே செய்ய நம்மை ஆயத்தமாக்குவோம். ✝

# ஆவிக்குரிய சவால்கள்

## *Spiritual Challenges*

*Hardeman Nichols*

**நா**ம் சவால்கள் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சில விளைவுகள் நம்மை அதிகமாகப் பாதிப்பதில்லை. சில விளைவுகள் நம்மை நித்திய நித்தியமாகப் பாதிக்கின்றன. இவ்வுலகிலுள்ள எல்லா மக்களுடைய ஆத்துமாக்களுக்காக இடைவிடாத ஓர் யுத்தம் நித்தமும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. இந்த யுத்தம், இராணுவக் கிடங்கிலிருந்து எடுக்கப்படும் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களைக் கொண்டு தொடுக்கப்படும் யுத்தம் அல்ல. ஆயினும், இது ஓர் நிஜப்போர்தான். **ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு** [எபே.6:12]. வானமண்டலங்கள் என்னும் சொற்றொடர், எபேசியர் நிருபத்தில் பலமுறை வருவதை நம்மால் காணமுடியும். இது ஆவிக்குரிய உலகத்தைக் குறிக்கும் ஒரு சொற்றொடர் ஆகும். இங்கே மனிதர்களுடைய ஆத்துமாக்களுக்கான ஆவிக்குரிய யுத்தம் உண்மையாக நடக்கிறது.

இப்போரில் ஒருவர் வெற்றிபெற வேண்டுமென்றால், சரியான அல்லது தேவையான ஆயுதங்கள் இருக்க வேண்டும். இந்த ஆயுதங்கள் ஆவிக்குரிய ஆயுதங்களாகவும் வல்லமை பொருந்தியவைகளாகவும் இருக்கின்றன. கொரி.10: 4,5 **எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிருக்கிறது, அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைபடுத்துகிறவர்களாயிருக்கிறோம்.** எபே 6:17 யுத்தத்திற்குப் பயன்படுத்தப்படும் ஒரே ஆயுதம் ஆவியின் பட்டமாகிய தேவவசனந்தான்.

ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனுடைய பாதுகாப்புக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொண்டு, சத்தியம் என்னும் கச்சையை அரையில் கட்டினவர்களாயும், நீதி என்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்

போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நிற்க வேண்டும். [எபே.6:13-17]. மேலும், பவுல் 1 தெச.5:8-ல் இரட்சிப்பென்னும், தலைச்சீராவை இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீரா என்றும், மார்க்கவசத்தைக் குறிப்பிடும் போது, விசுவாசம் என்னும் மார்க்கவசம் என்று குறிப்பிடுகிறார். போர், போராட்டம் இவைகளுக்கு மத்தியில் இந்தப் போர் சமாதனத்தின் சுவிசேஷத்தைக் கொண்டு கொடுக்கப்பட வேண்டும் என்பது ஒருவருக்குப் புதுமையாகத் தோன்றலாம். யாரையும் சேதப்படுத்தாமல், சத்தியம், அன்பு போன்ற தத்துவங்கள் மனித இனத்தின் போக்கையும், முடிவையும் பாவத்திலிருந்து நீதிக்கு மாற்றவேண்டுமென்று விரும்புகிறார்.

நாமெல்லாரும் விரும்பினாலும் சரி, விரும்பிவிட்டாலும் சரி, போரில் அல்லது போராட்டத்தில் தான் இருக்கிறோம். இதில் இடைப்பட்ட இடம் என்று எதுவும் கிடையாது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மத்தேயு 12:30-ல், **என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்** என்று சொல்லியிருக்கிறார். இதிலிருந்து நாம் தான் நமக்கானதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதில், நமக்கான சவால், சரியான பக்கத்தில் நிற்பதாகும். நீதியினால் பாவத்தை எதிர்த்து, எல்லா வகையான தீமைகளையும் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு தோற்கடிக்க வேண்டும். அப்படிச்செய்ய, முதலாவது நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமாயிருக்கிறது. ரோமர் 6:16-ல் இப்படியாகக் கேள்வியொன்றைக் கேட்கிறார். **மரணத்துக் கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக் கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளா யிருக்கிறீர்களென்று அறியீர்களா?** என்ற பவுலடியார், பாவத்திற்கு அடிமைகளாயிருந்தவர்கள் தங்கள் நிலையை மாற்றி, கிறிஸ்துவுக்கு அடிமைகளாக மாறினபடியால் தேவனுக்கு நன்றி செலுத்தினார். இந்நிலை அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்ததினாலும், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றதினாலும் சாத்தியமானது [ரோமர் 6:1-6,17,18]. **ஆகையால் என்னை சொல்லுவோம்? கிருபை பெருகும் படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோம்? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான**

ஜீவனுக்குள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுதப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுக்குள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடேச் கூடச்சிலுவையில் அறையப்பட்ட தென்று அறிந்திருக்கிறோம். முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளா யிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்திற்கு நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.

இப்போது கர்த்தர் பட்சத்தில் இருப்பவர்கள் கர்த்தருக்காகச் செய்யும் காரியங்களில் வித்தியாசத்தை ஏற்படுத்தும் சவால்களை ஏற்றுக் கொள்வது அவசியமாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ஆவியின் ஏவுதலினாலே இவ்விதம் சொல்லுகிறார். ரோமர் 6:19-22, **உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்பொழுது உங்களுக்கு என்ன பலன்கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்.**

இந்தப் போர் தேவனுடைய உயரிய சேவையில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுவதைக் குறிக்கிறது. ஆகவே, நாம் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டிய சவால் நமக்கு முன் இருக்கிறது [1தீமோ.6:12]. இதற்காக நாம், மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாக்குதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்த வேண்டும். [1கொரி.7:1]. அதைவிடுத்து, ஒருவர், தான் கடந்த காலத்தில் தன்னைக் கட்டிப்போட்ட பாவத்தோடு போராட வேண்டியிருக்கிறதே என்று உணரும்போது அது அவருக்குத் துக்ககரமான ஒன்றாக இருக்கிறது. அதாவது, ஒருவர் தன்னுடைய பாவப்பழக்க வழக்கங்களை விட்டொழிப்பதற்கு அதிக காலத்தை எடுத்துக் கொள்வது வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். நாமோ அப்படியிராமல், நம்முடைய எண்ணங்களின் மீதும், செயல்களின் மீதும் நம் எதிராளியாகிய பிசாசு, சரிபாதியான கட்டுப்பாட்டைக்

கொண்டிருக்க அனுமதிக்கும்போது, ஏதோ ஒரு வகையில் சத்துருவுக்கு உதவுகிறோம் என்பதை நாம் உணர்ந்துகொண்டு, அப்படிப்பட்ட காரியங்களுக்கு இடங்கொடாமல், அக்காரியங்களையெல்லாம் விட்டொழிக்க வேண்டும்.

இன்று நமக்கு முன்பாக இருக்கும் மிகப்பெரிய ஆவிக்குரிய சவால்களுள் ஒன்று, நம்முடைய தாலந்துகளை கிறிஸ்துவின் நிமித்தம் முழுமையாகப் பரிசுத்தமாக்குவதாகும். அதாவது, தேவனுடைய சத்திய வார்த்தைகளைக் கலப்பில்லாமல் போதிக்கும் தகுதி வாய்ந்த போதகர்களும், பிரசங்கியார்களும் தான் தேவனுக்குத் தேவை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்றரை ஆண்டுகள் அப்போஸ்தலர்களுக்கு பயிற்சி கொடுத்தது போல, தேவனுடைய மிகப்பெரிய வேலைக்கு, ஊழியக்காரர்கள் தங்களை முழுமையாகத் தகுதிப்படுத்த நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அதாவது, அதிகமான நேரம் ஊழியத்தின் பாதையில் கடந்து செல்ல வேண்டும் [அப்.10:38]. மேலும், அவர்கள் அடுத்த தலைமுறைக்கும் பயிற்சி அளித்து, சிறந்த வழிகாட்டிளாகவும் இருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதினிமித்தமே பவுல், **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி** [11தீமோ.2:2] என்று தீமோத்தேயுவுக்குச் சொன்னார்.

ஆகையால், நாம் மிகப்பெரிய கிறிஸ்தவ சேவைக்கான சவாலைப் பெற்றிருக்கிறோம். அதாவது, பெலவீனருக்கும், நலிந்தோருக்கும் உதவி செய்யப் போதிக்கப்பட்டிருக்கிறோம். இப்படிச் செய்ய, அப்படிப்பட்டவர்கள் மீது நமக்கு ஆழமான அன்பு அவசியப்படுகிறது. இதைக்குறித்து வேதாகமமும் இவ்விதம் போதிக்கிறது. [1தெச.5:14]. **மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறது என்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். இப்படிச் செய்வதே கிறிஸ்தவ சேவையின் ஆவிக்குரிய நங்கூரமாயிருக்கிறது.**

மேற்கண்ட ஆவிக்குரிய சவால்களை மேற்கொள்ள வேண்டுமானால், நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவினிடத்திலும், அவருடைய சபையினிடத்திலும் உண்மையாயிருக்கிற பரிசுத்தமுள்ள ஆவிக்குரிய வாழ்க்கை அவசியமாயிருக்கிறது. ✝

***நாம் தேவனுடைய வார்த்தையை அனுதினமும் எடுத்துச் சென்று உலகுக்கு நம் வாழ்க்கையை ஒளிரும் உதாரணங்களாக மாற்றுவோம்.***

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# கீழ்ப்படிந்திருங்கள்

## BE SUBMISSIVE

Loy Mitchell

**ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்** [யாக்கோபு4:7].

### *தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்*

பெருமையினால் நிறைந்திருக்கிற மனிதன் தன்னுடைய வழியே சரியானது அல்லது சிறந்தது என்று நினைக்கிறான். இது உண்மையல்ல. பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார் [வசனம்7]. இதினிமித்தம் தேவன் மனிதனை உண்டாக்கினவரானபடியால் மனிதனுக்கு எப்போதுமே எது சிறந்தது என்பதை அவர் நன்கு அறிந்திருக்கிறபடியால் கீழ்ப்படிந்திருங்கள். கீழ்ப்படிதல் என்னும் வார்த்தை மூலபாஷையிலே ராணுவத்தில் தரம் அல்லது வரிசை போன்றவைகளோடு தொடர்புடைய வார்த்தையாகும். எனவே, அவருக்குக் நம்முடைய தளபதிக்கு கீழே நாம் போர்ச்சேவர்களாக நம்மைக் கீழ்ப்படுத்தும்படியாக கட்டளை பெற்றிருக்கிறோம். நம் படைத்தளபதி என்னவெல்லாம் கட்டளையிடுகிறாரோ அதன்படி நாம் செய்வோம். இது இரட்சிப்பு ஆராதனை மற்றும் நம் வாழ்க்கை முறையைப் பொறுத்த வரை உண்மையாயிருக்கிறது. **கீழ்ப்படிந்திருங்கள்.**

### *பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்*

பிசாசு இவ்வுலகத்தின் அதிபதியாயிருக்கிறபடியால் நான் இனி உங்களுக்குள்ளே அதிகமாய் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்றான் நம் இரட்சகர், [யோவான்14:30]. பிசாசு நம்முடைய ஜீவியங்களை ஆளும்போது நாம் நம்முடைய மாம்ச இச்சைகளைப்

பின்பற்றி கோபாக்கினையின் பிள்ளைகளாக மாறிவிடுகிறோம். **அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்** [எபே.2:3].

நாம் பிசாசின் நண்பர்களாகி அவன் நம்மை ஆளுகை செய்வானானால், நாம் தேவனுடைய சத்துருக்களாக மாறுகிறோம். **விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால், உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்** [யாக்.4:4]. பிசாசுக்கு நாம் ஒரு போதும் செவிகொடுக்கக் கூடாது. அவன் பொய்யனாக இருக்கிறபடியால் ஏமாற்று வேலையில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். மேலும், அவன் நரக அக்கினியில் தூக்கி எறியப்படுவதை அறிந்திருக்கிறபடியால், நாமும் அங்கே போக வேண்டுமென்று விரும்புகிறான். ஆகையால், அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

## *அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்*

இது எப்படி நடக்கிறது? தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். இச்சோதனை மிகவும் கடினமானதா? இதிலிருந்து தப்பித்துக் கொள்ள ஏதாவது வழி உண்டா? உண்டு.

**மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல், வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவரா யிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப் படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்** [1கொரி.10:13]. நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்போது நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை ✝

# நேர்த்தியாக முதுமையாகுதல்

## *Growing Old Gracefully*

*Randall Caselman*




முதுமை என்பது ஓர் அருமையான பொக்கிஷம் அப்படித்தானே! நாம் இன்னும் நம்முடைய வாழ்வில் இளமை என்னும் நீருற்றைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் நமது சரீரத்தில் உள்ள கறைகளையும், குறைகளையும் வண்ணச்சாயம் கொண்டு மறைப்பதன் மூலமாக முதுமை யாவதைத் தடுக்க முயற்சித்தாலும், முதுமை முந்திக்கொண்டு தொடர்ந்து வீறுநடை போட்டுக் கொண்டு தான் இன்றளவும் இருக்கிறது என்பதே உலகளாவிய உண்மை!

நாம் நம்முடைய முதிர்வயதில் தேவனுக்காகப் பயன்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

- நோவா நானூறு வயதுடையவராயிருந்தபோது, பேழையை உண்டாக்கும்படியாகத் தேவன் அவருக்குக் கட்டளையிட்டார்
- மோசே எகிப்திலிருந்து இஸ்ரவேலை வழிநடத்தின போது எண்பது வயதுடையவராக இருந்தார்
- நீதியின் வழியில் உண்டாகும் நரைமயிரானது மகிமையான கிரீடம் என ஞானி அறிவித்தார் [நீதி.16:31]
- முதியோரிடத்தில் ஞானமும், வயது சென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே என்று யோபு அறிவித்தார் [யோபு 12:12].
- இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமை யையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ள வனாகும் வரைக்கும் என்னைக் கைவிடாதிருப்பீராக என்று சங்கீதக்காரன் அறிவித்தார் [ சங். 71:18]
- பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்; என்று வயதாகும் விதத்தைப் பற்றி பவுல் இவ்விதம் குறிப்பிட்டுள்ளார் [ II கொரி.5:1].

இங்கே உண்மை என்னவென்றால், வயதாகும் தோற்றத்தில், நாம் எந்த இடத்தில் இருந்தாலும் அது பரவாயில்லை. ஏனென்றால் , இது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. வயதின் அந்த குறிப்பிட்ட பருவத்தை அதாவது முதுமையை மாற்ற நம்முடைய நேரம், ஆற்றல், பணம் மற்றும் திறமைகளை விரயமாக்குவது எவ்விதத்திலும் தேவனைப் பிரியப்படுத்தாது. நம்முடைய முதுமையைக் குறித்து நாம் அதிருப்தியடைவது நமக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுக்கிறது. இளமையாயிருந்தபோதும், முதுமையடைந்த பின்பும் அதற்கென்று தேவனிடத்தில் நமக்கு ஒரு நோக்கம் இருந்தது. நாம் திரும்பவும் இளமைக்குத் திரும்ப முயற்சிப்பது தேவனுக்குப் பிரியமில்லாதது.

**நாம் எப்படி நேர்த்தியாக முதுமையடைய முடியும்**
**மாற்றத்தைப் புரிந்து கொள்ளும்போது**

எல்லாமே எப்போதுமே ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்று விரும்பினால், வாழ்க்கையில் பல குழப்பங்கள் ஏற்படும். மூத்த குடி மக்களின் வாழ்க்கையானது மாற்றங்களால் நிறைந்தது. மாற்றம் எப்போதுமே மாற்றத்தக்கதல்ல. மாறாக, குறுகிய இடத்தை அதிக மாற்றத்தால் நிரப்பினால் அங்கே சீரழிவு தான் ஏற்படும். இப்போது நம் தோற்றம் மாறிவிட்டபடியால், பதவி உயர்வு, பிள்ளைகளுடைய கல்வித்திட்டம் குறித்த ஆசைகளெல்லாம் நமக்கு இல்லை. மேலும், நம் ஆரோக்கியத்தில், நிதிநிலையில், ஆற்றல் அளவில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், நம்மால் சில காரியங்களைச் செய்ய முடியாது, செய்யவுங்கூடாது, அதேவேளையில் இவைகளென்றும் நம்மை ஆட்கொள்ள அனுமதிக்கவும் கூடாது.

**நம்மைவிடப் பெரிதான ஒன்றில் நம்மை நாம் இழந்துவிடும் போது**

பணியிலிருந்து நாம் ஓய்வு பெற்ற பின், நாம் சந்திக்கும் மிகப் பெரிய பிரச்சினைகளுள் ஒன்று , நம்மைப் பற்றிய கவனம் நம்மீது திரும்பி விடுகிறது. அதாவது, நம் கவனமானது நம் பிள்ளைகள், வேலை, சபை போன்றவைகளிலிருந்து விலகி, அது நமக்குள் திரும்பிவிடுகிறது. இது எல்லா வயதினருக்கும் பிரச்சனையை ஏற்படுத்துகிறது. சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சர் ஒருவர் சொல்லும் போது, மக்கள் வாழ்வதற்கான அர்த்தத்தைத், தங்கள் வாழ்க்கையை விடப் பெரிதான ஏதோ ஒன்றில் கவனம் செலுத்தும் போது தான் கண்டுபிடிக்கிறார்கள் என்று சொன்னார். ஆனால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இன்னும் ஒருபடி மேலே சென்று இதற்கான விடையைக் கொடுத்துவிட்டார். அது **மற்றவர்களுக்குச் சேவை செய்யுங்கள்** என்பதாகும். இதனிமித்தம் மருத்தவ மனைகளுக்கும், தீராத பிணியால் அவதிப்பட்டு, மரணத் தருவாயிலிருக்கும் நோயாளிகள் பராமரிக்கப்படும் இடங்களுக்குச்

சென்று அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும். இத்தகைய அமைப்புகளுக்குச் சென்று நாம் தன்னார்வமாகச் சேவை செய்யவும் வேண்டும். மேலும், சபை மூலமாகச் செயல்படும் எண்ணற்ற ஊழியங்களில் தங்களுடைய முதிர்ச்சியையும், அனுபவத்தையும் செயல்படுத்தலாம்.

**நேற்றைய குற்றத்தைக் கொண்டு இன்றைய நாளைப் பாழாக்காத போது**

நம்மில் பலர் நம்முடைய கடந்த கால குற்றங்களை நினைத்து, நிகழ்கால மகிழ்ச்சியை மங்கச் செய்து கொண்டிருக்கிறோம். கடந்த காலத்தைக் குறித்த கசப்புணர்வுடன் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, நாமெல்லாரும் கடந்த காலத்தில் பல தப்பிதங்களைச் செய்திருப்போம். ஆனால், அவைகள் நம் மகிழ்ச்சியைக் கொள்ளையிட நாம் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறவர்களாக இருக்க வேண்டும். [பிலிப்பியர் 3:13,14].

**சேவை செய்வதற்கான விருப்பம் இருக்கும் போது.**

Douglas Mc Arthur என்பவர் தன்னுடைய வீட்டுச் சுவரில் **இளமை என்பது வாழ்க்கையின் ஒரு பருவமல்ல. மாறாக, அது ஒரு மனநிலை என்று எழுதியிருந்தார்.** ஓர் அம்மையார் தன்னுடைய 101– வது வயதில் சித்திரம் வரைந்து கொண்டிருந்தார். Oliver Wendell Holmes என்பவர் உச்சநீதிமன்றத்தின் நீதியாக 90 வயதுவரை பணியாற்றினார். Conrad Adenauer என்பவர் தன்னுடைய 87 வது வயதில் மேற்கு ஜெர்மனியின் அதிபராக இருந்தார். Noah Webster என்பவர் தன்னுடைய 70 வது வயதில் தான் சொல் அகராதியை வெளியிட்டார். அனைவரும் அறிந்த அன்னை தெரசா தன்னுடைய 87 வது வயதுவரை மக்களுக்குச் சேவை செய்தார்.

இதினிமித்தம் தேவன் நம்மை அற்புதவிதமாகப் பராமரித்து வாழ்க்கையின் இந்த நிலைக்கு நம்மைக் கொண்டு வந்து, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நம்மை இம்மட்டும் வழி நடத்தியிருக்கிறார். இப்போது கேள்வி என்னவென்றால், தேவனின் நோக்கத்திற்காக தேவன் நம்மைப் பயன்படுத்த நாம் அனுமதிக்கிறோமா? உண்மையாகவே சிறந்தது இனிதான் வரப்போகிறது. வெளி.14:13, பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று. ✝

# நூறு வயது வரை வாழ விரும்புகிறீர்களா?

## *Would You Like To Live To 100?*

*E. Claude Gardner*

இவ்வுலகில் நாம் யாரையாவது பார்த்து நூறு வயது வரை வாழ விரும்புகிறீர்களா? என்று கேட்டால், சிலர் வேண்டாமென்று வலியுறுத்திச் சொல்லக்கூடும். இன்னும் சிலர் தங்கள் சரீர மற்றும் மனநலனை அடையாளமாகக் கொண்டு, நீண்டநாள் வாழ தங்கள் விருப்பத்தைத் தெரிவிப்பார்கள்.

இப்பூமியில் நாம் எத்தனை நாட்கள் வாழப்போகிறோம் என்பதை வேதாகமம் நமக்கு வெளிப்படுத்தவில்லை. நாம் யாரும் மெத்துசலாவோடு போட்டிபோட்டு 969 வருடங்கள் வாழ முடியாது. அதேபோல், எசேக்கியா ராஜாவுக்கு பதினைந்து வருடங்களைத் தேவன் கூட்டி வழங்கியதுபோல் நமக்கும் கூட்டி வழங்குவார் என எதிர்பார்க்க முடியாது [11ராஜாக்கள்20]. மேலும், சங்கீதம் 90:10-ல், நம் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம் பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் என்று பார்க்கிறோம். அப்படியென்றால், எண்பது வயதுக்குமேல் வாழ்பவர்கள் காலத்தைக் கடன் வாங்கித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக!

என் பிராணன் காற்றைப் போலிக்கிறதென்று யோபு சொன்னார் [யோபு7:7]. நம் ஜீவன் கொஞ்சங்காலம் தோன்றி பின்பு தோன்றாமல் போகிற புகையைப் போலிருக்கிறது என்று யாக்கோபு சொல்கிறார். மேலும், அவர் வசனிக்கையில், ஆண்டவருக்குச் சித்தமானால் [4:15] என்று சொல்லும் போது நாம் இப்பூமியில் எத்தனை நாட்கள் வாழ வேண்டுமென்பதை தேவன்தான் தீர்மானிக்கிறார். எப்பாப்பிரோத்துவின் ஆயுசுநாட்களைஅதிகரிக்கச் செய்தது தேவனுடைய இரக்கம் தான். எப்பாப்பிரோத்து வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான். ஆகிலும் தேவன் அவனுக்கு இரங்கினது மல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு எனக்கும் இரங்கினார் என்றார் பவுல் [பிலிப்பியர்2:27]. ஆக, தேவன் தம்முடைய பரிபூரண நன்மையினால் இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை நிறைவாய் வழங்குகிறார்!

வாழ்க்கையின் குறுகிய கால அளவை யாக்கோபு 4:13-15 வசனப்பகுதி மிகத் தெளிவாக விளக்குகின்றன. மேலும், நாங்கள்

இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே. ஆதலால்; ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும். இவ்வசனப் பகுதியில் இப்பூமியில் நிரந்தரமாக வாழ முடியாது என்னும் உண்மை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், இப்பூமிக்குரிய வாழ்க்கைக்கும், நித்திய ஜீவனுக்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம் என்பதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது! யோவான் 3:36; மத்தேயு 25:46- ல் குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும் என்றான். அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.

மனிதன் ஒருவன், பெரிய வியாபாரத்திற்காக சாதுரியமான திட்டங்களைத் தீட்டினான். இங்கே அவன் ஒரு வியாபாரி என்னும் நிலையில், வியாபாரத்திற்கான இடத்தையும், நோக்கத்தையும், லாபத்தையும் அவன் திட்டமிட்டான். இவன் அதிக லாபத்தை உண்டாக்கினமைக்காகக் குற்றஞ்சாட்டப்படவில்லை. நியாயமாக லாபம் ஈட்டுவது வியாபாரத்தில் எவ்விதத்திலும் தவறில்லை. மேலும், வருங்காலத்தைக் குறித்துத் திட்டம் தீட்டியதும் தவறில்லை. வருங்காலத்திற்காக கல்வி, சேமிப்பு மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்டிருப்பதும் தவறில்லை. சகலத்தையும் நல்லொழுக்கமாகவும், கிரமமாகவும் செய்வதுதான் காரியம் [1கொரி.14:40]. குறிப்பாக, இங்கே இவனுடைய பிரச்சனை என்னவென்றால், தன்னுடைய திட்டங்களில் அவன் தேவனை விட்டுவிட்டான். இப்படிச் செய்த அவன் வாழ்க்கை தோல்வியாக மாறி, பெருமையும், அகங்காரமும் பிடித்தவனாக மாறிவிட்டான். இவ்விதமாகத்தான் இவன் பாவம் விவரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிராமல், இவன் கர்த்தருக்குச் சித்தமானால், இன்னின்னதைச் செய்யவேண்டுமென்று தன் வாழ்க்கை முறையை அமைத்திருந்தால் நலமாயிருந்திருக்கும். அதைபோலவே நாமும் கூட வாழ்க்கையில் எந்தத் திட்டத்தை வகுத்தாலும், கர்த்தருக்குச் சித்தமானதா என்று உறுதி செய்துகொள்ள வேண்டும். ஆம், அப்போஸ்தலனாகிய பவுல், ஆயிரக்கணக்கான மைல் யாத்திரைகளில் தனக்கான தேவனுடைய திட்டத்தைக் குறித்து, எப்போதுமே அக்கறை உடையவராக இருந்தார்.

இதை அவர் எபேசு சபையார்களிடமும் அறிவித்திருகிறார் [அப்.18:21]. தம்முடைய மற்ற சகோதரர்களுக்கும் அவர் இவ்விதமாக எழுதினார். 1 கொரி.4:19, ஆகிலும் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, இறுமாப்படைந்திருக்கிறவர் களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்து கொள்வேன்.

ஒருவர் எதற்காக அதிகநாட்கள் வாழ ஆசைப்பட வேண்டும்? ஒருவர் வாலிபனாக இருந்தாலும் சரி, நடுத்தர வயதினராக இருந்தாலும் சரி, மற்றும் வயதானவராக இருந்தாலும் சரி, அவர் தேவனுடைய மகிமைக்காக வாழ வேண்டும் [IIபேதுரு 3:18; கொலோ.3:17;கலா.6:14]. அதாவது, ஒருவர் இவ்வுலக வாழ்க்கையில் மனந்திரும்ப நினைத்தும் அதற்கான சந்தர்ப்பம் அமையாத பட்சத்தில், ஒருவேளை அவருக்கு நீண்ட நாட்கள் வாழ வாய்ப்புக் கிடைக்குமேயானால் அந்த வாழ்க்கையின் ஏதாவதொரு கட்டத்தில் மனந்திரும்ப அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அதுதான் நீண்ட நாள் வாழ்வதின் ஆசீர்வாதமாகும். இன்னுமாக, ஒருவர் நீண்ட நாள் வாழ ஆசைப்பட வேண்டியதற்கான மற்றுமொரு காரணம், மற்றவர்கள் மனந்திரும்ப அவர்களுக்காக ஜெபிக்கப் போதுமான கால அவகாசம் வேண்டும் என்பதற்காக. அதாவது, அவருடைய உறவினர்கள், நண்பர்கள் பலர் கிறிஸ்தவர்களாக இல்லாமல் இருக்கலாம். சிலர் தேவனை அறிந்தும், தேவசித்தத்திற்குத் தங்களைக் கீழ்ப்படுத்தாமல் இருக்கலாம். ஆகவே, அவர் நீண்டநாள் வாழ்வதின் மூலமாக, அப்படிப்பட்டவர்களும் மனந்திரும்ப வேண்டுமென்று அவர்களுக்காக ஜெபிக்கவும், அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்படவுமான கால அவகாசத்தை அவர்களுக்கு உண்டாக்கவும் அதிக நாட்கள் வாழ ஆசைப்படலாம். சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது [ரோமர்10:1]

இதினிமித்தம், தேவனுடைய கிருபை அதிகமாக இருப்பதால் ஒருவர் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழும்போது அவர் பாவத்திலிருந்து கிறிஸ்தவராக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவி கொடுத்து இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் [11கொரி.6:2]. ஆம், நம் குற்றங்களை அறிக்கையிடுவதற்கும் [யாக்.5:16] கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தை அறிக்கையிடுவதற்கும் இது தான் பொன்னான தருணம். மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் [மத்தேயு10: 32] இதுதான் இரட்சகர் கூற்று. ✝

# வசன ஆராய்ச்சி

## I கொரிந்தியர் 1:18 – 31

***Jerry Bates***

- சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு ...... [வசனம்18]
- எது தேவ பெலனாயிருக்கிறது? [வசனம் 18]
- வசனம் 19 எந்த பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியின் மேற்கோளாயிருக்கிறது?
- இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் எப்படி ஆக்கியிருக்கிறார்? [வசனம்20]
- யூதர்கள் ......... கேட்கிறார்கள், கிரேக்கர் .......... தேடுகிறார்கள்
- கிறிஸ்து .......... .......... வசனம் 24.
- தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது .......... ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; .........பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது [வசனம் 25]
- வெகு குறைவான கிறிஸ்தவர்கள் எந்த வகையைச் சார்ந்தவர்கள்? வசனம் 26.
- ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் ............ தெரிந்துகொண்டார் [வசனம் 27]
- உள்ளவைகளை அவமாக்கும்படி தேவன் எவைகளைத் தெரிந்து கொண்டார்? [வசனம் 28].
- தேவன் ஏன் அவைகளை அப்படித் தெரிந்து கொண்டார்? வசனம் 29.
- கிறிஸ்து நமக்காக என்னவானார்? வசனம் 31.

**I கொரிந்தியர் 1:18 – 31**

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. ஞானி எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்திய மாக்கவில்லையா? எப்படியெனில், தேவ ஞானத்துக் கேற்றபடி உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியா திருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று. யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும், யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக் கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார். இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிகபலமாயிருக்கிறது. எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானவர். ✞

## கிறிஸ்தவ இல்லம்

# அன்பும் விவாகமும்

## *Love And Marriage*

Dolton Key



**வி**வாக பந்தத்தைக் குறித்து சபையும் உலகமும் முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன. உண்மையில், சொல்லப்போனால் உலகம் விவாகத்தை ஒரு பந்தமாகவே பார்ப்பதில்லை. மாறாக, விவாகத்தை வசதிக் கேற்ப வெளியேறும் அல்லது விடுவிக்கும் ஓர் ஏற்பாடாகவே பார்க்கிறது. முன்பெல்லாம், திருமண வைபவத்தின் போது, நாமிருவரும் உயிரோடிருக்கும் வரை என்று தங்கள் உண்மைத் தன்மையைக் குறித்து உறுதியளித்தார்கள். ஆனால், இப்போதெல்லாம் நிலைமை அப்படியே தலைகீழாக மாறிவிட்டது. இப்போதெல்லாம் திருமணத்தில் இணையும் தம்பதிகள் நடைமுறையில் நாமிருவரும் ஒருவருக்கொருவர் அன்பு காட்டும் வரை என்று சொல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

இன்றைய நாட்களில் தம்பதிகளிடையே காணப்படும் அன்பு குறுகியகால அளவை உடையதாகவும், அடிக்கடி மாறுகின்ற அன்பாகவே அமைந்திருக்கிறது. கடந்த சில வருடங்களாகவே பல திருமணங்கள் முறிந்து விவாகரத்தில் போய் முடிகின்றன என்னும் தகவல்கள் குவிந்த வண்ணம் உள்ளன. ஆம் வழக்கப்படும் திருமணச் சான்றிதழ்களுக்குச் சமமாக விவாகரத்து நோடீஸ்களும் வழங்கப்படுகின்றது என்று ஓர் ஆய்வறிக்கை அதிர்ச்சியளிக்கும் தகவலைத் தருகிறது.

இருந்தபோதிலும், விவகாரத்து மாத்திரம் விவாகங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதில்லை. மாறாக, இன்றைய சீர் கேடான சமுதாயம் திருமணத்தின் மீது கொண்டிருக்கும் அபிப்பிராயமும் அச்சுறுத்தலாக உள்ளது. இன்று பலர் மகிழ்ச்சியான திருமணம் என்னும் சொற்றொடரை எதிரும், புதிருமான வார்த்தை என்று பரிகாசம் செய்கிறார்கள். திருமணம் ஆனவர்களில் ஐம்பது சதவீதத்தினர் தங்கள் விவாகத் துணைக்கு உண்மையாயிருப்பதில்லை என்று ஓர் ஆய்வறிக்கை சொல்லுகிறது. முன்பெல்லாம், திருமணத்திற்குப் பிறகு தகாத உறவு வைத்திருக்கும் ஆண்களின்

எண்ணிக்கை அதிகமாயிருந்தது. ஆனால், இப்போதோ, தகாத உறவு என்று வரும்போது நூலிழை அளவு கூட வித்தியாசமில்லாமல் ஆண்களும் பெண்களும் சரிசமமாக இருக்கிறார்கள்.

இப்பிரச்சனையைத் தீர்க்க, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், திரைப்படங்களும் எவ்வித நன்மையும் செய்யவில்லை. மாறாக, அவைகள் பிரச்சினைகளுக்குக் காரணங்களாகவே அமைந்திருக் கின்றன. ஆணுக்கும், பெண்ணும் இடையே தேவனால் ஏற்படுத்தப் பட்ட கனமான விவாகம் சின்னத்திரையிலும், வெள்ளித்திரையிலும் பெரும்பாலும் சுவாரஸ்யமற்ற ஒன்றாகவே காட்டப்படுகின்றது. திரைப் பட நடிகர்களும், நடிகைகளும் திரையிலும் சரி, திரைக்கு அப்பாலும் சரி, திரைமறைவான வாழ்க்கைதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆம், இந்த உலகம் விவாகத்தை வேடிக்கைப் பொருளாகப் பார்த்து, கனமான விவாகத்தை கனவீனப்படுத்துகிறது. இன்றைய நாகரீக நாட்களில் துணையை மாற்றிக் கொள்வது என்பது துணியை மாற்றிக் கொள்வதைப் போல் மாறிவிட்டது. நவீன காலத்து சின்றின்ப விரும்பிகள், எரேமியா காலத்தில் கர்த்தரை விட்டு விலகிச் சென்றவர்களைப் போல் வெட்கப்படுவதுமில்லை, நாணவும் அறியவில்லை [எரே.6:15].

இன்றைய தலைமுறை, திருமணத்தைக் குறித்த காரியங்களை லேசாக எடுத்துக்கொள்கிறது என்பது ஒன்றும் புதிதான காரியமல்ல. புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான Edward gibbons ன் கூற்றுப்படி ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு உட்காரணங்களுள் ஒன்று விவாகம் பண்ணுவதையும், விவாகரத்துப் பண்ணுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். மேலும், ரோமப் பிரஜைகளில் பெரும் பாலோனோர், காலத்தை, தங்கள் துணைகளின் எண்ணிக்கையைக் கொண்டே கணக்கிட்டார்கள். அப்போஸ் தலனாகிய பேதுரு, விபசார மயக்கத்தால் நிறைந்தவர்களும், பாவத்தை விட்டோயாதவை களுமாயிருக்கிற கண்களை யுடையவர்கள் என்று சொல்லுகிறார் [IIபேதுரு 2:14].

அதேபோல், தெய்வீக சத்தியமும் ஒரு போதும் மாறுவதில்லை மத்தேயு 19:4-65. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக; ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பொண்ணுமாக உண்டாக்கினார். என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத்தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக் கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது. ✝

# ஆவியின் பட்டயம்

என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர் களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அறையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர் களையும்; பொல்லாங்கள் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவசனமாகிய ஆவியின் பட்டத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

(எபேசியர்6:10-17)

வேதாகம கதாப்பாத்திரங்கள்

# யூதாஸ் - உண்மையுள்ளவன், துரோகி, பேரம் பேசுபவன் காட்டிக்கொடுத்தவன், தற்கொலை

## *Judas - Loyal, Traitor, Bargainar, Betrayer, Suicide*

***Robert R. Taylor***

பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின் பெயர்கள் மத்தேயு 10, மாற்கு 3 மற்றும் லூக்கா 6-ம் அதிகாரங்களில் பட்டியலிடப் பட்டிருக்கின்றன. ஆனால், எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக யூதாஸ் காரியோத்தின் பெயர் கடைசியாகத்தான் இடம் பெற்றிருக்கிறது. மத்தேயு மற்றும் மாற்கு இந்த யூதாசைக்காட்டிக் கொடுத்தவன் என்று குறிப்பிடு கிறார்கள். ஆனால் லூக்காவோ ஒருபடி மேலே சென்று துரோகி என்று குறிப்பிட்டுள்ளார்! பதினோரு அப்போஸ்தலர்களின் பெயர்களும் பரிசுத்தத்தின் உண்மையான கதா நாயகர்களாக நம் இருதயத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் சுவிசேஷத்தை தைரியமாக எடுத்துரைத்த வீரர்கள். அதே வேளையில் யூதாஸ் காரியோத் என்னும் பெயரைக் கேட்டாலே நமக்கு அருவருப்பாயிருக்கிறது. அதாவது, யூதாஸ் காரியோத் என்னும் பெயரை வெறுப்பும், மனக்கசப்பும் இல்லாமல் உச்சரிப்பது என்பது கடினமான ஒன்றுதான். ஆனால் யூதாஸ் இவ்விதமாகப் பிறக்க வில்லை, அவன் அழைக்கப்பட்டபோதும் அவ்விதமாக இல்லை. மாறாக, அவன் பாவத்திற்குப் பணிந்தபோது தான் அவ்விதமாக மாறினான்!

**யூதாஸ் உண்மையுள்ளவன்**

இந்த யூதாஸ் அப்போஸ்தலனாகப் பெயரிடுவதற்கு முன்பாக அவன் ஒரு சீஷனாக அதாவது மாணவனாக, பின்பற்றுபவனாக இருந்தான். அதாவது, மற்ற பதினோரு சீஷர்களைப் போலத்தான் ஆரம்பத்தில் இவனும் இருந்திருக்கிறான். அதன் பின்பு கிறிஸ்து வானவர் சீஷர்களை அப்போஸ்தலர்களாக உயர்த்தினார். பின்பு அவர்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாக அனுப்பப்பட்டார்கள். இதற்கும் யூதாஸ் தகுதியானவனாகத்தான் இருந்தான். இல்லையென்றால் ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பொறுப்பை இயேசு வானவர் அவனுக்குக் கொடுத்திருக்கமாட்டார். மேலும், இந்த யூதாஸ் பிணியாளிகளைச் சுகமாக்குவதற்கும், பிசாசுகளைத் துரத்துவதற்கும், குஷ்டரோகிகளைச் சுகப்படுத்துவதற்கும், மரித்தோரை உயிரோடு

எழுப்புவதற்கும் வல்லமை பெற்றிருந்தான். இவன் ஏற்கனவே பிசாசின் கூட்டணியில் இருந்திருந்தால், கிறிஸ்து இத்தகைய வல்லமைகளை அவனுக்கு வழங்கியிருக்கமாட்டார். யூதாஸ் ஆரம்பத்தில் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாகத்தான் இருந்தான். அவனால் இந்த உண்மைத் தன்மையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே, அவன் இழந்து போனவனாகக் காணப்பட்டான். இதினிமித்தம் தன் ஆத்துமாவையும் பாவத்திற்கு விற்றுப்போட்டான்.

**யூதாஸ் - துரோகி:**

யூதாஸ் தன்னுடைய துரோக முகத்தை வெளிக்காட்டுவதற்கு முன்பாக, தன் இருதயத்தில் துரோகி ஆனான். இருதயத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும் என்று நீதிமொழிகள் 4:23 ல் வாசிக்கிறோம். **இவ்வசனத்தின் முதல் பகுதியில் எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்** என்று சொல்லப்பட்டிருக்கிறது அதைச் செய்ய யூதாஸ் தவறிவிட்டான். மத்தேயு 12:35 ல் **இயேசு கிறிஸ்து நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான்** என்று உறுதியாகச் சொல்கிறார். அந்த யூதாஸ் பொல்லாதவைகள் தன் இருதயத்திற்குள் புகுந்து ஊடுருவி ஆதிக்கம் செலுத்த அனுமதி கொடுத்தான். பாவம் எப்போதும் அவனுக்குள் இருக்கவில்லை. லூக்கா 22:3ல் அப்பொழுது பன்னிருவரில் ஒருவராகிய ஸ்காரியோத் என்றும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான் என்று வாசிக்கிறோம். யூதாஸ் சாத்தானை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்றான்.

**யூதாஸ் - பேரம் பேசுகிறவன்:**

வியாபார பரிவர்த்தன நிலையிலிருந்தது யூதாஸின் பேராசையுள்ள இருதயம். வேதபாரகர், பரிசேயர், பிரதான ஆசாரியர்களோடு சேர்ந்து பாவஞ்செய்ய துடித்துக் கொண்டிருந்தது. இவன் பிரதான ஆசாரியரிடத்திற்கு போய் நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன். நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்று பேரம் பேசத் தொடங்கினான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். அது முதல் யூதாஸ் அவரைக்காட்டிக் கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான் [மத்தேயு 26:14-16]

**யூதாஸ் - காட்டிக்கொடுப்பவன்:**

யூதாசுக்கு உண்மையுள்ள பதினோரு பேரோடு சேர்ந்து அந்த மேல் வீட்டில் இராப்போஜனத்தில் எழுந்து நிற்கும் தைரியம் எப்படி

வந்ததென்று தெரியவில்லை. இவன் தன் கூட்டணியோடு சேர்ந்து அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை பண ஆசையினால் காட்டிக் கொடுக்கத் துணிந்தான். இவன் இயேசு கிறிஸ்துவைப் பிடிக்க அவர்களோடு சென்று இயேசுவை முத்தஞ்செய்து அடையாளங் காட்டினான். அது சாதாரண முத்தமல்ல, துரோகத்தின் முத்தம், காட்டிக் கொடுத்தலின் முத்தம், மாய்மாலத்தின் முத்தம்.

**யூதாஸ் தற்கொலை**

யூதாஸ் இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுக்கும் அக்கோரச் செயலை செய்தபிறகு, அவனுக்கு வெள்ளிக்காசுகள் மீது எவ்வளவும் விருப்பமில்லாதது போல் தெரிகிறது. எனவே, அப்பணத்தை அவன் தன் குற்றக் கூட்டாளிடம் அதைக் திரும்ப கொடுக்க வந்தான். ஆனால், அவர்களோ அவனை தரக்குறைவாக நடத்தினார்கள். அப்பொழுது அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்து விட்டு, புறப்பட்டுப்போய், நான்று கொண்டு செத்தான் (மத்தேயு 27:5). அவன் தலைகீழாக விழுந்தான். அவன் வயிறு வெடித்து குடல்களெல்லாம் சரிந்து போயிற்று. இந்த யூதாஸ் தனக்குரிய இடத்துக்குப் போனான். இது பாதாள தண்டனையைக் குறிக்கிறது.

**கற்றுக்கொண்ட பாடங்கள்:**

* பாவம் எப்போதுமே நாம் இப்படித்தான் இருக்கும் என்று கற்பனை செய்வதை விட மோசமானதாக இருக்கும்.

* யூதாசால் மனந்திருந்தியிருக்க முடியும்; மாறாக, அவன் தான் செய்த பாவங்களுக்காக வருத்தம் தான் பட்டிருக்கிறான்.

* யாருடைய ஆத்துமா விற்பனைக்காக இருக்கிறதோ அவர்களை பேரழிவு பின் தொடரும்.

* ஒரு தேவனுடைய பிள்ளையால் நித்திய நித்தியமாக இழந்து போகும் அளவுக்கு பாவம் செய்ய முடியும் – யூதாசைப் பாருங்கள்.


* ஒரு மனிதன் எந்தத்துறையில் திறமைமிக்கவனாக இருக்கிறானோ அதே துறையில் அவன் உண்மையில்லாதவனாகவும் இருக்க முடியும். யூதாஸ் பணத்தை கையாளுகின்ற காரியத்தில் அப்படித்தான் நடந்து கொண்டான். ✞

# சிலுவைக் கள்வன் ஞானஸ்நானம் பெற்றானா?

## *Was The Thief Baptized?*

*Keith parker*

ஞானஸ்நானம் தேவையில்லை. ஏனெனில், இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் இல்லாமல் சிலுவையில் தொங்கின கள்வனை இரட்சித்தார்.



**வாதிடுவோர்:**

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கள்ளன் அவரை நோக்கி ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான் [லுக்கா23:43]. அப்போது இயேசு கிறிஸ்து அக்கள்ளனிடம் ஞானஸ்நானத்தைப் பற்றி எதுவுமே பேசுவில்லை. அவர் அக்கள்ளனிடம் இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று வெளிப்படையாகச் சொன்னார். இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று வாதாடுபவர்கள் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் இல்லாமலேயே அந்த சிலுவைக் கள்ளனை இரட்சித்தாரே, எனவே, நாமும் ஞானஸ்நானம் இல்லாமல், இரட்சிக்கப்பட முடியும் என்று வாதிடுகிறார்கள்.

***பதில்***

ஞானஸ்நானம் இல்லாமல் அத்திருடன் இரட்சிக்கப் பட்டதற்கும், இன்றைய நாட்களில் இழந்து போனவர்கள் இரட்சிக்கப்படும் விதத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை. அத்திருடன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தான், மரித்தான். முதல் நூற்றாண்டிலிருந்து இன்று வரை இப்பூமியில் வாழ்பவர்கள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். புதிய ஏற்பாடு [உடன்படிக்கை] பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால் தான் இரட்சிக்கப்பட முடியுமென்று கட்டளையிடுகிறது. [அப்போஸ்தலர் 2:38; மாற்கு 16:16]. கிறிஸ்துவின் புதிய உடன் படிக்கை அவருடைய மரணத்திற்குப்பிறகு உயிரோடிருப்பவர்களைத் தான் கட்டுப்படுத்தும். ஏனென்றால், எங்கே மரண சாசனமுண்டோ அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்; எப்படியெனில் மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே [எபிரெயர்9:16,17].

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் அவர் கொடுத்த புதிய உடன்படிக்கை நடைமுறையில் இல்லை. அவருடைய மரணத்திற்குப் பிறகுதான் அவருடைய புதிய பிரமாணம் நடைமுறைக்கு வந்தது. இங்கே சிலுவையில் தொங்கிய கள்ளன் பழைய ஏற்பாட்டின் காலத்தில்தான் வாழ்ந்தான். எனவே, புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் அவனைக் கட்டுப்படுத்தவில்லை. அது மாத்திரமல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் இருந்தது. ஆனால், இன்று ஒருவர் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின்படி அந்த நபர் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தனது உண்மையான விசுவாசத்தை ஞானஸ்நானம் பெறுவதினால் வெளிப்படுத்தினாலொழிய இரட்சிக்கப்பட முடியாது; [அப்போஸ்தலர் 22:16;1பேதுரு 3:21;அப்2:38;மாற்கு16:16]. ✝

**நீங்கள் கவனியுங்கள்**


**நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள்** [லூக்கா 8:18]

**திறந்த மனதோடு கவனியுங்கள்** [1 தெச. 2:13]

**ஆராய்ந்து பார்க்கும் மனதோடு கவனியுங்கள்** [அப். 17:11]

**கீழ்ப்படியும் மனதுடன் கவனியுங்கள்** [அப். 22:16]

## சத்திய வழி



- ❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ❖ ரேடியோ : ஞாயிறு - வெள்ளி 5.30 p.m.
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்



- ❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- ❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ❖ ரேடியோ : 31 Meter Band (சனி மாலை 5.30 5.45)
Srilanka all Asia Service




<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---


## கிருபையுள்ள வார்த்தை



- ❖ பேச்சாளர் :சகோ. P.C. பிலேமோன் ராஜா
- ❖ தமிழன்/நம்பிக்கை :ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
- ❖ பைபிள் பாடங்கள் :அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- ❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:10 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.**

<u>தொடர்புக்கு</u>

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (TRACTS) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

**E.Z.S. ராஜநாயகம் : 98427 30382**
**P.R. சுவாமி : 098440 70763**
**P.C. பிலேமோன் ராஜா: 9244204420**
**B. அர்ஜுனன் : 994435 58041**

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

- ☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 [ **4** இதழ்கள் ] (அ) ரூ. 200 [ **8** இதழ்கள் ] க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

- ☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ....................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

- ☐ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

[இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்]

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**
"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்
**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**
**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**
**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ______________________________